ஸ்ரீயேசுசகாயம்.

# பிறர்சினேக

# வேதவிவேசனி.

இஃது

இராயபுரம்

சபை - அப்பாபிள்ளைமுதலியார்

குமாரரி லொருவரால

செய்யப்பட்டு

சென்னை, அதிமேற்றிராசனத்தின் சுதேசகுருக்களி

லொருவரால் பார்வையிடப்பட்டு

மேலோருத்தாரப்படி

[illegible]

[illegible]

ஆடை [illegible]

விக்டர் பிரசில்

அச்சடிக்கப்பட்டது.

*Permission Superiorum*

1891.

*Copy Right.*

*Price 6 annas, Postage 6 pice*

# விளம்பரம்.

இப்புத்தகம வேண்டுவோர் சென்னையைச்சார்ந்த இராயபுரம் மரியதாஸ்வீதியில் 31-வது நம்பர்வீட்டில் சபை, அ. துரைசாமிமுதலியாரிடத்திலும், பல்லாரியில் ரோமன்கத்தோலிக்கு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்து உபாத்தியாயா செ. ம. குருசு அவர்களிடத்திலும், மஹாவிகடதூதன் ஆபீஸிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்புத்தகத்தின் விலை அணா 6

தபால்கூலியோடு அணா 6¼

# பிழைதிருத்தம்.

விவரம்.—சில அசந்தர்ப்பத்தை முன்னிட்டு இப்புத்தகத்தில் அனேக அச்சுப் பிழைகள் நேரிட்டன. அவைகளில் ஒரே வகையானவை வெகுவாய் இரட்டித்திருப்பதால் இவ்வட்டவணை விரிவாகாதபடிக்கு அர்த்த பேதத்துக்கு எதுவானவைகளையும், விசேஷமாய்ப் பாடல்களி லுள்ளவைகளையும் மாத்திரம் இதில் குறித்திருக்கிறது. மற்றவைகளைக் கல்விக் கண்ணுடைய பெரியோர் காக்கும்படியாக அவர்களுடைய மேலானகனத்தைக் கோருகிறேன்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 25 | அஞ்ஞானிகளுக்கும் ... | அஞ்ஞானிகளும் |
| 2 | 2 | நாம் அவரைசினேகிக்கிறோமென்று ... | நாமும் அவரைசிநேகிக்கிறோமேயென்று |
| 3 | 28 | கண் ... | கண்ணனது |
| 6 | 1 | பம்பியச்சீர் ... | பம்பியசிர் |
| 6 | 4 | தெளிவாக வெகுவிருக்கிற | தெளிவாகவேயிருக்கிற் |
| 6 | 22 | சிருஜித்வாம் ... | சிருஜித்வாம |
| 7 | 1 | கமலையுற்றவளே ... | கமலையற்றவளே |
| 8 | 19 | வல்லியை ... | வலியை |
| 11 | 11 | மலர்வணுகிய ... | மலரவணுகிய |
| 11 | 22 | ஆலத்தை யுண்டவர்க்கு ... | ஆலத்தையுண்டவர்க்கோ |
| 11 | 24 | மால்கொள்ள ... | மால்கொள |
| 11 | 25 | இருநிதியோ ... | இருநதியோ |
| 11 | 27 | போஜன் ... | போஜ |
| 12 | 12 | சொனன் ... | சொன்ன |
| 12 | 11 | பெற்றிடுங் குந்தியிற் ... | பெற்றிடுமுந்தியிற் |
| 12 | 11 | வரிகடைகாற் ... | வரிக்கடைக்காற் |
| 12 | 13 | செற்றிடைச் ... | செற்றிடச் |
| 12 | 18 | பெரியவள் ... | பெரியவன் |
| 2 | 20 | மன்றி ... | மன்றித் |

| | | | |
|---|---|---|---|
| 12 | 27 | ஏர்த்தாகவும் | கர்த்தாவாகவும் |
| 14 | 13 | பூஷணமும் | பூஷணமணிந்த |
| 14 | 24 | மகளிறனைய | களிறனைய |
| 14 | 26 | கஞ்சன் தந்துகின் | கஞ்சனதந்துகின் |
| 15 | 4 | வெய்யதோவருக | வெய்யதோழருக |
| 15 | 14 | கட்டு | கட்டுண்டு |
| 15 | 14 | நரகக் | நாகக் |
| 15 | 15 | கொள்கமாங் | கொள்கலமாங் |
| 16 | 3 | கறைப்பட்டார் | கரைப்பட்டார் |
| 16 | 4 | ஃனசதாலே | தனத்தாலே |
| 16 | 5 | காரியும்பட்டார் | உரியும்பட்டார் |
| 16 | 7 | காலுதையும் | காலுதை |
| 17 | 10 | தேகமுள்ள | வேகமுள்ள |
| 17 | 11 | ரூகுபுதியால் | ரூகபுக்தியால் |
| 17 | 12 | ஞெழிவிலாசம் | ஞெழிவிலாதசம் |
| 17 | 26 | னென்றறான் | னென்றான் |
| 18 | 3 | பிரபந்தத்தின் | பாடலின் |
| 18 | 9 | கல்லாகவும் | கல்லாகச |
| 19 | 8 | சாபங்கொ | சாபஙகொண் |
| 19 | 9 | னந்தவித்திரனுங் | னந்தவிந்திரனுங் |
| 21 | 5 | ரில்காண் | ரில்லைகாண் |
| 21 | 9 | அச்சுதன்னிற்பனிலம் &c. | அச்சுத னளிப்பனில மதனை வாங்கி |
| 21 | 11 | நிலம் | வடம் |
| 21 | 12 | இளையவளை | இளையவனை |
| 22 | 1 | வயற்றில் | வயிற்றில் |
| 22 | 29 | துடக்கு முழுகிக்குளிக்கிறதை | நட்டகுபோக முழுகிக்குளிக்கிறதை |
| 23 | 6 | அவருக்கு | அவர்களுக்கு |
| 24 | 2 | கோமயங்களென்று | கௌவியங்களென்று |
| 24 | 29 | அதிதார | அதித |
| 24 | 31 | சொன்னார் | சொன்னாற் |
| 24 | 32 | சசமாகா | சயமாகா |
| 27 | 15 | தங்கள் | தாங்கள் |
| 29 | 7 | படைத்தாரோடி | படைத்தாரேடி |
| 30 | 7 | கிரேயுகத்துச்கு | கிரேதாயுகததுக்கு |
| 34 | 1 | இருக்குமாகில் | இருக்க |
| 35 | 29 | கோட்டைக்காரப் | கொட்டைக்காரப் |

| | | | |
|---|---|---|---|
| 36 | 28 | யோடலுங் | யோடலும் |
| 36 | 28 | தேகமுள்ள | வேகமுள்ள |
| 36 | 29 | ருகுபுத்தியால் | ருகபுத்தியால் |
| 37 | 25 | சேரப்பா | சேறப்பா |
| 38 | 30 | அலைகின்றரே | அலைகின்றதே |
| 40 | 27 | என்றோ | என்கிறோ |
| 41 | 28 | அஞ்ஞானிகளுக்கு | அஞ்ஞானிகளுஞ் |
| 43 | 28 | தேவோக்கியத்த | தேவோககித்த |
| 44 | 5 | நிச்சயிக்கிரார்கள் | நிச்சயிக்கிறார்கள் |
| 45 | 14 | விதைருவை | வினுருவை |
| 46 | 30 | லமிழ்ந்துப் | லமிழ்ந்திப் |
| 47 | 8 | அடவுடனே | அடைவுடனே |
| 48 | 8 | நாமா | நாமும் |
| 50 | 13 | அரு-78-46 | அருளப்-18-36 |
| 53 | 2 | அஷட் | அஷட |
| 53 | 22 | தறகும் காரணம் | தற்குக்காரணமும் |
| 59 | 16 | வேருகக் | வேர் ஆகக் |
| 59 | 28 | வுகமல | வுலகும் |
| 76 | 30 | வெள்ளாளரை | வேளாளரை |
| 77 | 8 | ஆருஷ் | ஆருஷய |
| 79 | 19 | தமண்டியங்காய் | திமண்டியங்காய் |
| 80 | 15 | நன்னிருதாளுள் | தன்னிருதாளுள் |

# பொருள் அட்டவணை.

பக்கம்

முகவுரை - நீ உன்னைப்போல உன் பிறத்தியானை சிநேகிப்பாயாக ... ... ... ... 1

ஒருமையும் ஒற்றுமையும் ஐக்கியமும் பிறர்சிநேகத்திலடங்கியிருக்கின்றது ... .. ... 5

பிர்மாவின் நடபடிக்கையினால் இவன்பிறர் சிநேகதேவனல்லவென்று தெரிந்துகொள்ளலாம் ... .. 7

விஷ்ணுவின் நடபடியினால் இவனும் பிறர்சிநேகதேவனல்லவென்றுணர்ந்துகொள்ளலாம் ... 13

சிவனின் நடக்கையால் இவனும் பிறர்சிநேகதேவனல்லவென்று கண்டுகொள்ளலாம் ... ... 15

தேவேந்திரன் நடபடியினால் இவனும் பிறர்சிநேகதேவனல்ல... ... ... ..

பிர்மா, விஷ்ணு, சிவன், தேவேந்திரன் முதலானவர்கள் நமமைப்போலொத்த மானிடராகவும், பெண்சாதிபிள்ளைகளுடையவராகவு மிருந்தாரகளென்பதின் பேரில் ... .. ... ... 20

இந்துமதம் வந்த வரலாறு .. .. 21

இந்துமதப் போதகர் பொய்யரும் புரட்டருமா யிருப்பதால் இவர்களிடத்தும் பிறர்சிநேக மில்லையென்று விளங்குகின்றது ... ... . 25

இந்து சாதியைப் பற்றிய வரலாறு . . ... 27

குலம்புகுந்தவர்கள் இந்துக்களல்லாமல் கிறிஸ்துவர்களல்ல வென்றும், கிறீஸ்துவர்கள் ஆதியில் கடவுளால் அருளப்பட்ட மெய்வேதத்தா ரென்றுங் காட்டி, இந்துக்கள் சொல்லுகிற உலகசிருஷ்டியின் அனுசாரத்தையுங் காட்டப்படும் ... .. 31

மகா வெட்கக்கேடுள்ள லிங்கம் அல்லது ஆண்குறியை வணங்குகிற இந்துமதஸ்தருக்கு என்ன பிறர்சிநேகமிருக்கும் ... . .. .. 36

மறுபிறப்பில்லை யென்று காட்டியது... 38
இந்துக்கள் எம்மதமாயினுஞ் சம்மதமென்று சொன
ஞலும் கிறீஸ்துவர்களைப் பகைக்கிறூர்கள். கந்
தோலிக்கர் சத்தியவேதந்தவிரப் புறமதங்களெல்லா
ம அபத்தமென்றும், அச்சத்திய மறையைக் கைக்
கொள்ளாதவர்களுக்கு இரட்சணியமில்லையென்றும்
உறுதியாக விசுவசித்துககொண்டு அஞ்ஞானிகளும்
சத்தியமறையி லுட்பட அனுதினமும் பிரார்த்தித்
து வருவதால் அவர்களை நேசிக்கிறூர்கள் ... 41
அஞ்ஞானிகள் பசாசின் மக்களாயிருக்கிறூர்க ளென்ப
தற்கு சில இந்துமத ஞானிகளின் மேற்கோளும் அ
வாகள் உலகத்தாரா யிருக்கிறூர்க ளென்பதற்குத் தி
ருஷ்டாந்தமும் ... ... ... 48
கிறீஸ்துவர்கள் அரசரா யிருக்கிறூர்க ளென்பதற்கும்
அவர்கள் கிறீஸ்துவர்க ளென்றழைக்கப்படுகிறத
ற்கும் காரணமும் காண்பிக்கப்படுவது ... 53
கிறீஸ்துவர்கள் வணங்கும் பிறர்சிநேகத்துக்கு ஊற்ற
ணியான மெய்யங்கடவுளைப் பற்றியது ... ... 58
கிறீஸ்துவர்கள் ஆராதிக்கிற ஏகதேவன் கிறீத்துவ
ரா யிருக்கிறூர் . ... . . 61
பிறர் சிநேகம் ... ... 67

சர்வேஸ்வராயநம:

# முகவுரை.

## "நீ உன்னைப்போல உன்பிரத்தியானை சிநேகிப்பாயாக"

## அர்ச்சியசிஷ்ட மாற்க் 12-அதி 31-ம் வசனம்.

---

தன்னைப்போற் பிறனைச்சிநேகிப்பதின்தாற்பரிய மேதெ
னில், நாம் நமதுமட்டில் எவ்வளவு சார்புடையவர்களாகவுங்
கவலையுங் கனிவுமுடையவர்களாகவுமிருக்கிறோமோ, அப்படி
யே நாம் நமதயலார்மட்டிலுமிருக்கவேண்டும். மேற்கூறிய கட்
டளையை கடவுள் ஒவ்வொருவருடைய மனதில் இயல்பாகவே
பதித்திருந்தாலும் அவரதை மீளவும் பகிரங்க கட்டளையாகவு
மிட்டிடுகிறார், ஏனெனில் நாம்யாவரும் கடவுளினுடைய சிரு
ஷ்டிகளாயிருக்கிறதினால் அவர்நமது தந்தையாகவும் நாம் அவ
ருடைய பிள்ளைகளாகவு மிருக்கிறோம், இதல்லாமலும் அவர்
தம்மை "எங்கள்பிதாவே" என் றழைக்கும்படி கட்டளை
யிடுகிறதினால் நாம்யாவரும் அவர்பிள்ளைகளாயிருக்கிறோமென்
பதற்குச்சந்தேகமில்லை, மேலும் இரண்டாமாளாகிய சுதனாகிய
சர்வேசுரன் மனிதரையிரட்சிக்க மனுவுருவெடுத்ததால் நாம்
யாவரும் அவருக்குசகோதிரராயிருக்கிறோம், ஏனெனில் என்
பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனெவனோ அவனே
என்சகோதிரனும் சகோதிரியுமென்றார், மனுமக்கள்பேரில் அ
வர்வைத்தசிநேகத்தினிமித்தம் மானிடரூப மெடுத்ததால் அவர்
நமக்குச் சகோதிரராயிருக்கிறபோது மானிடச்சொரூபமெடுத்
திருக்கிற யாவரும் அவருக்குச்சகோதிரர் என்பதற்குச்சந்தே
கமில்லை, இந்தச்சம்பந்தம் கிறிஸ்துவர்களாகிய நமக்கு விசே
ஷித்ததாயிருந்தாலும், அஞ்ஞானிகளுக்கும் சுவாமியுடைய சிரு
டிகளாயிருக்கிறதைப்பற்றி ஞானஸ்நான மென்கிற தேவத்திர
விய அனுமானத்தின் சத்தியால் அவர்களும் அதற்குப்பங்கா
ளிகளாவார்கள். அஞ்ஞானிகளும் விசேஷமாய்க் கிறீஸ்துவ

ர்கள்யாவரும் சர்வேசுரனுக்குச்சம்பந்தமுடையவர்களாயிருக்க, சர்வேசுரன் நம்மைசிநேகிக்கிறதினால் நாம் அவரை சிநேகிக்கிறோமென்று தன்னயலாராகிய சகோதிரரைச் சிநேகியாமற் போனவன். தன்கண்ணால்காணக்கூடாதகடவுளை எப்படி சிநேகிப்பான், என்று அர்ச் அருளப்பர்சொல்லுகிறதுபோல் கள்ளசினேகமுடையவனாவான், "நான் உங்களைசிநேகித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர்சிநேகியுங்கள்" என்னும் ஓர்புதியகட்டளையைச்சருவேஸ்வரன்தந்து இதனால் நீங்கள் என்சீஷர்களாயிருக்கிறீர்களென்று எல்லோருமறிந்துகொள்ளட்டும் என்று சொன்னதுமன்றி, இந்தச்சிநேகம் அவர்களுக்குள்ளிருக்கும்பொருட்டு அவர்தமதுபரமபிதாவைநோக்கி, "பிதாவே நீரென்னிலும் நானும்மிலுமிருக்கிறதுபோல எல்லோரும் ஒன்றித்திருக்கும்படிக்கும், அவர்களுக்காகமாத்திரமல்ல அவர்களுடைய வாக்கியத்தின் மூலமாக என்பேரில் விசுவாமாயிருப்பவர்களுக்காகவும்வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார், மேலும் நமதுசகோதிரர்மட்டில் சிநேகமில்லாமல் கொடுக்கிற காணிக்கையாகிய பலிசெப தபமுதலானதுகளையேற்றுக்கொள்ள மாட்டோமென்றுஞ்சொல்லுகிறார், ஆகையால் நாம்நமதயலாராகிய சகோதிரர்களைச்சிநேகிக்கக்கடனுடையவர்களாயிருக்கிறோம்.

இந்த அருமையானசிநேகம் விசேஷமாய்நமதுதேசத்தில் பாவக்கொடுமையினால் நாளாவட்டத்தில் குறைந்துபோனதினாலதான் நாம்நமதயலானை நீசமாகவும், குறைவாகவும் பாராட்டுகிறோம். இப்படிப்பாராட்டுகிறதற்குமுதற்காரணம் நமதுசுயபட்சமே. அச்சுயபட்சம் பாபத்தினிமித்தம் எல்லாமனோசக்திகளிலும் பரவிப்போனமையால் எல்லாத்தீமைகட்கும்முதற்காரணமா யிருக்கின்றது, இச்சுயபட்சத்தினாலல்லோ அந்த ஆதிமனுஷிகடவுளாலருளப்பட்ட ஒரேகற்பனையைமீறி விலக்கினகனியைத்தின்று தனக்குந்தன் சந்ததியாரனைவருக்குந் தீமையைக்கொண்டுவந்தாள், இச்சுயபட்சத்தினாலல்லோ காயினென்பவன் சரவேசுரனுக்குத்தன் விளைவின்முதற்பலனை ஆசை, பக்திப்பற்றுதலோடு காணிக்கையாகவைக்காமையினால்

அவன்காணிக்கையை சர்வேசுரன் ஏற்றுக்கொள்ளாமற்போக வும் அவன்தன் சகோதரனைக் கொலைசெய்யவும்நேரிட்டது, இச்சுயபட்சம் போனபோக்காக மனுக்குலத்தார் திரிந்ததினாலல்லோ உலகத்தில் சலப்பிரளயம்வந்து சிலர்தவிர எல்லாமானிடரையும் நாசமாக்கிப்போட்டது, இச்சுயபட்சமல்லோ ஒரேகுடும்பமும் ஒரேஐக்கியமும் ஒரேசிநேகமுமாயிருந்தமனுக்குலம் தங்கள்பேருங்கீர்த்தியும்பரம்பும்படி பாபிலோன்கோபுரத்தைகட்டித்தேவகோபத்தால் பாஷைபிரிந்து பற்பலதிசைக்குச்செல்ல நேரிட்டது, இச்சுயபட்சமல்லோ பூர்வம் ஒரேமதஸ்தராகவும் ஒரேசாதியாராகவுமிருந்த இத்தேசத்தாரை பல பல மதஸ்தராகவும் பல சாதியாராகவுமாக்கிவிட்டது. ஒரே ஐக்கியமாகவும் செல்வநாடாகவுமிருந்த அவர்களை சாதியேற்பாடு நூற்றுக்கணக்கான பிரிவாக்கிப் போட்டதினால் ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரைக்குறைவாகப்பாராட்டுவதும்எண்ணுவதுமல்லாமல் அவர்களுக்குள் பகையும் வர்மமும் சதியும் அதிகரிக்கவே இதரதேசத்தார் இத்தேசத்தார்மீது இலேசாகப்படையெடுத்துவந்து தேசத்திலுள்ள திரவியங்களை நாளாவட்டத்தில் கொள்ளைகொண்டுபோய்த் தேசத்தைத்தரித்திரகோலமாக்கிப் போட்டார்கள், இதற்குவிரோதமாக நமது தேசத்தில்பிரர்சிநேகமிருக்குமானால் ஒருவர் ஒருவரைப்பகையாமல் ஒரேசரீரத்தில் அநேக உறுப்புகளிருந்தும் அது, அது, தன் தன் தொழிலைச்செய்யும்போது ஒன்றுக்கொன்றுகுறைவாக எண்ணாமலும் பெருமைபாராட்டாமலும் எல்லாம் அவசரமானதென்றுணர்ந்து கொள்ளுகிறதுபோல அவர்களும் தங்களுக்குள் ஐக்கியமாயிருப்பார்கள். அதெப்படியெனில் கண்ணின்பிரயோசனமும்,கையின்பிரயோசனமும் காலின்பிரயோசனமும் ஒவ்வொன்றில்வித்தியாசப்பட்டிருந்தும் அவைகள்யாவும் அவசரமானவைகளாயிருப்பதினால் ஒன்றையொன்று தாழ்வாகப் பாராட்டுகிறதில்லை, கண். கை, கால்களைநோக்கி உங்கள்தொழில் எனக்கவசரமில்லை என்றுசொல்லஎதுவுமில்லை, கண்தன்பார்வையினால் யாதொருஅலங்காரத்தைக்கண்டு களிப்படைகிறபோதும், நாவுயா

தொருஉணவையுண்டு அதின்சுவையையனுபவிக்கும்போதும், காதுகீதவாத்தியங்களைக்கேட்டுச்சந்துஷ்டி அடையும்போதும், மற்ற அவயவங்களதற்குக்காய்மகாரப்படாமல்கூட இன்பமடைகின்றன, கால்தான்தாழ்ந்தஇடத்திலிருக்கிறதென்றும் சரீரத்தின பளுவையெல்லாம் சுமந்துகொண்டிருக்கிறதென்றும் முறைப்படுகிறதில்லை, அசுத்தஇடத்தில் கட்டாயமாகநடக்க நேரிடுகிறபோது வருத்தப்படாமல் உற்சாகத்தோடுதன்தொழில்களை நடத்துகிறதுபோலகையும் அவசரத்துக்குத்தக்கபடிதன்தொழில்களை நடத்துகின்றது. இதுவன்றி ஒருஅவயவம் யாதொருதுன்பம் அனுபவிக்கிறபோது மற்றஅவயவங்களும் கூட அத்துன்பத்துக்குப் பங்காளிகளாயிருக்கின்றது மன்றி அத்துன்பத்தைநீக்க எல்லா அவயவங்களுங்கூட பிரயாசப்படுகின்றன, அதெப்படியெனில், காலில் ஓர்முள்தைத்தமாத்திரத்தில் கண்அந்தமுள் எங்கிருக்கிறதென்றுசோதிக்கிறது, நாவு இந்தஇடத்திலதைத்ததென்று சொல்லுகிறது, கைஅதைப்பிடுஙகுகிறது இப்படியே அவயவங்களெல்லாம் காலுக்குதவிசெய்கிறதல்லாமல் கால்தாழ்ந்த அந்தஸ்திலிருக்கிறதென்று உதவிசெய்யாமல் இகழ்ந்து தள்ளுகிறதில்லை, இதைப்போலவே, நாமும் பிரத்தியாரைச்சிநேகிக்கவேண்டும், இக்கட்டளையை கொடுத்தபரமநாதனும் அப்படியே சிநேகித்தார், அப்படியேசிநேகிக்கும்படி "நானுங்களைச்சிநேகித்ததுபோல நீங்கள் ஒருவரை ஒருவர் சிநேகியுங்க" ளென்றார், இச்சிநேகம் சத்தியவேதத்திலும் சத்தியவேத உத்தமகிறீஸ்துவர்களிடத்துமிருக்கிறதா ? அல்லது பிரமதத்திலும் அதைச்சேர்ந்தவர்களிடத்திலுமிருக்கிறதாவென்று சற்றுயோசித்துப்பார்ப்போம்.

நெற்கதிரில் அநேகம்நெல்மணிகளும்பதர்களுங்கலந்திருப்பதுபோல, அகரம்என்னும் எழுத்தையுச்சரிகக முதலாய் நாவெழாதவனாகியநான், எழுதிய இச்சிறுபிரதியில் அநேகவழுக்களிருக்குமென்பதுதப்பாது. ஆயினுங் கற்றறிந்த பெரியோர்கள் இதிலிருக்கும் பிழைகளை நீக்கிப்பொருளைமாத்திரம் எற்றுககொள்ளும்படி தாழ்மையோடு பிரார்திக்கிறேன். " எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

முகவுரை முற்றும்.

## முதற்பிரிவு.

### ஒருமையும் ஒற்றுமையும் ஐக்கியமும் பிரார்சிநேகத்திலடங்கி இருக்கின்றது.

நமது தேசத்தாருக்கு ஒருமையில்லையென்றும், ஒற்றுமையில்லையென்றும், ஐக்கியமில்லையென்றும் ஒவ்வொரு சமாசாரபத்திரிகையும் முறையிடுகிறதைப் பார்த்துவருகிறோம், இந்த ஒருமையும் ஒற்றுமையும், ஐக்கியமும் இத்தேசத்தாருக்கு எப்படியிருக்கும்? இருக்கநியாயமில்லையே எனெனில், இத்தேசத்தாராகிய இந்துமதஸ்தருக்கு ஒருதெய்வமில்லாமல் பலதெய்வங்களிருக்கிறதினலும் அந்தந்தத்தெய்வங்களும் ஒற்றுமையின்றிச்சண்டைசச்சரவிட்டு ஒன்றுமற்றொன்றையெதிர்த்துப்போர்செய்ததினலும், அந்தவேதத்தைப்போதிக்கும் வேதியர்கள் தங்கள் தெய்வத்தைப்போலத் தங்கள், தங்களிஷ்டப்படிகுருட்டாட்டங்களைப் போதித்து துஷ்டராகவும்பாபிஷ்டராகவு மிருப்பதுபோல அம்மதத்தைப்பின் செல்லுகிறவர்களும் அவர்களைப்போல பலசாதிகளாகப் பிரிந்திருக்கிறதினலும் அவர்களுக்கு ஒருமை ஒற்றுமை ஐக்கியமிருக்க நியாயமில்லை. இதை இதனடியில் சுருக்கமாக ரூபிகரிக்கிறேன்.

(1வது.) பிர்மாதெய்வமென்றும், விஷ்ணுதெய்வமென்றும் சிவன்தெய்வமென்றும், சத்திதெய்வமென்றும், இந்திரன்தெய்வமென்றும், இவ்வாறாக அனேகரைத்தெய்வங்களாகப் பூசித்துவருவதினல் இவர்கள்யாவரும் தெய்வங்களல்லவென்று இந்துக்கள் புராணங்களைக்கொண்டு தெளிவாய்க்காண்பிப்பதல்லாமல் அவர்கள் நடத்தையைக்கொண்டும் அவர்கள்தெய்வங்களல்லவென்றும், துஷ்ட மானிடரென்றுங் காட்டப்படும், அதெப்படியெனில்.

அம்புவியுமாருதமும்புனலுந்தீயும்
ஆகாயப்பரப்பும் பேரண்டந்தானும்
உம்பரும்போய்மாண்டிறந்தகாலந்தன்னில்
ஒவ்குமரி ஒருவனுமேயுளனாய்நின்றான்

பம்பியச்சீர்புனைந்திடு மவ்வரியினுயிப்
பங்கயத்தினன்முகனுற் பவித்தானந்தச்
செம்பதுமத்தான்பெற்றான் சிவனையன்று
தெளிவாகவெகுவிருக்கிற் செப்புமன்றே.

(இ-ள்.) சகலமும் மாண்டுபோனகாலத்தின் முடிவிலே விஷ்ணுமாத்திர மீந்தவனுயிருந்து அவனுடைய உந்தியினின்று பிர்மாபிறந்து சிவனைப்பெற்றானென்று இருக்குவேதத்திலே சொல்லியிருக்கிறது, இதனால்பிரமாவிஷ்ணுவின் மகனுயிற்று.

(2-வது) பிர்மாவின்தகப்பனுகிய விஷ்ணு அனுதிதேவனல்லவென்பதற்குப் பிரமாணம்.

ஆதிசக்திமயம்பீஜம், பீஜசத்திமயம்சிவஹ, சிவசக்திமயம்விஷ்ணு, சர்வம்விஷ்ணுமயம், ஜகத்.

(இ-ள்.) ஆதிசக்தியிலிருந்து ஒருபீஜம்பிறந்து அந்தபீஜத்தின் வல்லமையினுலே சிவன்பிறந்து, சிவனிடத்திலிருந்து விஷ்ணுபிறந்தானென்றுஞ் சொல்லியிருக்கிறது, இதனால் விஷ்ணுவுக்குச்சிவன்தகப்பனும், சிவனுக்கு ஆதிசக்திதாயுமாயிருககிறுளென்பதாயிற்று.

(3-வது) சிவன் அனுதிதேவனல்லவென்பதற்கு பிரமாணம். மச்சப்புராணத்திலே பிரமாவிலிருந்து சிவன்தோன்றினுனென்றிருக்கிறது.

சுலோகம்.

ததோசிருஜித்வாம், தேவம்திரிபுண்டிறவரதாரிணம்.

(இ-ள்.) பிர்மதிரிபுண்டரியென்கிறவாமதேவனை (சிவனை) உண்டாக்கினுனென்பதாம்.

பிர்மா, விஷ்ணு, சிவன், இம்மூவரையும் உமையாள் பெற்றபிள்ளைகளென்பதற்குப் பிரமாணம்.

பெரியபுராணம்.

" சுடரொளிமதியும்விண்ணும் மண்ணுமேதோன்றுமுன்னம், மடமயிலுமையாள்பெற்ற மலரவனடியோன்றேவன்"

மும்மூர்த்திகளின்தாயாகிய உமையாள் அனுதிவஸ்துவல்லவென்பதற்குப் பிரமாணம்.

சவுந்தலகரியில்.

கலைமகளும் பொதுமடந்தை கமலையுற்றவளே
மலைமகணீகற்புடைய வனிதையெனப்பகருங்
குலமறைகளெதிர்கொடுநிற் குரவனையுமணையா
முலைகுழையப்புணர்வதுநின் முதல்வரலதிலையால்

(இ-ள்.) சரஸ்வதியும் லட்சுமியும் இவர்கள் இரண்டுபேரும் பரஸ்திரீகளென்றும், மலையத்துவசப்பாண்டியன் வயிற்றிலே பிறந்த மும்முலையுடையவளாகிய சக்தியென்பவளே கற்புடையவளென்றும் வேதஞ் சொல்லுகிறதாம்.

தெய்வம் ஒன்றேயன்றி அனேகமிருக்கக்கூடாதென்றும், அத்தெய்வம் அரூபியென்றும், அவர் ஒருவராலும் சிருஷ்டிக்கப்படக்கூடாதவரென்றும், எங்கும் வியாபித்திருக்கிறவரென்றும், எல்லாத்துக்கும் சிருஷ்டிகர்த்தா அவரேஎன்றும் எல்லா நன்மைக்கும் ஊறணியென்றும் இவ்வாறாக எத்தேசத்தாரும் இந்துமதஸ்தருஞ்சொன்னாலும் கடைசியாக மதிமயங்கி மேற்கூறியவர்களையெல்லாம் இந்துக்களுடைய வேதத்தில் தெய்வங்களாகப் பாவிக்கிறதுபோல இந்துமதஸ்தரும் அவர்களைத் தங்கள் புத்திக்குவிரோதமாகத் தெய்வங்களாக வணங்குகிறபடியால் அவர்களிடத்தில் ஒற்றுமையும் ஐக்கியமுமிருக்க நியாயமில்லை.

## பிர்மாவின் நடபடிக்கையினால் இவன் பிரசிநேகதேவனல்லவென்று தெரிந்துக்கொள்ளலாம்.

---

பிர்மாவாகிய சிருஷ்டிகர்த்தா திலோர்த்தமை யென்பவளைப்புணரத் தொடருகையில் இவள்தன்தகப்பனை யெப்படி புணருகிறதென்று ஓடிப்போய் ஒளிந்துகொண்டபோது, பிர்மாநாலுமுகங்களையும் பெற்றுக்கொண்டு நாலுதிக்கிலுந்தேடி கண்டுபிடித்து அவள் கிட்டநெருங்கினான், அவள்தேவேந்திரனுடைய கோட்டைக்குட்புகுந்தாள். பிர்மாவுங்கூடத்தொடருகையில் சேவகர்கோட்டை வாசலைச்சாற்றினார்கள், இவனுடைய அதிகமோகத்தால் மோகஜலங் கீழேவிழ அதிலிருந்து அக

ஸ்தியர் பிறந்தாராம், இதைத்தேவர் விளக்கத்திலும், கந்தப் புராணம், மார்க்கண்டபடலம் 12-ம். பாட்டிலும், அருணாசலப் புராணம் பாவந்தீர்த்தசருக்கம் 12,13,14-ம் பாடல்களிலுங் காணலாம்.

கந்தபுராணம் மார்க்கண்டப்படலம் 12-ம் பாட்டு.

"கூன்முகத்திங்கணெற்றிக் கோதையர்க்குழுவுக்கெல்லாந்
தான்முதலிறைவியாகத் தன்கையாற்சமைக்கத்தக்க
மான்முகநோக்குமுன்னர் மலரயன்மையலாகி
நான்முகமானனென்ப நாமுணராததன்றே"

(எ-து.) ஸ்திரிகளுக்கெல்லா முதன்மையா யிருக்கும்படி திலோர்த்தமையென்ற ஸ்திரியை, பிர்மாஉண்டாக்கி அவளை யிச்சித்ததினல் இக்கெட்ட இச்சைக்கு அவள்சம்மதியாமல் நாலுதிக்கிலும் ஓடிமறைந்தாள். அவளைக்கண்டுபிடிக்க பிர்மா நாலுமுகங்களையுங் கொண்டானென்று இப்பாடலால் விளங்குகிறது.

அருணாசலப்புராணம், பாவந்தீர்த்தசருக்கம் 12,13,14-ம் பாடல்கள்.

"வகுத்தனன் திலோர்த்தமையென்னும் வஞ்சியை
உகுத்தனன் வல்லியை நன்மதியையோட்டினன்
மிகுத்ததோர்விஞ்சையிற் புலியின்வேட்டுவன்
அகத்துட லழித்துட லளிப்பதென்னவே". 12

"மன்மதன்கணையினன் மயங்கிவாடுமென்
தன்மையையறிந்துநான் றனக்குத்தாதையென்
றென்மனம் பொருந்திலாதெனது கையுருள்
முன்பினிளொளிக்க நான் முகமுந்தேடினேன்" 13

கன்னி மானகச்சென்றாள் கலையதாய்தொடர்ந்தேன்பே [ட்டு
வன்னியாய்ப்பறந்தாள் சேவல்வடிவமாய்த் தோடர்ந்தே [ன்மங்கை

*பின்னையோர்பதியுங்காணுள் பிறங்கலாமருணைநாதன*
*தன்னையேதூரக்கண்டாள் சரணமென்றுரைத்துச் சார்ந்*
*[தாள்.*

எ-து. பிர்மா, திலோர்த்தமை யென்றபெண்ணை உண்டாக்கி அவளைமோகித்ததினுல் தன்புத்தியை போக்கடித்ததாகவும், தன்கெட்டஇச்சைக்கு மகள்சம்மதியாமல் ஒடிஒளிக்க நாலுமுகங்களைகொண்டு தேடிக்கண்டபொழுது அவள் ஒரு பெண்மாணுகிஓட இவன் ஒரு ஆண்மாணுகித் தொடர்ந்தோடியும் அவள்பெண்கிளியாகிப்பறக்க இவன்ஆண்கிளியாகிப்பறந்து தொடர்ந்தோடியும் அவள்தப்பித்துக்கொள்ள வழியில்லாமல் அருணுசலமேகதியென்று சரணமடைந்து தப்பித்துக்கொண்டாளாம்.

(2-வது) பிர்மாவுக்கும் ருத்திரனுக்கும் 5 தலைகளிருக்குந் தன்மையால் பார்வதிகுறிப்புதெரியாமல் பிர்மாவினிடத்துவந்தாள். ருத்திரன் அவளைப்பார்த்து [illegible]திலில்லாமல் பிர்மாவினிடத்திலிருப்பது ஞாயமோவெனறதற்கு இருவருக்கும் 5-சிரசு இருப்பதால் எனக்கு குறிப்புதெரியவில்லையென்றுள். அப்போது ருத்திரன் பிர்மாவின் ஒருதலையை வெட்டிப் போட்டானென்பதை (அருணகிரிஅந்தாதியில்காணலாம்).

வேறுவெண்பா.

*அஞ்செழுத்தையோதுவார்க் கஞ்சியவர்தலையிற்*
*றுஞ்செழுத்தைக் கஞ்சன்றுடைப்பனே—அஞ்சுதலை*
*சொண்டறுத்தநாளாய்ச் சொறுகுறையாய்நின்றதலை*
*யின்றறுப்பான் சோணேசனென்று.*

எ-து. யாதாமொருவன் ருத்திரனுக்கு அடிமைப்பட்டு அவனைத்தொழுதால் பிர்மா அவனுக்கு சேதஞ்செய்யமாட்டானும். ஏனெனில் பிர்மாவின்ஒருதலையை ருத்திரன்வெட்டிப் போட்டமையால் இன்னும் மற்றதலைகளையும் சேதம் பண்ணிபோடுவாரென்கிற பயத்தினுலாம்.

பேரின்பமணிமாலையில் ஓர்விருத்தம்.

ஐங்கரன்றலையிழக்க அரி வனந்தன்னிற்போகச்
சங்கரன் பிச்சையேற்கச் சதுர்முகனெழுதினானோ
அங்கவனெழுதினல்மற் றவன்றலையற்றுப்போக
இங்கெவனெழுதினான் கொலிதுவெல்லாமையந்தானே

(3-வது) பிர்மாவும் விஷ்ணுவும் நீபெரியவன் நான்பெரியவனென்று இருவரும் சண்டைசெய்கிறதினால் இதுகடையுககாலமென்று பயந்து நடுநடுங்கி தேவேந்திரன் முதலானவர்கள் சிவனிடத்தில் அபயசத்தமிட இதைக்கேட்டசிவன் சகலலோகங்களும் உருவிப்போக ஓர் அக்கினிமலையானான். அப்பொழுது பிர்மாவும் விஷ்ணுவும் நாமிருவரும் இப்படி யுத்தஞ்செய்வானேன், அந்தமலையின் அடியையும் முடியையுந்தேடி முந்திக்கண்டுபிடிக்கிறவன்யாரோ அவனேபெரியதேவன் என்று தீர்ம[illegible] [illegible]கொண்டு பிர்மா அன்னப்பட்சியாக மாறி அந்தமலையி[illegible] முடியை[illegible], விஷ்ணு பன்றியாகமாறி அமமலையின் அடியையுங்கண்டுபிடியாமலிருந்தும், பிர்மா, மாத்திரம் நான்கண்டுபிடித்தேனென்று பொய்சொன்னான். அதற்குத தாழம்பூவும் ஆமென்றபோது அந்த அக்கினிமலையினின்று சிவன் புறப்பட்டுப்பொய்சொன்னபிர்மாவையும் தாழம்பூவையும் சபித்தானென்றும் அந்தஅக்கினிமலையே திருவண்ணாமலையாசசுதென்றும் அருணாசலபுராணந் திருமலைச்சருக்கத்தில் 41-முதல் 70-ம் பாடல்வரையிலுங் காணலாம். பிர்மா பொய்சொன்னதைக்குறித்து 2-பாடல்களை மாத்திர மிங்கெடுத்துக்காட்டுவோம்.

சீதராகேட்டியென்வரவின் செய்கையைக்
காதநூறாயிரங்கணத்திலேகடந்
தாதியான் முடியறிந்தனனுகினேனென
ஓதினான்கேதகையுள்ளதென்றதே. (63-ம்பாடல்)

எ-து. சீதரா, மகாவிஷ்ணுவே! நான்நூறாயிரங்காதம் ஒரு க்ஷணத்திலே பறந்துபோய் ஆதியானகிய அக்கினிமலையின்

முடியைக்கண்டு வந்தேனென்றுசொல்லத்தாழம்பூவும் உள்ள தென்று சாட்சியுஞ்சொன்னதாம்.

இந்தபொய்க்காகச்சிவன் பிர்மாவைச் சபித்ததற்கு பாடல்.

ஆசையாலுருகு மவ்வரிதனன்புகண்
டீசனும்பலவரமினிதுநல்கினன்
வாசமாமலர்வர வுனக்குமண்ணின்மேற்
பூசையுங்கோவிலும் போகவென்றனன்.

எ-து. ஆசையால் உருகித்தொழப்பட்ட மகாவிஷ்ணுவைப்பார்த்து அவருடைய அன்புகண்டு பரமேசுரன் பலவரங்களை அருளிச்செய்தார். வாசமாமலர்வனுகிய பிர்மதேவனைப் பார்த்து உனக்குலோகத்திலே பூசையுங் கோவிலுமில்லாமற் போகக்கடவதென்று சாபமிட்டானும்.

(4-வது) பிர்மா சிருஷ்டிகர்த்தாவாயிருந்துந் தன்பெண் சாதியாகிய சரஸ்வதியால் தனக்கு அவமானம் நேராதபடிக்கு அவளைத் தன்நாவில் வைத்துக்கொண்டான். அப்படியிருந்துந் துற்கந்தமாரிஷிஅவளைப்பலவந்தமாய்க்கூடியதால்இவள் அந்தரிஷியை ஊமையாயிருக்கும்படி சபித்தாள். ஆனது பற்றி அவருக்கு மௌனரிஷியென்று பெயர். இதைப்பலபாடலிலேயுங், காசிகாண்டத்திலேயுங் காணலாம்.

இதைப்பற்றிய ஓர்செய்யுள்.

மாலுக்கு மாரளவாய், மலரோனுக்கு வாயளவாய்
ஆலத்தையுண்டவர்க்கு ஒருபாதியிலானதுவே.
வேறொருகலித்துறையில் சொல்லியிருக்கிறதாவது.

ஒருபாதிமால்கொள்ள மற்றொருபாதி உமையவள்கொண்
டிருபாதியாக விறந்தான் புராரியிருகிதியோ
பெருவாரிதியிற் பிறைவாணிற் சர்ப்பம்பிலம்புகுந்த
தருவாகும்போஜன் கொடையுன்கை ஓடெண்கை தந்த
[னனே.

5. பிர்மா, விஷ்ணு, சிவன், இம்மூவரும் பராசக்தியானிடத்தில் பிறந்து இம்மூவரும் அவளைப் பெண்ஜாதியாக ஆண்டார்களென்று திருமந்திரத்தில் காணலாம்.

இதைப்பற்றிய வெண்பா,

தாயாய் முலைகொடுத்தாள் தாரமாய்ப் பெண்டிருந்தாள்,
மாயாச்சுரூபவடி வானாள் - ஓயாமற்
பெண்ணங்கு மானாள் பிறவாமுடியானாள்
எண்ணங்குமானாளிவள்.

மேலும் ஓர் கலித்துறையுமுண்டு.

சிற்றிடைக்கொல்கி துடங்குந்திரு வயிற்றொளொருத் தி
பெற்றிடுங் குந்தியிற் பிள்ளைகண்மூவ ரம் மூவரையு ங்,
கற்றிடச் சொனன் தொழிலொருமூன்று வரிகளைடகா ற்
செற்றிடைச்சொன் னவள்பிள்ளைக்கவளம்மைத் தேவியுமே.

மேற்கூறிய பாடல்களினால் நாம் தெரிந்துக்கொள்வதென்னவெனில் பிர்மா சிருஷ்டிகனாயிருந்தால் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட திலோர்த்தமை யென்றவளை யிச்சிப்பானா? சிவனால் வெட்டப்பட்ட ஓர்தலையை சிருஷ்டித்துக்கொள்ளக்கூடாமலும், பிர்மாவும் விஷ்ணுவும் நீ பெரியவள் நான் பெரியவனென்று இருவரும் போர்பொருதுவார்களோ? மேலும் பஞ்சபாதகங்களிலொன்றாகிய பொய்யைத்தான் சொன்னதுமன்றி தாழம் பூவையும் அழைத்து சாட்சியிடுவானா? இப்பொய்க்காக பூசையுங் கோவிலுமில்லாமற்போகச் சாபமடைவானோ? துர்க்கந்தமாரிஷியால் தன் பெண்சாதிக்கு அவமானம் வரும்படி விட்டிருக்கவும் தன்தாயாகிய பராசக்தியையே பெண்சாதியாகக்கொண்டிருப்பானோ? ஐயோ இப்படிப்பட்ட துற்குணமும் பலயீனமுமுடைய பாதகனை இந்துக்கள் தெய்வமாகவும் சிருஷ்டிகர்த்தாகவுங் கொண்டாடினால் அவர்களிடத்தில் ஒற்றுமையும் ஐக்கியமுமிருக்கக்கூடாதுதான். ஆனால் அந்த சிநேகமும் ஐக்கியமும் வேறேயாருக்கு இருக்குமோவெனில் மெய்யங் கடவுளை வணங்கும் உத்தமக் கிறிஸ்துவர்களுக்கு மாத்திர மிருக்குமேயன்றி வேறொருவருக்கு மிருக்கவே மாட்டாதென்றறிக—இதைப்பற்றிபின்னால் தெளிவாய்க்காட்டப்படும்.

## விஷ்ணுவின் நடபடியினால் இவனும் பிரசிநேகதேவன ல்லவென்றுணர்ந்து கொள்ளலாம்.

1. விஷ்ணுமாடுகளை மலையடிவாரத்தில்மேய்க்கையில் காளங்கியென்கிற சாப்பம் காளங்கி நதியண்டையில் நாகக்கன்னிகளைவைத்திருந்ததைக்கண்டு அந்தச்சர்ப்பத்தைக்கொன்று அந்தக்கன்னிகளைக் கற்பழித்த பிறகு கலியாணஞ்செய்துகொண்டானென்று கஞ்சன்கதையில்காணலாம்.

2. கிருஷ்ணனாகிய விஷ்ணு ஆயர்பாடியில் வீட்டுக்கு ஒரு பெண்ணாகப்ப தினாயிரம் பெண்களை யெடுத்துக்கொண்டதுமன்றி அவர்களெல்லோருந் தங்கள் புருஷன்மாருக்கே பெண்சாதியென்று எண்பிக்கும்படியான மாயலீலைகளையுஞ்செய்தான் கஞ்சன் அம்மனாரிலும் பாகவதம் 10-வது ஸ்கந்தம் கோபியரைப்புணர்ந்த அத்தியாயத்திலுங்காணலாம்.

பாகவதம் 10-வது ஸ்கந்தம் கோபியரைப்புணர்ந்த
அத்தியாயத்தில்.

பொங்கினர்காவுதோறும் புதுமணல் குன்றுதோறும் [கு
பங்கயச்செங்கண்மாயன் பானிலாப்பயன்கொண்டோங்
கங்கையந்திரை வாயுற்ற கனியிளவன்னம் போலும
கொங்கவிழ்கோதைமாதர் குழாத்தொடுமொடினானே.

எ - து. அன்னத்தைப் போலிருக்கின்ற ஸ்திரிகளுடைய கூட்டத்தோடே கிருஷ்ணன் சோலைகள்தோறும் குனறுகள் தோறும்போய் விளையாடினான் என்பதாம்.

ஷை புராணம் சங்குரூடனைக்கொன்ற அத்தியாயம்
15-ம் பாடல்.

மேயதோகையிளமென்மயிலன
சாயலார் முலைதழீஇ விளையாடிப்பின்
மாயன்வைகறையில் வண்டுளர்தண்டார்
ஆயர் பாடியிலடைந்தனன் மன்னோ.

எ - து. இளமயிலுக்கொத்த சாயலுள்ள கோபிகாஸ்திரீகளுடைய ஸ்தனங்களைத்தழுவி விளையாடிக்கொண்டிருந்து ஆயர்பாடியில் வந்து சேர்ந்தான். என்பதாம்.

## 3-விஷ்ணுக்கஞ்சனிடத்தில் சந்தனம் அரைக்கிற கூனியென்றபெண்ணைப் புணர்ந்தான், பாகவதம் உத்தவரைக் கோகுலத்தில் விடுத்த அத்தியாயம்.

வெள்ளிவெண்முலையம் மெல்லினர் துன்றுவிரைக்கோதை
கள்ளவிழோதியரிற்றொறும்வெண்ணெய்கவர்ந்துண்டோன்
அள்ளிலைவேல் விழியார முதம் புரையஞ்சாயல்
ஒள்ளிழைபச்சிளவேய்புரை தோணலமுண்டானே.

எ - து. கோபிகாஸ்திரீகளினுடைய வீடுகளிலெல்லாம் வெண்ணைத்திருடிச் சாப்பிட்ட கிருஷ்ணன் அழகும் பூஷணமும் தோள்களையுமுடைய கூனியென்கிற பெண்ணோடே புணர்ச்சிசெய்தான் - என்பதாம்.

4. கிருஷ்ணன்வீதியிற்போகும்பொழுதுகஞ்சனுடைய வஸ்திரங்களைச்சலவைசெய்து வருகிறவண்ணானைக்கண்டு வஸ்திரங்களைகொடுவென, அவன் மலையிலுங்காட்டிலும் வாழ்கிறவர்கள் உடுத்தும் வஸ்திரம் இதல்லவே என, அதைக்கேட்டு கிருஷ்ணன் கோபமூண்டு வண்ணானைக்கொன்று வஸ்திரங்களையெல்லாமெடுத்துத் தானும்உடுத்திக்கொண்டுதன்னோடுவந்த சிநேகிதர்களுக்குங்கொடுத்தான். இதைப்பற்றிபாகவதம் 10-வது ஸ்கந்தம் மதுரை கண்டஅத்தியாயம் 17-18-19-ம் பாடல்களில் காணலாம்.

மழைமதம் பொழிமத மகளிறனையவம்மாயன்
நிழலும்வெண்மதி நெற்றிதோய்மாட நீண்மறுகில்
அழலும்வேற்படைக் கஞ்சன்றந்துகின்மாசு
கழுவுவான்றனைக் கண்டனன் கலைதருகென்றான்.

பொன்னுந்தூசணி புரவலன் புகன்றமைகேட்டு
மன்னுகானினு மலையினும் வாழ்பவருடுப்ப
தின்னபூந்துகிலன்று கொலென்னலுமவன்றன்
சென்னிசிந்தினன் செம்முகத்திகிரியஞ்செல்வன்.

கையினலவன் கருந்தலைதுணித்தபின் கமழும்
செய்யதாமரைகருமுகில் பூத்தெனத்திகழ்வோன்
ஐயபூந்துகிலொன்றிலா தவ்வழியனைத்தும்
வெய்யதோ வுருக்குதவினன் விடையெனநடந்தான்.

5. விஷ்ணு, ராவண சங்காரமுடித்துத் திரும்புகையில் தான் வெகுசனங்களைக்கொன்ற பாவந்தீர ராமேசுரத்தில் வந்து அனுமாரையழைத்து நாம் பூசைசெய்யக் காசிக்குப்போய் ஓர் லிங்கம்கொண்டுவரச்சொல்ல அதற்கு அனுமார் மூன்றேமுக்கால்நாழிகையில் வருகிறேனென்று அவ்விடம் போய்வருமுந்தி இராமன் மணலைக்குவித்து பூசைபண்ணினன். அது லிங்கமாயிற்றும், அதினல் அந்த விடத்துக்கு இராமலிங்கமென்று பேராயிற்றென்று ராமாயணத்தில் காணலாம்.

மகாபாரதத்தில்சொல்லிய ஓர்விருத்தம்.

முடையெடுத்து நவநீதத்தோடுண்டுகெட்டு முன்னுள்நரகக்
குடையெடுத்து மழைதடுத்த வஞ்சனைக்கோர் கொள்கமாங
கொடிய பாவி,
படை யெடுத்துப் போர் செய்யேனென வுரைத்தமொழி
தப்பி பகைத்தப்போரில்,
இடையடுத்தநேமியினல் வெயில்மறைத்தா னின்னமிவனென
செய்வானே.

விஷ்ணு, இரட்சிக்கிறவனென்று இந்துக்கள் வாய்கூசாமல் சொல்லுகிறதற்கு என்னநியாயத்தைக் கண்டார்களோ அறிகிலேம்—மேற்கூறிய ஐந்து திருஷ்டாந்தங்களினலே அவனிடத்தில் புகழத்தக்க இரட்சிப்பின்குணம் விளங்குகிறதற்குபதில் அவனுடைய கேடுகெட்ட துற்குணமும் பட்சிப்பின் குணமும் விளங்குகிறபடியால் பிறர்சிநேகமற்ற இந்தப்பாவியை தெய்வமாகவணங்குகிற இந்துக்களுக்கு ஐக்கியத்துக்குக் காரணமாகிய பிரர்சிநேகமிருக்க நியாயமேயில்லை.

## சிவனின் நடக்கையால் இவனும் பிரர்சிநேக தேவனல்லவேன்று கண்டுகோள்ளலாம்.

1. சிவன் கமங்கலியென்ற வலைச்சியை இச்சித்து அவள் வீட்டில் தந்திரமாகப் பிட்சைக்குப்போய் அவளால் தாம்புக் கயிற்றாற் கட்டுண்டு கல்லாகவும் சபிக்கப்பட்டான்.

### திருவாரூர் கலம்பகத்தில் ஓர் விருத்தம்.

கம்புபட்ட திரைசூழுங் கம்பையாற்றில்
கறைப்பட்டார் நாரிகையாற் கட்டும்பட்டார்
வம்புபட்ட கனத்தாலே வடுவும்பட்டார்
மதம்பட்ட வாரணத்தின் நாரியும்பட்டார்
வெம்புபட்ட மேனியிற் கல்லெறியும் பட்டார்
வேடன் காலுதையும் பட்டார் விடப்படாத
அம்புபட்ட முடிமேல் வில்லடியும்பட்டார்
ஆரூரார்பட்ட பாடார் பட்டாரே.

2. வேடன் வேட்டையாடின சகல இறைச்சிகளையும சுட்டுத் தன்வாயிற்றண்ணீர் கொண்டுபோய்ச் சிவன்லிங்கமாக மாறின ரூபத்தை ஸ்நானஞ் செய்வித்துப் படைத்து வருவான். ஒரு நாள் சிவன் அவனைப் பார்த்து உனக்கு உருசியான இறைச்சிகளையே நமக்குப் படையென்றான், அப்படியே அவன் தின்று எச்சில் இறைச்சிகளையே சிவனுக்குப் படைத்து வந்தான் என்று வசப்புராணத்திலே காணலாம்.

### இகழ்ச்சி கூறியபாடல்.

வென்றிபெறவே வேடன் கண்ணப்பன்
வேட்டையாடின கறிகளனைத்துந்
தின்றுபார்தத பின்னெச்சிலை யல்லவோ
சிவனுக்குப் படைத்தானென்று சாற்றுவர்.

3. சிவன் சுடுகாட்டு எலும்களைத் தின்று சாம்பலிற் புரண்டு இரந்துண்டு திரிந்து வெட்டிச்சியோடு விபசாரத்தாற கூடி இரண்டு பிள்ளைகளையும் பெற்றான். அதில்ஒருவன் ஆனையேறும் பெரும்பறையோ னென்றழைக்கப்படுகிறான். என்று திருவாரூர் தேவாரத்தில் காணலாம்.

### இகழ்ச்சிகூறிய பாடல்.

ஆனையேறும் பெரும்பறையனு மவன்றம்பித் திருநாளுக்குப் போவான், ருனிருவரும்தங்கி வெட்டிச்சித் தமக்குப் பிறந்த திமக்குத் தெரியும்.

4. ஓர் நாள் கவுதம ரிஷி யெழுந்து அதிகாலையில் ஸ்நானத்துக்குப் போகிறபோது எதிரே அளவற்ற வெள்ளமாக இந்திரியமோடுகிறதை காட்டு ஆறென்றெண்ணி அதைக்கையினலள்ளினுன், இது இந்திரியமென்று புத்தியாலறிந்து இப்படிப்பட்ட போகம் பண்ணுகிறவர்களுடைய லிங்கமும் ஆவுடையாரும் அற்றுப் பூமியில் விழக்கடவதென்றுச் சபித்தான் என்று இருசமய விளக்கம், கவுதமர்விடு சிவசாபசம்பந்தப்படலத்தில் விருத்தம்.

ஏகுகின்றதோரளவில்வெள்ளமாயிந்திரியத்துவெள்ளருவியோடலுந், தேகமுள்ள கான்யாறு தானெனு மெள்ளவங்கையால ள்ளிவேறுமோ, ருகுபுத்தியால் விந்துவென்று தானுன்னியின்னவாரெருழிவிலாசம், போகமெய்துவார் யோனி லிங்கமிப் போது வீழவிப்புவியிலென்றனன்.

5. பத்மாசூரன் தவஞ் செய்ததை சிவன் மெச்சிக்கொண்டு அவனிடம் வந்து உனக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்க, அவன் என் கையை யார் தலையில் வைக்கிறேனே அவன் பஸ்பமாக எரிந்துபோக வரந் தரவேணுமென அப்படியே கொடுத்தேனென்று சிவன்சொல்ல அதைச்சோதிக்க சிவன் தலையில் கை வைக்கத் தொடருகையில் அவன் ஓடிப்போய் ஐவிரலிக்காயில் ஒளிந்து கொண்டான். சிவனுக்குச் சகாயமாக விஷ்ணுமோகினி ரூபமெடுத்துவந்தான் அதைக் கண்ட பத்மாசூரன் மோகினியை இச்சித்து நெருங்க அவள் இவனை ஸ்நானஞ் செய்துவந்தால் சேருகிறேனென, அப்படியே ஸ்நானஞ் செய்யத் தன் கையைத் தலையில் வைத்தபொழுது தானே பஸ்பமாய்ப் போனுன். சிவன் பத்மாசூரனைக் கொன்ற விதமெப்படியென, மோகினிவேஷத்தாற்கொன்றேனென்றுருன். அதைத் தான் பார்க்கவேண்டுமென்று கேட்டபோது மோகினி வேஷத்தை எடுக்கவே சிவனும் அதைக் கண்டு சொக்கிப்போய் அதனல் விந்து விழுகிறதை விஷ்ணு கண்டு தன் கையால் ஏந்தினுன் அதிலிருந்து கையனுகிற ஐயனுர் பிறந்தாராம். இக்கதை அரிஅரன்கூடல்தேவாரத்திலும்,பாகவ

தம் எட்டாவது ஸ்கந்தம் மாயவன் ஈசுரனுக்கு மோகினி ரூபங் காட்டியஅத்தியாயம் 1,3,5,13,15 பாடல்களிலுங் காணலாம்.

இதைப்பற்றி ஒரு ஞானவான் தமது பிரபந்தத்தின் 3-வது சரணத்தில் சொல்வதாவது-

விருகன் றவத்தைக் களித்தானவன் வேண்டும் வரத்தை யளித்தான், வரத்தை சோதிக்க நினைக்கப்பயந்து மருண்டைடவே. லியுட் புகுந்தனன் சிவன்.

இச்சிவன் தேவனாயிருந்தால் கமங்கலி யென்கிற வலைச்சியை இச்சித்து அவள் தாம்புக் கயிற்றால் அடிக்கவும், கல்லாகவும்சபிக்கவும் படுவானா? கண்ணப்பனென்கிறவேடன் வாயினின்று வந்த எச்சித் தண்ணீராற் றன்னைக் கழுவவும் சம்மதிப்பானோ? எச்சி இறைச்சிகளை இச்சித்து கேட்பானோ? மசானக் கரையிலுள்ள மனிதர் எலும்புகளைக் கடித்து தின்னவும் அவ்விடத்திலுள்ள வெட்டிச்சியோடெஞ்சாரஞ் செய்துயானையேறும் பெரும்பறையோ னென்கிற ஒருவனையும் மற்றொருவனையும் பெறுவானோ? கவுதம ரிஷியால் ஆண் குறியாகிய லிங்கமும் பெண்குறியாகிய ஆவடையாரும் அற்றுப்போக சாபமடைவானோ? பத்மாசூரனுக்குப் பயந்து ஐவிரலிக்காயில் போய் ஒளித்துக்கொள்வானோ? இப்படிப்பட்ட அக்கிரமமும் துற்குணமுமுடைய பாவியை தெய்வமாக வணங்குகிற இந்துக்களுக்கு என்ன பிறர் சினேகமிருக்கும்.

## தேவேந்திரன் நடபடியினால் இவனும் பிரர்சிநேக தேவனல்ல.

தேவேந்திரன் கவுதமா முனியினுடைய ஸ்திரியாகிய அகலிகை யழகை இச்சித்துஅவளைக் கற்பழிக்க ஓர் இராத்திரி சாவல் வேடம் பூண்டுகூவினபடியால், அவன்புருஷன் பொழுதுவிடிகிற நேரமாச்சுதென்று வனத்துக்குப்போனான், இவன் அவன் போனபின்பு அகலியாளைக் கற்பழித்தான். கவுதம ரிஷி திரும்பி வந்தபின் வீட்டில் நடந்த சேதியைத் தெரிந்துகொ

ண்டு தேவேந்திரன் மாணி அற்றுப்போகவும் அவன் தேகமெ ங்கும் யோனியாகிப் போகவுங் கடவதென்று சபித்ததுமல்லா மல் தன் ஸ்திரியை கல்லாகவும் சபித்துப் போட்டான். இரா மாயணம் பாலகாண்டத்திலே காணலாம்.

இதைப்பற்றி ஓர் வித்வான் சொன்ன விருத்தம்.

அகலிகை யழகினை நோக்கியுள்ளத்தில்
மிகமயன் மேவியே யிரவிற்கள்ளமாய்
புகுதவட் புணர்ந்து கௌதமன்சொல் சாபங்கொ
டகன்றன னந்தவித்திரனுந் தேவனே.

2. இந்திரன் பெண்சாதி இந்திராணியை ஞானமாமுனி வலுவந்தமாய் கையைப் பிடித்திழுத்தானென்று தேவர் விளக் கத்தில் காணலாம்.

3. தேவேந்திரன் சிற்பாசாரியென்கிறகம்மாளப்பெண்ணை யெடுத்துக்கொண்டானென்று விசுவபுராணத்தில் காணலாம்.

மேற்கூறிய உதாரணங்களினால் இவனிடத்திலும் தேவலட் சணம் விளங்காமையினால் இப்படிப்பட்ட துட்டனை தேவனாக வணங்குகிற இந்துக்களுக்கு தேவ சினேகத்துக்குப் பொருந் திய பிரர்சிநேகமிருக்க நியாயமில்லை.

"மனத்தைப்போல மங்கிலியம்
குணத்தைப்போல குடிவாழ்க்கை,,

யென்று ஔவை சொல்லியதுபோல மேற்கூறிய தேவர்கள் பெண்சாதிமார்களும் துஷ்ட ஸ்திரிகளென்று இதனடியில் காணலாகும்.

1. பிர்மாவின் பெண்சாதியை தூர்க்கந்தமாரிஷி கூடினா னென்று காசிகாண்டத்திலும்.

2. விஷ்ணுவின் பெண்சாதி லட்சுமி சூரியனிடத்தில் சோரம்போனாளென்று பலபாடலிலும்.

3. சிவன் பெண்சாதி பார்வதி பிர்மாவினிடத்தில் சோரம் போனாளென்று அருணகிரிஅந்தாதியிலும்.

4. இந்திரன்பெண்சாதி இந்திராணியை ஞானமாமுனி வலுவந்தமாய் கையைப்பிடித்திழுத்தானென்று தேவர் விளக்கத்திலும்.

5. இராமன் பெண்ஜாதி சீதையை இராவணன் திருடிக் கொண்டுபோனுனென்று வேளூர் விளக்கத்திலுங் காணலாம்.

மேற்கூறிய ஸ்திரிகளிடத்தும் துற்குணமே குடிகொண்டிருப்பதால் அவர்களிடமும் பிரர்நேசமிருக்க கூடாது. அவர்களை தேவதைகளாக வணங்கும் இந்துக்களுக்கும் ஒற்றுமைக்குக் காரணமாகிய பிரர் சிநேகமிருக்க நியாயமில்லை.

**பிர்மா, விஷ்ணு, சிவன், தேவேந்திரன் முதலானவர்கள் நம்மைப்போலொத்த மானிடராகவும் பெண்ஜாதி பிள்ளைக ளுடையவராகவு மிருந்தார்களென்பதின்பேரில்.**

பிர்மாவுக்குக் சரஸ்வதி யென்கிற ஓர்பெண்சாதியுண்டென்றும், இந்தப்பிர்மாவுக்குத தந்தைவிஷ்ணுவென்றும், விஷ்ணுவுக்குப் பிர்மாவைத்தவிர, மன்மதனென்கிற வேறொருபிள்ளையுண்டென்றும், சிவனுக்கு விக்கினேசுரன், குமரன், வீரபத்திரன் என்று மூன்றுபிள்ளைகளுண்டென்றும் சொல்லியிருப்பதால் இவர்கள் நம்மைப்போல மானிடராகவும் பெண்சாதி பிள்ளையுடையவராகவும் அனேகம் பாதகரைப்போல வைப்பாட்டியுடையவராகவும், பொய்யராகவும் வஞ்சராகவும், சூதராகவும் கொலைபாதகத்துக்கஞ்சாத சண்டாளர்களாகவும் சாபமடைந்தவராகவுமிருக்கிறதினுல் இவர்களைத் தேவரொன்று சொல்லவும், நினைக்கவும் கருதவுமொண்ணுது என்பதற்கு சிலபாடல்களைக் கவனிப்பீர்களாக.

பஞ்சாட்சர பதிபாசவிளக்கம் 17-ம் பாட்டு.

காமத்தாலிந்திரன் கலக்கமெய்தினுன்
காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்
காமத்தாற் கோசிகன் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கிலார்களே.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

அவ்வைமொழி வெண்பா.

மாலுமனுடன் மலரோனுந் தான்மனுடன்
ஆலமுண்ட கண்டனவன்மனுடன்—ஞாலமிசை
உற்றுமுணர்ந்து மூவருந்தும் பெரியோர்கள்
கற்றுமறிந்தாரில்காண்.

ஒருநாள்சிவன் தன்பெண்சாதியாகிய பார்வதியைப்பார்த்து நமதுசமுசாரம்பிழைக்க வகைசொல்லவேணுமென்று புத்தி கேட்டதற்கு அவள்சொன்ன ஒருவிருத்தம்.

அச்சுதன்னிற் பனிலமெத்தநாள்வஞ்சி பிச்சையேர்ப்பா
யமனுடையமாடொன்று, நம்மாடொன்று
மச்சினனைக்கேட்டு நிலம்வாங்கவேண்டும்
வாகாக இளையவனை மடக்கச்சொல்லிப்
பத்திரராமன்கையிற் கலப்பைவாங்கிப்
பரிவுடனேசூலத்தைக் கொழுவாய்ப்பூட்டி
அத்தகுபேரன்கையில் விரையைவாங்கி
அன்னிலத்திற்றெளிக்க அன்னமளிக்கலாமே

"வேலவனை வேங்கைமரமாக்கிவைத்தாய்
விறகுகட்டி சொக்கர்தனை விற்கவைத்தாய்
மாலவனை உரலோடுகட்டிவைத்தாய்
வள்ளிதனைக்குறவருடன் வனத்திற்சேர்த்தாய்
காலனைமார்க்கண்டனுக்கா யானுரைத்த
காரணனை நீபிடித்தகர்மத்தாலே
சாலவேயுனைத்தொழுவே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந்தம்பிரானே.

மேற்கூறியபாடல்களினால் இந்துக்கள் தேவர்களாக வணங்குகிறவர்கள் காமாதிகராகவும் டானிடராகவும் தன்னைத்தான் சவரட்சணைசெய்துகொள்ள வகையறியாத மூடராகவும் அவிவேகமுடையவராகவு மிருப்பதினால் இப்படிப்பட்ட மிலேச்சரைத் தெய்வமென்றெண்ணுகிற இந்துக்களுக்கு என்ன ஒற்றுமையும் பிரர் சினேகமுமிருக்கும்.

## இந்துமதம் வந்த வாலாறு.

இருக்குவேதம், எசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதமாகிய இந்நான்கையும் பிர்மாவுக்கு வைப்பாட்டியாகிய, ஊ

ர்வசியின் வயற்றில் விபசாரத்தால் பிறந்த வசிஷ்டர் கொண்டுவந்து பராபரவஸ்துவை அரூபத்தில் ஸ்துதிக்க வேண்டுமென்றும், சகலமனிதரும் சாதிபேதமின்றி சகல மாமிசங்களையும் புசிக்கலாமென்றும் பிரசங்கித்தார். சிலஅரசரும் பிரபுக்களும் தர்க்கித்ததினால் எல்லோருக்குந்தானே முன்வழி காட்டியாய் அருந்ததியாகிய ஓர் சக்கிலிப்பெண்ணைக் கலியாணம்பண்ணி வேதத்தைப் பிரசங்கித்தார். இந்தச்சக்கிலிச்சி வயிற்றிற்பிறந்த சாந்திபர் தன்தகப்பனைப்போலச் சாதிபேதமின்றி ஓர்பறைச்சியைக் கலியாணஞ்செய்து வேதத்தைப் பிரசங்கித்தாரென்றும், அவள்வயிற்றிற் பிறந்த பராசரும் அவ்வேதத்தைத் தங்கள் பிதாக்களைப்போலச்சாதிவித்தியாசமின்றிப் போதித்தாரென்றும், பராசர் தபசுக்குப்போய்த் தனது தபோபலத்தால் மச்சகந்தியெனகிறபெண்ணை விபசாரமாகச்சேர்ந்து வேதவியாசனைப் பெற்றாரென்றும் இவர் தனக்குப்பிறகு வேதத்தைப்பார்ப்பாருக்குக்கொடுத்தாரென்றும்இந்தவேதத்தை நாலுதலைமுறையாக நாலுரிஷிகள் பார்த்துவந்தமையால் அந்தவேதத்தை நாலு பிரிவாகப்பிரித்துக் கொண்டார்கள். இப்படி தேவடியாளிடமாகவும், சக்கிலிச்சியினிடமாகவும் பறைச்சியினிடமாகவும் செம்படச்சியினிடமாகவும் இந்துக்களுடையமதம் உண்டாயினதென்று இந்துக்களில் ஞானியாக விளங்கின கபிலாஎன்னு மகாமுனி சொல்லுகிறார்.

இதை மெய்ப்பிக்க வேமையர் சொன்ன
தெலுங்கு வாக்கியம்.

தல்லி யூர்வசிலஞ்ச, தனயாலிமாதிக,
தானு பிராமுண்டன தகுனு
சகத்தி வசிஷ்டு மாட்டலந்த வசுமர்த்தியடுகரா
விஸ்வதாபிராம வினரவேமா.

1. இருக்குவேதத்தில் தேவர்களின் ஸ்துதியையும் கிட்டு துடக்கு முழுகிக் குளிக்கிறதைப் பற்றியும்.

2. எசுர்வேதத்தில் காணிக்கை பலி முதலியவைகளைப் பற்றியம்.

3. சாமவேதத்தில் பாவவிமோசனத்தைப் பற்றிய பல சடங்குகளைப் பற்றியும்.

4. அதர்வணவேதத்தில் பகைஞரைக் கொல்லுகிறதற்கும் பில்லி சூனிய முதலானவைகளைப்பற்றியும் பேசி யிருக்கின்றது. வேதவியாச ரிடத்திலிருந்து பிராமணர் வேதத்தை பெற்றுக்கொண்ட பொழுது அவருக்கு நாலுகாரியங்களை மாத்திரங் கட்டளையிட்டார். அதாவது,

1-வது. தங்களாத்துமாவையுஞ் சரீரத்தையும் சுத்திபண்ணிக்கொள்ள வேண்டுமென்றும்.

2-வது. ஒரேபராபரவஸ்துவை யாவரும் அரூபத்தில் ஸ்துதி பண்ணவேண்டுமென்றும்.

3-வது சாதிவேற்றுமைசெய்யாமல் நீச்சர் முதலிய சக்கிலியர் வீட்டிலும் சாப்பிடலாமென்றும்.

4-வது. மிருகங்களையும் பட்சிகளையும் மச்சங்களையும் புசிக்கவேண்டுமென்றும் இப்படி செய்யாவிட்டால் சாபம் சித்திக்குமென்றுங கட்டளையிட்டிருக்க, இதற்கு பதிலாக நாலு காரியங்களைத் தங்கள்போக்குக்குத் தக்கதுபோல ஏற்படுத்திக்கொண்டார்கள். அதின் முதலாவது,

1-வது. சரீரசுத்திக்காகத் தண்ணீரில் முழுகிக் குளிக்கிறதென்றும், ஆத்துமசுத்திக்காக மரக்கறிகளைப் புசிக்கிறதென்றும்.

2-வது. அக்கினியைவளர்த்தி ஸ்துதிசெய்தால் அதுவே பராபர வஸ்துவைஅரூபத்தில் ஸ்துதிசெய்கிறதென்றும்.

3-வது பறைச்சேரியைஅழித்துஅக்கிராரங்களைக்கட்டிஅதிற்சமைத்து சாப்பிட்டால் அதுவே சாதிவித்தியாசமின்றி பறையரின்வீட்டில் சாப்பிடுகிறதற் கொக்குமென்றும்.

4-வது. மாட்டுத்தோலில் வார்த்தநெய்யையும் மாட்டுத்தோலிற்கட்டிய பெருங்காயத்தையும் அதின்வயற்றி லிருக்கிற கோரோசனத்தையும் பறையன் அறுத்த பச்சை நெல் அரிசி

யையும் பறையன் மிதித்த உப்பையும் எப்போதும் சாப்பிட்டு வருகிறதல்லாமலும் மாட்டிற்பிறந்த பஞ்ச கோமயங்களென்று அதன்மலத்தையும் சலத்தையும் தயிர்பால்நெய் இவ்வைந்தை யும் தீட்சை அபிஷேகம்பண்ணித் தாங்கள் உட்கொள்ளுகிறது மன்றி அந்தகாலத்தில் ஆட்டை யெக்கியம்பண்ணி சாப்பிடுகி றதும் அஸ்வமேதயாகஞ் செய்வதும் மச்சத்தை சாப்பிடுகிற துமே ஆடுமாடுமுதலிய மாமிசத்தை சாப்பிடுகிறதற்குச் சமான மென்று நிர்ணயம் பண்ணிக்கொண்டார்கள். பாப்பார் தங்கள் வேதங் கற்பியாத கள்ளவழியில் நடந்தால் தங்கள் திருட்டு வெளியாகுமென்று வேதங்களையாவது புராணங்களையாவது சூத்திரன்வாசித்தால் வேப்பெண்ணையைக்காய்ச்சி அவன் வாயி ல்வார்க்கவேண்டுமென்றும், சூத்திரன் வேதங்களைக் காதால்கே ட்டால் கொதிக்கிற எண்ணையை அவன் காதிலே ஊற்ற வே ண்டுமென்றும் சூத்திரன் வேதவாக்கியங்களைப் பாடம்பண்ணி னால் அவனைக் கொலைசெய்ய வேண்டுமென்றும், சூத்திரனைக் கொல்லுகிறது ஒருநாயைஅல்லது பூனையைக் கொல்லுகிறதற் குச் சமானமென்றும் விதியேற்படுத்திக் கொண்டார்கள்.

அகஸ்தியர் ஞானம் 27 கவி.

பாடுவார் பதினெட்டு புராணங் கட்டு
பாரதமுங்கட்டப்பா பரிகாசங்கள்
நாடதனிற் பிராமணர்கள் பிழைக்கச்செய்த
நவக்கிரகக்கட்டப்பா நம்பவேண்டாம்
ஓடுவா ரருள்பாதம் பூசைசெய்து
உத்தமனே கண்ணீராற் கழுவுவாயே.

ஞானவெட்டி 465-பாடல்.

வியாசர்சொல்லும் பாரதத்தில் வெகுபொய் வீணும்
மேதினியோர் மாய்கையினில் விரும்பச்சொன்னார்
ஆய்ந்துகவி பாடிவிட்டான் கம்பன் வம்பன்
அதிதார ராமாயணத்தி லனேகம் பொய்தான்
சாயாமலதிவீர பாண்டியன்சொல்லுந்
தமையேந்திசரித்திர நைடதமுஞ்சொன்னார்
சுகமாகா திதுகவிகள் சுத்தப்பொய்தான்
தொடுகவி மாணிக்கவாசகர் சொன்னாரோ.

பாம்பாட்டி சித்தர் 98-ம் பாட்டு.

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரப்புராணங்களை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேதநூற்களும்
வீணனநூற்களென்றூடாய் பாம்பே.

இந்துக்களுக்கு அநேகந் தெய்வங்க ளிருப்பதுபோலவே வேதங்களு மனேகமிருக்கின்றது. அதை பிராமணர் முதலிய துவிஜர்கள் (பிராமணர், சத்திரியர், வைசியர்) தவிர மற்றவர்கள் படிக்ககூடாதென்றும் படிக்கிறவர்களுக்கு ஆக்கினையும் சாபமும் நேரிடுமென்றும் மனுநீதிமுதலிய சாஸ்திரங்களிற் சொல்லியிருக்கிற தல்லாமலும், பகைவரைக்கொல்லவும் பில்லி சூனியத்தால்மனுஷரை உபத்திரவப்படுத்தவும்வேதாகமங்களில் போதிக்கப்பட்டிருக்க அவைகள் தெய்வ சிநேகத்தை நாடியபிறர் சினேகத்தைக் கற்பிக்காமையினால் இந்துக்களுக்கு ஒறறுமையிருக்க நியாயமில்லை.

## இந்துவேதப் போதகர் பொய்யரும் புரட்டருமாயிருப்பதால் இவர்களிடத்தும்பிறர் சிநேகமில்லையென்றுவிளங்குகின்றது.

அகஸ்தியர் விருத்தம்.

(1) தன்னைத்தா னறியாத மூடரெல்லாந்
தானுலகிற் குருக்களென்று பெயருஞ்சொல்வார்
பின்னைத்தான்பிறவாத நெறியுங்காணார்
பேசாதமந்திரத்தின் பெருமைகாணார்
முன்னைத்தான் பெரியோர்கள் சொன்னநூலின்
முறைமையறியாரார் வீண்மூடரெல்லாம்
என்னத்தாற் சிஷனுக்கு முததிகாட்டி
யீடேற்றங் கொடுப்பதுவு மியல்பிலாரே.

குதம்பை சித்தர் 234 to 238 பாடல்.

அல்லலைநீக்கியறிவோடிருப்போர்க்கு, பல்லாக்கேதுக்கடி
அட்டாங்கயோகமறிந்தமெஞ்ஞானிக்கு, முட்டாங்கமேதுக்கடி

மாற்றூனைவென்று மலைமேலிருப்போர்க்கு பூத்தானமேதுககடி. செற்றூரைப்போலத் திரியுமெய்ஞ்ஞானிக்கு கைத்தாளமேது க்கடி.

ஞானவெட்டி.

பொய்க்குருவினாலெனது பொக்கிஷமெலாஞ்சிதைந்து
கைப்பொருளெலா மிழந்தேன் காரியக்குருககளினால்
இப்படியாய மேதினியில் யான்சிலநாள் போனபின்பு
மெயக்குரு முனியருளால் மெய்ஞ்ஞானம்பெற்றேனே.

பட்டணத்துபிள்ளையார் சொன்னவிருத்தம்.

இருட்டறையிற் பொருளெடுத்த வாறதொக்கும்
இறைவருட உபதேசகதின்பமில்லா
இருட்டறையில் விளககெடுதத வாறதொக்கும
இறைவருட உபதேச மியம்புங்காலை
மருட்டகனைநீக்க மரிததவனைப்போல
மன்னார்குலத்துபதேச மதிககுங்காலங
குருட்டெருதையுழுங குருடன் குருவின்சீஷன்
கூடி நரகினில் வீழ்வார குறிப்பில்லாமல்.

திருமூலர் சொல்லிய விருத்தம்.

காவிதனைச் சீலையிலே தோய்த்துககொண்டு
களிம்படையுஞ் செமபுகளைக் காதிற்போட்டு
மேவியதோ ருத்திராட்ச மேலேபூண்டு
மேனியெல்லா மேனிறைந்த விபூதிசாற்றி
ஆவுடைய மலமதனைத் திருநீறென்று
மதனுடைய நீரதனைத் தீர்த்தமென்றும்
பாவிகளா யுலகுதனிற் றிரியவேண்டாம்
பராபரதைப் புததியினாற் றெளிந்துபாரே.

தேவசற்குரு போதித்த சத்தியமறையின தாற்பரியத்தை யறியாதமூடர்கள் தங்கள் வயறுபிழைககத்தக்க வுபாயங்களெல்லா மேற்படுத்திக்கொணடு குருடன் குருடனுக்கு வழி காட்டியாயிருந்து இருவரும் கடைசியாய் பாதாளத்தில் விழுவதுபோல சிநேகமற்ற வர்களாய்க் காணப்படுவதால் இந்த பாவவாளனைப் பின்செல்லுகிறவர்களுக்கும் ஒற்றுமையிருக்க கா

ரணமில்லே. ஏனெனில் இந்த பாவவாளர்கள் பூர்வீகத்திலிருந்த சில வரசர்களைக் கைவசப்படுத்திக் கொண்டு சாதிவித்தியாச மேற்படுத்திப்போட்ட படியால் பிரர் சிநேகத்துக்கொவ்வாத இந்த வித்தியாசஙகள் நாளாவட்டத்தில் வழக்கத்தினல் விர்தியாகிப்போச்சுது.

## இந்துசாதியைப் பற்றியவரலாறு.

பிராமணோஸ்ய முகமாசீத
பாஹுராஜந்ய: க்ருத:
ஊருததஸ்யயத்வைஸ்ய :
பதாப்யாம் சூத்ரோ அஜாயதா.

பிர்மாவினல் அந்தணர் அரசர் வணிகர் சூத்திரர் என்கிற நாலுசாதிகள் உண்டாயிற்றென்று சொல்லியிருக்கிறது பார்ப்பாருடைய கட்டுக்கதைகளேயன்றி வேறல்ல. அதெப்படி யெனில் பார்ப்பார்கள் கல்வியும் சுத்தமுமுடையவர்களா யிருந்து தங்கள் பாரம்பரையாய்க்கேட்டு வந்த நரதேவர்களுடைய விசேஷத்தை யெழுதத் தொடங்கினபோது ஒன்றை நூறாக்கி விஸ்தரித்துகட்டின வேதநூற்களை வாசிப்பதும் வியாக்கியானம் பண்ணுவதும் வேதமோதுவதும் பூசை செய்வதுமே தங்களுக்குரிய பிரமாணமாகவும், அரசர்இராச்சியத்தையாண்டுதுஷ்டரை தண்டித்து வேதம்படித்து அவ்வேதத்துக்கு பிராமணரிடத்தில் அர்த்தங்கேட்பதுவே பிரமாணமாகவும்; வணிகர்வர்த்தகஞ் செய்து பிராமணரிடத்தில் வேதங்கேட்பதே பிரமாணமாகவும்; சூத்திரர் உழுதுபயிரிட்டு அரசருக்கு வரிகொடுத்து போர்க்காலத்தில்இராசருக்குதவிசெய்யவும், சுபாசுபஙகளில் பிராமணரைக் கொண்டு வேதவிதிப்படி நடத்திக்கொண்டு மேற்சொல்லிய முக்குலத்தோருக்கும் பணிசெய்வதே முறையாகவும் ஏற்படுத்திப்போட்டார்கள். இதுவேயன்றி யிவர்கள் பிர்மாவின் முகத்திலிருந்தும் தோளிலிருந்தும் வயிற்றிலிருந்தும் பாதத்திலிருந்தும் பிறந்தார்களென்பது மதியீனத்திலும் மதியீனமே.

சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மா பிராமணசாதியே யல்ல வென்பதற்குப் பிரமாணம்.

இருசமயவிளக்கம் வேள்விப்படலத்தில்.

மாலையரசர் மரபென்றும் மலரோன்வணிகர் குலமென்றும்
சீலமுடைய புரந்தரனைத் திறமாகியசூத்திரனென்றும்
சாலுமிமையோர் தங்களைச் சங்கரசாதியென்றுஞ் சாற்றி
யாலமிடற்றுப் பெருமானை யந்தணனெனலாலும்.

எ-து. சாதியில் விஷ்ணு க்ஷத்திரியன், பிர்மா வணிகன் தேவேந்திரன் சூத்திரன், மற்றதேவர்கள் பலசாதி கலப்பாலுண்டான சங்கரசாதி, சிவனே பிராமணன் என்பதாம்.

மேலும் பிராமணர்கள் தாங்கள் ரிஷிவம்சத்தாரெனப்பெருமைபாராட்டுகிறார்கள், அந்தரிஷிகளின்உற்பதிக்குப் பிரமாணம்

"ரிஷியஸ்ருங் கோமருகோஜாத: கௌசிகோ காசிநந்தன: ஜம்புகோ ஜம்புகோத்பத்தி: கௌதமோ கௌதசம்பவா வால்மீகோபரோத்பத்தி. அகஸ்திய கும்பசம்பவ: வியாசோ லுப்தசம்பூதோ வசிஷ்டர் ஊர்வசிசுத: நாரதோப் சகிபுத்ரே: கௌண்டன்யோ முண்டகிசுத: மதங்கஸ்ய மதங்கஸ்யாத் மாண்டவ்யோ மண்டுகிசுத: சாங்க்யாசம்ச சம்பூதோகார்க்கேயோ கார்த்தவசுத: சுநகிகர்ப்ப சம்பூதோ சௌனகாதி மஹாரிஷி:
—மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது.

எ-து. கலைக்கோட்டர் மான்வயிற்றிலும், கௌசிகர் காந்திமகாராஜாவுக்கும், ஜம்புகர் நரியின்வயிற்றிலும், கௌதமர் பசுவின்வயிற்றிலும், வால்மீகர் வேடச்சிக்கும், அகஸ்தியர் கும்பத்திலும், வியாசர் செம்படச்சிவயிற்றிலும், வசிஷ்டர் தாசிவயிற்றிலும், நாரதர் வண்ணாத்திவயிற்றிலும், கௌண்டன்யர் முண்டச்சி வயிற்றிலும், மதங்கர் சக்கிலிச்சிவயிற்றிலும், மாண்டவ்யர் தவக்களை வயிற்றிலும், சாங்கேயர் பறைச்சிவயிற்றிலும், கார்க்கேயர் கழுதைவயற்றிலும், சௌநகர் நாயின்வயிற்றிலும் உற்பத்தியானார்கள் என்பதாம்.

குதம்பைசித்தர்பாடல்.

ஆண்சாதி பெண்சாதி யாகுமிருசாதி
வீண்சாதிமற்றதெல்லாங் குதம்பாய்-வீண்
பாப்பார்கள் மேலென்றும் பறையோர்கள் கீழென்றுந்
தீர்ப்பாகச்சொல்வதென்ன-குதம்பாய்-தீர்ப்பா
கர்த்தர் பறையோரைப் பாப்பாரைப்போலவே
தீர்ப்பாய் படைத்தாரோடி குதம்பாய்-தீர்ப்பா.

திருவள்ளுவர் ஞானவெட்டி 452-ம் பாட்டு.

முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்
முதலான இந்திரர் நாரதர் கின்னரர்
உற்பத்தியாகவு நாதவிந்தாலே
யுதித்தவாறெல்லா மாதித்தன்குலங்காணும்

இந்துக்கள் தேவர்களாகவணங்குகிறயாவரும் நம்மைப்போ லொத்த மனிதரல்லாமல் தேவர்களல்ல. பிராமணர்கள் மனுஸ் மிருதியிலிருந்து உதாரணமாகச்சொல்லுவதுபோலத் தாங்கள் ரிஷிகளாகிய மானிடரிடத்திலிருந்து பிறந்தவர்களா யிருக்க லாமொழிய தங்கள்குலம் மான்இடத்திலிருந்தும், பசுவினிட த்திலிருந்தும், நாயினிடத்திலிருந்தும், கழுதையினிடத்தி லி ருந்தும் ஒருக்காலும் பிறந்திருக்கமாட்டாது. அவர்கள் அப்ப டியே பிறந்தோமென்று சாதிப்பார்களானால் அவர்கள்குலம் மிருககுலமாகவும், அவர்கள்புத்தி மிருகபுத்தியாகவு மிருக்கு மென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட மிருகக் குலத் திற் பிறந்தபாப்பானை இந்துக்கள் தங்கள் குருக்களாக வணங் கிறபடியால் அவர்களுக்குள்ள மாட்டுபுத்தி கழுதைபுத்தியி னால் போதிக்கிறதினால் தான் அவர்களை மாட்டு மூத்திரத்தை தீர்த்த மென்றுகுடிக்கவும் மாட்டுச்சாணியை திருநீறென்றுநெற் றியில் தரித்துக்கொள்ளவும், காமாதுரரையும் கொலைபாதகரை யும் பசாசுக்களையும் தெய்வமாகத்தொழவும் செய்தது,புத்தியும் ஞானமுமுடையவர்களுக்கு அரோசிகமாகக் காண்கிறதல்லோ.

கடவுள் ஆண்சாதி பெண்சாதியாகிய இருசாதியைமாத்தி ரம் சிருஷ்டித்தாரொன்றும் அவ்விருசாதியினின்றே சகலரும்

பிறந்தார்களென்றும் இதனடியில்வரும் திருஷ்டாந்தத்தால் தெரியவரும்.

அம்புவியாலு மனேக வுயிர்களும்
அண்டபிண்ட மதிலாச்சுதனேகமும்
தப்பில்லையே பறையம்பிகை தன்குலஞ்
சாம்பசதாசிவன் தந்தை காணுண்டையே

ஞானிகள் மேற்சாதி கீழ்சாதி யில்லையென்று கண்டித்திருக்க மூட இந்துக்கள் சிலரை இழிவான சாதியென்றும் அவர்களைத் தொட்டால் தீட்டுண்டாகுமென்றுஞ் சொல்வதுநிந்தையல்லோ? ஆடு, மாடு, நாய், நரி, கழுதை, முதலிய மிருகங்களைத்தொட்டு ஸ்னானஞ் செய்யாமல், ஞானமும் அறிவுமுள்ள மனிதனைத்தொட்டு ஸ்னானஞ்செய்தால் நீச மிருகங்களைப்பார்க்க மனிதன் இழிவானவனா? இப்படி ஞானமும் அறிவுமுள்ள மனிதனை யிழிவுபடுத்துவது மாட்டு மூத்திரத்தைக் குடித்து மாட்டுச்சாணி தன் நெற்றியிற் பூசி அந்த மாட்டைத தானே தெய்வமாகக் கும்பிட்டு வருகிற மாட்டுப்புத்தி யல்லவா? நீசமிருகமாகிய நாயைத் தொட்டுத் தலை முழுகாமல் நரனைத்தொட்டு தலைமுழுகினால் கடவுளால் சபிக்கப்பட்ட பசாசை கும்பிட்ட புத்தியினால் வந்த நீசகுணமல்லவோ.

இதை ஞான சாஸ்திரியார் கும்மி 452-முதல்-460-வரையில் காணலாம்.

மேலும் பூர்வீகத்தில் பிராமணர்கள் ஆடு மாடு முதலிய பதார்த்தங்களைப் புசிப்பவர்களையெல்லாங் கீழ்சாதியென்றும் இழிகுலத்தினரென்றுந் தீர்மானித்திருக்கிறதினால் அவர்களை நிந்திக்கிறதற்கு இடமாயிற்றென்பார்களாக்கும் இறைச்சி முதலிய துற்பதார்த்தங்களையெல்லாம் சிவன்புசித்தானென்று கண்ணப்ப நாயனார் புராணத்திலும், பிராமணர்கள் இறைச்சிகளைப் புசித்தார்களென்று கந்தபுராணம் வில்வலன் வாதாவிப்படலத்திலும், ரிஷிகள் முதலான சைவர்கள் மாமிசம் புசித்தார்களென்று மேற்படி படலத்திலும், இல்லொழுக்க சை

வர்கள் இன்னின்ன மாமிசம் புசித்தார்க ளென்று கூர்மப் புராணம் சிராத்திரவிதியிலும் சொல்லியிருக்கிறது. இதுகளை யெல்லாம் பார்க்கிறபோது இந்துசாதி ஏற்பாடு பிராமணர்கள் தங்களை மேன்மையாகப் பாராட்டிக்கொண்டு மற்றவர்களை இழிவு படுத்தவும் தங்கள் வயிறுபிழைக்கவும் கட்டிவைத்துக்கொண்ட ஏற்பாடாகவு மிருக்கிறதென்றுந் தேவானுக்கிரகத்தால் புத்திதெளிந்து பிசாசின் அடிமைதனத்திலும் அதனாலுற்பத்தியான துர்மதத்திலிருந்து விலகி ஆதியில் கடவுளால் அருளப்பட்ட சத்திய வேதத்திற் பிரவேசித்து வருகிறவர்களை ஒற்றுமைக்காதாரமாகிய பிறர்சிநேகமற்றவர்களாய்க் குலம்புகுந்தவர்களென்றும் வெள்ளைக்காரர் வேதத்தாரென்றுந் தூஷிப்பது பேயின் ஈனபுத்தியல்லவா? ஆதலால் இப்படிப்பட்டவர்களிடத்தில் பிரர் சிநேகமிருக்க நியாயமில்லை.

குலம் புகுநதவர்கள் இந்துக்களல்லாமல் கிறிஸ்துவர்கள் அல்லவென்றும் கிறிஸ்துவர்கள் ஆதியில் கடவுளால் அருளப்பட்ட மெய்வேதத்தாரென்றுங்காட்டி, இந்துக்கள் சொல்லுகிற உலக சிருஷ்டிப்பின் அனுசாரத்தையுங் காட்டப்படும்.

1-வது இந்து வேதங்கொண்டுவந்த பிராமணனாகிய வசிஷ்டர் அருந்ததியாகிய சக்கிலிப்பெண்ணைக் கலியாணஞ் செய்யக்கேட்டபோது சக்கிலியர் தங்கள் குல ஆசாரப்படி நாமத்தைப்போட்டுக்கொண்டால் பெண்தருவோ மென்றதற்கு அப்படியே வசிஷ்டர் சக்கிலிக்குரிய நாமத்தைப் போட்டுக்கொண்டு கலியாணம்செய்துகொண்டதால் இப்போது சக்கிலி நாமத்தைப் போட்டுக்கொண்டிருப்பவர்கள் யாவரையும் சக்கிலி குலம் புகுந்தவரென்று சொல்லுகிறோம்.

2. வசிஷ்டருடைய குமாரன் சாத்திபர் புங்கனூர் கொட்டைக்காரப் பறையன் மகளைக்கலியாணஞ்செய்ய ஆசித்து அவளைக் கலியாணத்திற்குக் கேட்க அவர்களுந் தங்கள் குல ஆசாரப்படிக்கு பூணூலைப் போட்டுக்கொண்டால் பெண்தருவோமென்றதற்கு அப்படியே சாத்திபரும் அந்தப்பெண்ணுக்

காக பூணூலை போட்டுக்கொண்டதால் பூணூல் போடுகிற யாவ ரும் கொட்டைக்காரப் பறையோர்குலம் புகுந்தாரென்கிறோம்.

3-வது. சிவனுக்கும் பிர்மாவுக்கும் ஐந்துசிரசு இருந்த போது பார்வதி குறிப்புத்தெரியாமல் பிர்மாவினிடத்தில் மோ சம்போனதால் சிவன் பிர்மாவின்தலையி லொன்றைக் கிள்ளிப் போட அந்தகொலைபாதகத்தால் சிவன் பன்னிரண்டுவருடம் சுடுகாட்டெலும்புகளைத்தின்றுசாம்பலைப்பூசிக்கொண்டுமண்டை யோட்டை கையிலேந்தி பிட்சையெடுத்து வெட்டிச்சியுடன் சஞ்சாரஞ்செய்து தலைமுழுக்கில்லாமல் மயிர்கள் சடைபற்றிப் போயிருந்தபோது சுடுபறையோன் இவனுக்குதவிசெய்து சா ப்பாடுகொடுத்து வந்தான். இவனுக்கு விகாரந் தெளிந்தபின் சுடுபறையோன் வளர்த்த வள்ளுவனைப்படிப்பித்து சிவன் குரு வாக்கினன். இதல்லாமலும் சிவன் கங்காளவேஷம் பூண்டு தா ருகாவனத்தில் ரிஷிபத்தினிகளுடைய கற்பழித்து வருகிற போது பிரிகுமாரிஷிகண்டு அவன்லிங்கம் அறுந்துவிழ சாபம் போட அறுந்துவிழுந்தலிங்கத்தை ஷை வள்ளுவன் பூசை செ ய்து கட்டிக்கொண்டதால் இப்போது சாம்பலை நெற்றியிற் பூ சிக்கொள்ளுகிற வர்களையும் லிங்கங்கட்டிகளையும் சுடுபறை யோன்குலம் புகுந்தவர்களென்றும் வள்ளுவகுலம் புகுந்தவர்க ளென்றும் கூப்பிடுகிறோம். இதற்குத் திருஷ்டாந்தம்.

குலம்புகுந்தவனார் பித்தங்கொண்டவன் சுடுகாடேறி
எலும்புமாலைகளைப்பூண்டு எங்குஞ் சாம்பலைத்தான்பூசி
தலைமண்டைக் கையிலேந்தி சபந்தின்று காடுகாக்கும்
புலையனைப்போல வேடம் புகுந்ததார் தெளிந்துபாரே.

மேலும் மனக்கண்குருடராகிய இந்துக்கள் சத்தியவேதம் வெள்ளைக்காரருடைய வேதமென்று சொல்லுகிறார்கள். கடவு ள் சகலருக்கும் பொதுவான தந்தையாயிருக்கிறதுபோல அவ ரால் கொடுக்கப்பட்டவேதம் சகலமானிடருக்கும் பொதுவாக க்கொடுக்கப்பட்டதுமன்றி கறுத்தமனிதருடைய தேசமாகிய இந்த ஆசியாகண்டத்தில் கடவுள் மனிதாவதாரமாகி தமது சத் தியவேதத்தைப் போதித்து அதின்படி தாமே நடந்து காட்டி

ஞர். அதை தேவசிநேகங்கொண்ட பிரர்சிநேகமிகுதியால் அவர் சீஷர்கள் உலகமெங்கும் போதித்ததுபோல ஐரோப்பு தேசத்துக்கும் போய் போதித்தார்கள். அந்தசீஷர்களி லொருவராகிய அர்ச்.தோமா சென்பவா கடவுளாகிய உலக இரட்சகர் ஜெனனமான 82-ம் ஆண்டு இத்தேசத்தில் வந்து போதித்தாரே யன்றி வெள்ளைக்காரரால் நூதனமாகப் போதித்தநில்லையே. இதன்றி இவ்வேதம் உலக ஆரம்பந்தொட்டு கடவுளால் கொடுக்கப்பட்ட தெப்படியென்றால்,கடவுள் ஆதி மனிதனை சிருஷ்ட்டித்தபோது அவனிருதயத்தில் தெள்ளறிவாகிய ஞானத்தை முதல் எழுதினர். அதுவே இயல்வேதமென்று சொல்லப்படும். ஆதிமனிதனுடைய சந்ததியார் பாவத்தினிமித்தம் அதினின்று வழுவிப்போனதால் உலகமுண்டாகி 2514-ம் ஆண்டு மோயீ சென்பவரைக்கொண்டு அதையேபத்து கற்பனையாகக் கற்பலகையிலெழுதித்தந்தார். இதைத்தான் வரிவேத மென்னப்படும். மீண்டும் உலகமுண்டாகி 4004-ம் ஆண்டில் உலக இரட்சகர் மனிதாவதாரஞ்செய்து அவ்வேதத்தையே தமது திருமேனியாகிய ஏட்டில் தமதுஉதிரத்தால் அருள்வேதமாக எழுதித்தந்தார். அதெப்படியெனில் இயல், வரி, அருள் என்னுங் குறிப்புதோன்ற மூன்று ஆணிகளால் தமது திருமேனியிலெழுதி தமது பரிசுத்த உதிரத்தால் முத்திரித்து பிதாசுதனிஸ்பரீத்து சாந்துவென்னுந் திருநாமத்தால் தந்தருளினர். இதுவே சத்தியவேதமென்னப்படும். இதிப்படியிருக்க அறிவீன இந்துக்கள் இது வெள்ளைக்காரர் வேதமென்றும் கிறீஸ்துவேதம் நூதன வேதமென்றும் தங்கள் வேதம் சதுர்யுகங்களா யுண்டாயிருக்கிற தென்றும் உலக உற்பத்திகணக்கு தெரியாமல் பெருமை பாராட்டுகிறதற்கு காரணமென்னவெனில் தங்கள் சாஸ்திரமாகிய சூரிய சித்தாந்தத்தில் கிரேயுகத்துக்கு வருடம் 17 லட்சத்து 28000 மென்றும் திரேதாயுகத்துக்கு வருடம் 12 லட்சத்து 96000 மென்றும் துவாபரயுகத்துக்கு வருடம் 8 லட்சத்து 64000 மென்றும் கலியுகத்துக்குவருடம் 4 லட்சத்து 32000 மென்று சொல்லுகிறார்கள்.

இதிப்படியிருக்குமாகில் பவிஷியோத்தர புராணத்தில் கிரேதாயுகத்துக்கு வருடம் 24 லட்சமென்றும் திரேதாயுகத்துக்கு வருடம் 16 லட்சமென்றும் துவாபரயுகத்துக்கு வருடம் 10 லட்சமென்றும் கலியுகத்துக்கு வருடம் கொஞ்சங் குறைய 5 லட்சமென்றும்

தேவிபாகவதத்தில் கிரேதாயுகத்துக்கு வருடம் 20 லட்சமென்றும், திரேதாயுகத்துக்கு வருடம் 8 லட்சமென்றும் கலியுகத்துக்கு வருடம் 6 லட்சமென்றும்.

கிரகமஞ்சரிசோதிட சாஸ்திரத்தில் கிரேதாயுகத்துக்கு வருடம் 1920 என்றும், திரேதாயுகத்துக்கு வருடம் 480 என்றும், கலியுகத்துக்கு வருடம் 240 என்றும் சொல்லி யிருக்கிறதினால் இதில் உண்மையெதுவென்றும் பொய்யெது வென்றும் யெப்படிவிளங்காம லிருக்கிறதோ அப்படியே முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் மனிதரும் உலகத்திலுள்ள மற்ற சமஸ்தவஸ்துக்களும் சீவஜெந்துக்களும் உற்பத்தியான வகையும் பிறந்தவகையும் விளங்காம லிருக்கிறது. இராமாயணத்தில் சொல்லியிருக்கிற தெப்படியெனில் பூர்வத்திலே தக்ஷபிரஜாபதிக்கு 50 பெண்கள் பிறந்தார்களாம், அதிலே 13 பெண்களை காசிப மகாரிஷி கலியாணம் பண்ணிக்கொண்டான் என்றும் அதிதி என்கிறவள் முப்பதது முக்கோடிதேவர்களையும் வாமன் அவதாரமான விஷ்ணுவையும் பெற்றாளென்றம், திதி யென்பவள் அறுபத்தாறுகோடி அசுரர்களைப்பெற்றாளென்றும், தனு என்கிறவள் தானவர்முதலானவர்களைப் பெற்றாளென்றும் மதி யென்கிறவள் மனுஷரையும அவர்களுக் கியல்பாகிய வருக்ஷ முதலியவைகளையும் பெற்றாளென்றும், சுரபி என்கிறவள் பசுக்களையும், சரா சரங்களையும் பெற்றாளென்றும் துரோதவசை யென்கிறவள், கழுதை கடம்பை ஒட்டக முதலியவைகளைப் பெற்றாளென்றும் வினதை, யென்கிறவள் காற்று, இடி, மின்னல், அரு

ணன், கருடன், கூகை, பருந்து, பக்ஷி, இவை முத லியவைகளைப் பெற்றாளென்றும், தாம்பிரை என்கிற வள் ஊர்க்குருவி, கௌதாரி, காடை முதலியவைகளை பெற்றாளென்றும் கழை என்கிறவள் கொடிகளேயும் செ டிகளேயும் பெற்றாளென்றும் கந்துரு வென்கிறவள் பல பல சிரசுகளேயுடைய சர்பஙகளைப் பெற்றாளென்றும் சுதை என்கி கிறவள் ஒரு தலைப்பாம்பு முதலானதுகளைப் பெற்றாளென்று ம் அரிஷ்ட்டை என்கிறவள் ஒணுன் உடும்பு, அணில் முதலிய வைகளைப் பெற்றாளென்றும் இழை என்கிறவள் ஜலசர முத லிய வைகளைப் பெற்றாளென்றும் இராமாயணத்தில் சொல்லி யிருக்கிறது. இது நிற்க,

சிவன் சக்தி தன்னையீன்றுஞ்சக்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திருவரும் புணர்ந்து வுலகுயிரெல்லாமீன்றும்
பவன் பிர்மச்சாரியாவான் பார்வதி கன்னியாவாள்
தவம்புரி ஞானத்தோர்கருத தன்மையாய்த் தெரியுமன்றே

எ-து சிவனிடத்திலே சக்தி பிறந்தாளென்றும் சக்தியி னிடத்திலே சிவன் பிறந்தானென்றும் இருவரும் பெண்சாதி புருஷராகக் கூடிப்புணர்ந்து உலகத்திலுண்டான 80 ஆயிரம சீவப்பிராணிகளை பல பல வேற்றுமையாகப் பெற்றார்களெ ன்றும் இப்படி தாயும் பிள்ளேயும் தகப்பனும் மகளும் வரிசை பாராமற் புருஷனும் பெண்சாதியாகக்கூடி சகல ஜெந்துக்க ளேயும் பெற்ற பிற்பாடு இருவரும் பிரமச்சாரியாகவும் கன்னி கையாகவுமிருப்பார்களென்றும் சொல்லியிருக்கிறது. எசுர் வேதத்தில் ஆதி ஸ்திரி பற்பல மிருகங்களைப் பெற்றதாகச் சொல்லியிருக்கிற கதையும், புராணங்களில் சிருஷ்டிப் பைக்குறித்து சொல்லி யிருப்பவைகளும் ஒன்றோ டொன்று பொருந்தாமல் வேறுபட்டிருப்பதுபோல உலக சிருஷ்டிப்பு கணக்கும் வேறு பட்டிருப்பதினல் எதையும் நம்பவிடமில்லை.

இப்படியே இந்துவேத போதகர் சக்கிலியாகவும், கோ ட்டைக்காரப் பறையனுகவும் மாறிப்போய்க் குலம் புகுந்து

அந்த பசாசுகளை வணங்குகிறவர்களாய் இந்துக்கள் பராபர வஸ்து ஆதி காலத்தில் தந்த மெய் வேதத்தின்படி ஒரே பராபரவஸ்துவை வணங்குகிற தேவபுத்திரரைத் தேவகுலத்தினரென்றும் தேவமக்களென்றும் புகழுகிறதற்குப்பதில், குலம் புகுந்தவர்களென்றும், வெள்ளைக்காரர் வேதத்தாரென்றும் நீசரென்றும் அவ்வேதம் நூதனவேதமென்றுஞ் சொல்லி நிசிதப்படுத்துவது பசாசைக் கும்பிட்டதினால் வந்தபேய்க்குணமல்லவோ? இப்படிப்பட்டவர்களுக்கு என்னஒற்றுமையிருக்கும்?

**மகாவெட்கக்கேடுள்ள லிங்கம் அல்லது ஆண்குறியை வணங்குகிற இந்துமதஸ்தருக்கு என்ன பிரசினேகமிருக்கும்.**

ஒருநாள் கவுதமரிஷி யெழுந்திருந்து ஸ்னானத்துக்குப் போகிறபொழுது எதிரே இந்திரியம் ஓடுகிறதைக்கண்டு ஆற்றுநீரென்று எண்ணி அதைத்தன்கையினாலள்ளினான். அதுஇந்திரியமென்று புத்தியினாலறிந்து இப்படிப்பட்ட போகம்பண்ணுகிறவர்களுடைய லிங்கமும் ஆவடையாரும்அற்றுப் பூமியிலே விழக்கடவதென்று சபிக்க, அப்படியேஆயிற்று. இப்படிக் கவுதமரிஷிசபித்தபின் ரிஷிகளெல்லாருங் கவுதமரிஷியினிடத்தில் ஓடிவந்து நீர் சிவனைசபித்தபடியால் நீ அந்தணர்குலத்திலிருக்க நாங்கள் சகியோமென்று சொன்னமாத்திரத்தில், கவுதமரிஷி அறப்புண்டுபோன லிங்கத்தையும் ஆவடையாரையும் அருச்சனைபண்ணும்படிக்கு இன்றுதானே அளவில்லாத நூல்களை உண்டாக்குவேனென்றுசொல்லி ரிஷிகளுடனே ஒப்புறவானதாகக் கந்தப்புராணத்திலிருந்து உதாரணமாகவெடுத்து இருசமய விளக்கத்திலெழு யிருக்கிறதே.

*இருசமயவிளக்கம் கௌதமர்விடு சிவசாப*
*சம்பந்தப்படலத்தில் விருத்தம்.*

*எகுகின்றதோரளவில் வெள்ளமா யிந்திரியத்து வெள்ளருவி யோடலுங், தேகமுள்ளகான்யாறு தானெனுமெள்ள வங்கையாலள்ளி வேறுமோ, ருகுபுத்தியால்விந்து வென்றுத[illegible] னுன்னியின்ன வாறொழிவிலாதசம், போகமெய்துவார் யோனி லிங்க மிப்போது வீழவிப்பு வியிலென்றனன்.*

ஆண் குறியையும் பெண்குறியையுங்கூட வணங்கும்படி இந்து மதஸ்தருடைய புத்தியைப் பசாசு மயக்கிப் போட்டதென்று இந்துமத ஞானிகளே இவர்கள் மதிகேட்டைக் கண்டு புலம்புகிறார்கள். அதை இதனடியில் காணலாகும்,

சங்கராச்சாரியார், வேறு கவி.

மண்ணிலே பிறந்த கல்லை வகைவகைத்தெரிந்தெடுத்து,
எண்ணிலா விலிங்கமாக்கி யியல்புடன் கோவில் கட்டிப்
பண்ணியே வைத்துப் பின்னும் பலபல பூசை செய்தும்
விண்ணிலே சேர்வதில்லை வீணிலே நரகில் வீழ்வார்.

அகஸ்தியர் சொன்னகவி.

சங்கமதிற் பரப்பிரம மொன்றைப் போற்றிச்
சகல பவந் தீரநன்மைத் தனையே சாற்றித்
துங்கமுறு மிலிங்கமென்றும் பூசைசெய்து
சுணைகெட்ட மாடப்பா சாம்பற்பூசி
எங்கணும்போய் சிவசிவவென்றலைந்தே யேங்கி
எரி நரக வலகை செய்யுமிட றெண்ணுமற்
பொங்கு திரைகடன் மூழ்கித் தீட்சை பெற்றாற்
புகழ்கிரியாங் கைலாயம் போகலாமோ ?

பாரப்பா விப்படியே தெளிவில்லாமற்
பராபரத்தை யறியாமல் மோசம் போறார்
ஆரப்பா வெதிர்ப்பார்கள் என்னோடேதான்
அஞ்ஞான மூடர்கள் தானதையெண்ணார்கள்
வேறப்பா சிவலிங்கம் விஷ்ணுலிங்கம்
வேதாந்தலிங்கமதை விரித்துப்பார்த்தாற்
சேரப்பா கசுமால நாற்ற நாற்றஞ்
சிவம்வேணுமென்று தினஞ்செபத்தைச் செய்யே.

திருவள்ளுவர் சொன்ன ஞானவெட்டி 412-ம் பாட்டு.

ஆத்துமலிங்கத்தமரியைக்கொண்டு அறிவினலர்ச்சனை யான் றறியாமலும், பாத்திபலிங்கம் பிடித்துருமண்தனைப் பாவித்துப் பூசித்துக் கங்கையைத் தூற்றினான், பூத்தமலர்கொண்டருந்த மாவிடைமேற் பொழிந்து அர்ச்சனை வழிந்து பாய்ந்துமே, வேற்றுமை யென்றறியாமலுங்காரிய வீணர்சொற்படியே யானும் பூசித்தேனே.

சாபத்தால் அறுப்புண்டுபோன சிவனுடைய ஆண் குறியையும், இவன் பெண்சாதியின் பெண்குறியையும் சிவ பக்தர் தேவசொரூபமென்று அறிவீனமாகப் பூசிப்பதாலல்லவோ ஞானிகளும் அறிவாளிகளும் அரோசித்திகழுகிறார்கள் இதன் உட்கருத்தென்னவென்று யோசிக்குமளவில், ஆதி மானிடனும் ஆதி மனுஷியுமாகிய விருவரால் பூலோகம் பரம்பினதற்கு மேற்படி அவர்கள் குறிகளே காரணக் கருவியாக விருந்தபடியால் அக்காலத்தின் அறிவீனர் தங்கள் முன்னோரின் இரண்டு குறிகளின் மூலமாய் அவர்களை நினைவுகூரும்படிக்கு அவைகளின் அடையாளங்களைச் செய்து அவைகளை ஆபரணங்களைப்போற் றரித்துக்கொள்ள விரும்பினதேயன்றி வேறல்ல. இப்படியிருந்த மேற்படி குறிகள் இரண்டும் நாளுக்குநாள் புலவராற் புகழடைந்து வணங்கப்பட்டுச் சக்திமுத்திப்போயிற்றென்று தெரியவருகின்றது. ஆதலால் ஞானக்கண் கெட்ட இந்து மதஸ்தருக்கு என்ன பிறர்சினேகமும் ஒற்றுமையுமிருக்கும்.

## மறுபிறப்பில்லையென்றுகாட்டியது.

“எழுபிறப்புந்தீயவை தீண்டாபழிபிறங்காப், பண்புடைமக்கட்பெறின். குறள்” என்பதை முன்னிட்டு, இந்துக்கள் அனேகம்பிறப்பு இருக்கிறதென்கிறார்கள். மேலும் அவனவன் செய்த பாவபுண்ணியத்துக்குத்தக்காப்போல அனேகம் பிறப்பாய் பிறக்கவேணுமென்கிறார்கள். இந்து ஞானிகளிற் சிலர் இப்படிசொன்னது மெய்யென்றாலும் அவர்கள் சத்தியத்தையறியாததற்கு முந்திச்சொன்னதேயன்றி வேறல்ல. அவர்களே அதைமறுத்துச்சொல்லுகிறதாவது.

பட்டணத்துப்பிள்ளை பொதுநூல் 40-ம் பாடல்

*நீற்றிற்கிடந்தென்ன நீராழம்போயென்ன நீ மனமே*
*மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூல்*
*எற்றிக்கிடக்கின்ற வெழுகோடி மந்திர மேதுக்கடா*
*ஆற்றிற்கிடந்து துறையறியாமலலைகின்றரே.*

சிவவாக்கியரின் 95-ம் பாடல் - கவி.

கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணை மோர்புகா
உடைந்த சங்கினோசையு முயிர்களு முடல்புகா
ஒடிந்த வேரடியினிலு திர்ந்த பூ மரம்புகா
இறந்துபோன மானிடரினி பிறப்ப தில்லையே.

திருவள்ளுவரின் பாடல் ஞானவெட்டி 531.

வித்திருந்தால் விளைவுமுண்டு மரந்தானுண்டு
வேரற்றால் மரமதுவுந் துளிர்க்குமோசொல்
சத்தியமா மொழியவுங்காணுண்டே கேளீர்
சாத்திரத்தை மெய்யனவ நமபொணாது
செத்தசவ முயிரொடுங்கி நின்றபோது
சிறு மதலையாய்ப் புவியிற் பிறப்பதேது
இத்தை யினி யறியாத வுலகத்தாசான்
இறந்தவுடல் பிறக்கு மென்றியம்புவாரே.

இப்படியே உலக ஞானிகள் மறுபிறப்பில்லை யென்று சொன்னாலும் மூடஜனங்கள் அதின் தாற்பரியத்தையும் பொருளையு மறியாமல் முற்பிறப்பிற் செய்த பாவபுண்ணியத்துக் கொப்ப அவனவன் மகராசனாகவும், உயர்ந்த ஜாதியாகவும் இழிவான சாதியாகவும், எளியவனாகவும் மூட்டைசுமக்கிறவனாகவுமிருக்கிறானே, நாங்கள் எப்படி மறுஜெனனமில்லையென்றெண்ணுவோமென்கிறார்கள்.

ஒருவன் மகராசனாகவும் மற்றொருவன் ஏழையாகவுமிருக்கிறது லோக பரிபாலனத்துக்காக ஏற்படுத்தப்பட்ட தெய்வச்செயல். மேலும் மகராஜனா யிருக்கிறவன் எப்போதும் மகராசனாகவே யிருக்கிறதில்லை. எளியவனாயிருக்கிறவன் எப்போதும் எளியவனாகவேயிருக்கிறதில்லை; மகராசனாயிருந்தாலும் வியாதியில்லாமலும் மனவருத்தமில்லாமலும் அவமானமில்லாமலு மிருக்கிறதில்லை. இதைப்போலவே யெளியவனாயிருக்கிறவனுக்கு முண்டு. இதைக்கடவுள் தமது அளவறுக்கப்படாத திவ்விய திருவுளத்தின்படி நடத்திக்கொண்டுவருகிறார். ஒருவன் முற்பிறப்பில் புண்ணியத்தைச்செய்ததினால் மகராசனாகப் பிறந்தானென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால் அவன் எப்போதும் மக

ராசனாகவிருக்கிறதை நாம் பார்க்கிறதில்லையே; சிலகாலம் மகாராசனாகவும், சிலகாலம் வியாதியஸ்தனாகவும், சிலகாலம் தரித்திரனாகவும், சிலகால மிருககுணமுள்ளவனாகவும், சிலகாலம் பேதைமைக்குண முள்ளவனாகவும், சிலகாலம் இரக்கமுடைய வனாகவும், சிலகாலம் கடுநெஞ்சுடையவனாகவு மிருக்கிறானல்லோ? இப்படியிருக்க அவன் பூர்வஜென்மத்தில் புண்ணியஞ் செய்தவனாயிருந்தால் அந்தப்புண்ணியத்தின்பலன் மறுபிறப்பில் அவனோடுசாகுமளவும் ஒரேசீரா யிருக்கவேண்டியது நியாயமல்லோ? அப்படிக்கில்லாமல் அவனுடையஸ்திதி அடிக்கடி பற்பலவிதமாக மாறுகிற தல்லாவா? அப்படி யவனுடைய குணமும் செய்கையும் அந்தஸ்தும் சாதியும் மதமும் மாறிப்போகிறபோது, இதுபூர்வசென்மத்துப் பலனென்று எப்படிச்சொல்லக்கூடும். திருவள்ளுவர் எழுபிறப்பைப்பற்றிப் பேசியிருக்கிறாரே யென்பார்களாகும். ஆம், அது எதுக்காகச் சொன்னாரென்றால், மனிதருடைய சுபாவம் எப்போதும் ஒரேதன்மையிலிருக்கிறதில்லை; எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கிறது. இப்போது நன்றாய்ப் பேசிக்கொண்டிருக்கிறவன் கொஞ்சநேரத்துக்குப்பின் தன் துஷ்டகுணத்தினால் மிருகத்துக்குச் சமானமாய்ப்போகிறான். அப்போது நாம் அவனை, அடா, மிருகமேயென்கிறோம். கொஞ்சத்துக்குப்பின் சம்மனசுக்கொத்த விதமாக மாறிப்போகிறான், அப்போது சம்மனசு என்கிறோம், கொஞ்சத்துக்குப் பின் பட்சிக்கொப்பாகிறான். அதெப்படியெனில், கிளிப்பிள்ளை சொன்னதைச் சொல்லுமல்லாமல் வேறேயொன்றையும் சொல்லுகிறதில்லை. அப்போது "அவனென்ன கிளிப்பிள்ளையைப்போல சொன்னதைச் சொல்வானல்லாமல் ஜாஸ்தியா யொன்றுஞ் சொல்லுகிறதில்லை" என்றோ மல்லவா? ஆனதைப்பற்றித்தான் அவர் மனிதனானவன் இப்படிப்பட்ட மாறுபாடான குணங்களுடையவனாயிராதிருக்கும்படி பேசினாரல்லாமல் எழுபிறப்பைப்பற்றி இயலர்த்தமாகப் பேசினதில்லையே?

பாச்சலூர் நங்கைசொன்ன விருத்தம்.

வித்தது மரத்தையீனும் மரமது வித்தையீனும்
பெற்றதாய் பிள்ளையீனும் பிள்ளையு மதுவேயீனும்
மற்றொரு பிறப்புண்டென்று மானிடப் பசுக்களெல்லாம்
பற்றிநின் றலைவதேதோ பாச்சலூர் கிராமத்தாரே.

ஞானவெட்டி 530-ம் பாட்டு.

இருவினையுந் தனையுரைத்து உலகத் தாசான்
இறந்தவுடல் விழுந்தாவி பிரிந்த பின்பு
மறுஜெனன மாகிவந் துட லெடுத்து
வாழ்புவியில் வருவரென்று வகுத்துச் சொல்வார்
கருவடைந்து புவியில்வந்து வயது நூறு
கழிந் ததன்பின் பொழிந்ததென்றுற் குழந்தையாமோ
அறிவில்லார் மறுபிறவி பிறப்பா ரென்றும்
அமட்டிவெகு பொருட்களெல்லாம் பறிப்பாராண்டே.

இந்தப் பாடலில் நல்வினை தீவினையைக் குறித்து இறந்தவனுடைய பிராணன் உடலைவிட்டுப் பிரிந்தபின் மறுஜெனனமாக வேறே உடலெடுத்துப் பிறக்கிறதென்று உலகக் குருக்கள் பொருள் சம்பாதிக்க எடுத்த உபாயமென்கிறார். இவைகளினால் மறுபிறப்பில்லை யென்றும் பொய்க்குருக்களாகியபார்ப்பார் பொருள் சம்பாதிக்க எடுத்த உபாயமென்றும் அதை நம்புகிற இந்துக்கள் மதியீனரென்றும் அஞ்ஞானிகளென்றுந் தெரிகிறதல்லவோ ?

**இந்துக்கள் எம்மதமாயினுஞ் சம்மதமென்று சொன்னாலும் கிறீஸ்துவர்களைப் பகைக்கிறார்கள். கத்தோலிக்கர் சத்தியவேதந்தவிரப் புறமதங்க ளெல்லாம் அபத்த மென்றும், அச்சத்திய மறையைக் கைக்கொள்ளாதவர்களுக்கு இரட்சண்யமில்லையென்றும் உறுதியாக விசுவசித்துக்கொண்டு அஞ்ஞானிகளுக்கு சத்தியமறையி லுட்பட அனுதினமும் பிரார்த்தித்துவருவதால் அவர்களை நேசிக்கிறார்கள்.**

இந்துக்கள் எம்மதமாயினுஞ் சம்மதமென்று சொல்லுகிறதற் கொப்பாக, அவர்களுக்குள் சிவமதம், விஷ்ணுமதம், அருச

மதம், புத்தமதம், சார்வாகம், உலகாயதம், அல்லது நாஸ்திகம் சமணமதம், யாதவம், மாயாவாதம் அல்லது சங்கராசாரிய சமயம், இராணியகர்ப்பம், இராமானுஜீயம், பாஸ்கரம், தத்துவாதம் முதலிய வின்னு மனேகமதங்க ளிருக்கின்றன. இவர்களுக்குள் சிலர் சிவனையும், சிலர் விஷ்ணுவையும், சிலர்சூரியனையும், சிலர் சந்திரனையும், சிலர் பஞ்சபூதியங்களையும் வணங்கிறார்கள். இப்படியே ஒவ்வொருவருந் தேவ னெப்படிப்பட்டவரென்றும், அவருடைய தெய்வீக விலட்சணங்க ளெத்தன்மையானவையென்றுந் தெளியாமல், தங்கள் தங்கள் மனம்போன போக்கே தேவர்களை யேற்படுத்திக்கொண்டு, அவர்களுக்கு வந்தனை வழிபாடுகள்செய்தும், அவர்களைக்குறித்துப் பலபுராணங்களைக் கட்டி பிரஸ்தாபித்தும் வருகிறார்கள். ஆகையால் அவர்களுடைய வேதசாஸ்திர புராணங்களெல்லாந் தவறிப்போன மனுக்குலத்தார்மீது திவ்யகருணைகொண்டு, அவர்களை நல் லொழுக்கப்படுத்தி நித்திய பரமானந்த மோட்சபாக்கியத்துக்குப் பேறுபெற்றவர்களாக்க, ஏகபராபர வஸ்துவாகிய கடவுள்தந்த சத்தியவேத மல்லவென்றும், ஆனால் தங்கள் ஆசாபாசத்துக் கடிமைப்பட்ட வித்துவ புராணிகர் பசாசின் பிரேரேபணத்தால் தங்க ளாபாசவுத்ரேகத்தில் தங்கள் புத்திக்குத் தோன்றின ரூபகாரங்களைக் கற்பனாலங்காரமாகக் கட்டிவைத்தவைகளா யிருக்கின்றனவென்றும் புத்திமான்களா யிருக்கப்பட்ட பேர்கள் எளிதாய்க் கண்டுபிடிக்கலாம். ஆகையா லவைகள் மனிதரிடத்தில் ஆசாபாசத்தை மூட்டி அவர்களை நரகபாதாளத்துக்குக் கொண்டுபோகும் பெரும்பாதைகளாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்டதா யிருக்கிற இந்துமதத்திலிருக்கிற வொருவன் தேவ னுவுதலுக்கிணங்கிக் கிறிஸ்துவனுனல் மற்றவர்களவன்பேரில் திரண்டுருண்டு அடிப்பட்ட பாம்புபோல் சீறி அவனை தூஷித்துப் பேசியேசி, அவனைத் தங்கள் அமிழ்ந்திக்கிடக்கிற அந்தகாரத்தில் திரும்ப இழுத்துக் கொள்ள எவ்விதத்திலும் பிரயாசப்படுகிறார்கள். ஆனலப்படிப் பட்டவன் கிறிஸ்துவேதத்திலுட்படாமல் (Theosophy)பிரம்

மகியானம், (Atheism) நாஸ்திகமதத்திலாவது (Freemasonary) தலைவெட்டி மதத்திலாவது உட்படுவோனாகில், அவன் செய்தது தங்களுக்குச் சர்வசம்மதமென்றாற்போல, அவனை ஏனடாபாவியென்று கேட்பாருமில்லை, விசாரிப்பாருமில்லை, கவலைப்படுவோருமில்லை. இப்படிப்பட்ட துர்மதங்களிலுட்படுகிறவன் விஷயத்தில் மவுனமாயிருக்கிற இந்துக்கள் கிறிஸ்துவேதத்தைக் கையேற்கிறவனைமாத்திரமே குறைவாய்ப் பேசி ஈனப்படுத்துவது பிறர்சிநேகக் கிருத்தியமோ, துவேஷக் கிருத்தியமோவென்று அவர்களே யோசித்துச் சொல்லட்டும். ஆனால், அவர்களுடைய விபரீத நடத்தைக்கோர் பலத்த நியாயமுண்டு. அதாவது, சத்திய கிறீஸ்துவேதமானது நிஷ்களங்க நிர்ம்மல சுபாவநன்மைச் சுரூபியும் ஏகபராபர வஸ்துவுமாகிய மெய்யங்கடவுளால் அருளப்பட்டதால் அது பரிசுத்தமானது, அதின் போதனைகளும் பரிசுத்தமானது. அது மனிதரை ஏவுகிறதும் பரிசுத்தத்தனத்துக்கேயாம். சுத்தத்துக்கும் அசுத்தத்துக்கும் பொருத்த மில்லாததுபோலே பரிசுத்தமாகிய சத்தியவேதத்துக்கும் அசுத்த அரூபியாகிய பசாசுக்கும் பொருத்த மில்லாமையால், அதின்மட்டில் அதற்கு எப்போதும் ஜென்மப்பகையாமே. அப்படியே அதின் சந்ததியாருக்கும் அத்திவ்விய வேதத்தின்மட்டில் மாறாப்பகையாமே. பசாசின் சந்ததியார் ஆரெனில், பசாசினேவுகோளாலுண்டான பொய்மதங்களி லுட்பட்டிருப்பவர்க ளெல்லோரும் அதின்சந்ததியா ரென்னப்படுகிறார்கள். அதெப்படியெனில், கடவுளானவர் ஆதிகாலத்தில் பழம்பழி விளைத்த சர்ப்பத்துக்குள்ளிருந்தச் சாத்தானைப்பார்த்து "உனக்கும் ஸ்திரீக்கும், உன்வித்துக்கும் அவள்வித்துக்கும் பகையுண்டாக்குவோம். நீ யவள் குதிக்காலைக் கடிப்பாய். அவளுன் தலையை நசுக்குவாள்" என்று திருவுளம்பற்றினார். இந்த தேவோகசியத்த தீர்க்கதரிசனத்தில் "உன்வித்து" என்பதினால் பசாசின் ஏவுதலை நிறைவேற்றுகிற சகல துஷ்ட மனிதரும், "அவள் வித்து" என்பதி

ஞல், மாசுகொண்ட மனுக்குலத்தை ஈடேற்ற அவளாகிய ஓர் ஒப்பற்ற கன்னிகையான உலகமாதாவினிடத்தில் சுபாவாதீத மான வகையாய் அற்புதயேரையாய் மானிடரூபமெடுத்த உலக ரட்சகராகிய கிறீஸ்துநாதர் குறிக்கப்படுகிறாரென்றும் வேத பாரகரெல்லோரும் நிச்சயிக்கிறார்கள். ஆகையால் பலபல துர் மதஸ்தர்களாகிய பசாசின் சந்ததியார் கிறீஸ்துநாதரைப் பகைப்பதுபோலவே, அவரேற்படுத்திய ஞானஸ்நானத்தினுல் ஞான ஜெனனமடைந்து சர்வேசுரனுக்குப் பிள்ளைகளானதினுல் தேவமக்களென்னப்படுகிற கிறீஸ்துவர்களையும் விரோதித்து வர்மித்துப் பகைத்துவருவது பிரத்தியட்சப்பிரமாணமாயிருக்க இதற்கு வேறு அத்தாட்சிதேவையில்லையே. ஆகையால் கிறிஸ்துவர்களைப் பகைக்கிற புறமதஸ்தர்கள் சத்தியவேதத்தின் மேல்பசாசுகொண்ட பழம்பகைக்குச்சுதந்தரக்காரராயிருப்பதைப்பற்றி அவர்களிடம் பிறர் சிநேகமென்பதிருக்க நியாயமில்லை யென்று பட்டப்பகல்போல் காட்டினுற்போலாயிற்று.

கத்தோலிக்குக் கிறிஸ்துவர்களோவெனில் தாங்கள் கைக்கொண்டனுசரித்து வருகு சத்தியவேதந்தவிர மற்றெந்த மதமுஞ் சம்மதமென்னமாட்டார்கள். அதேனெனில் அவர்கள் வணங்கும் பிறர் சிநேகஊறணியான தேவன் மட்டில்லாதமகத்வ விசாலசகிதரும் ஒப்பில்லாத சமானரகிதரும் தவறில்லாச் சத்திய சுரூபியுமாகக்கொள்ள, அவர்மனிதரை யேய்க்கவுமாட்டார், மனிதரால் ஏய்ப்புண்ணவுமாட்டார். மீளவுமவர் எத்தன்மையானவரோ வெனில், தமது மகிமையையும் தமக்குச் செல்லவேண்டிய நமஸ்கார நைவேத்தியங்களையும் மனிதர் தமக்குச்செலுத்தவேண்டிய நேசபட்சத்தையும் மற்றெவரும் பங்கிட்டுக்கொள்ளச் சகியாதசினேகவைராக்கியர். ஆகையால் "உனக்குக் கர்த்தாவாகிய சர்வேஸ்வரன் நாமே, நமக்குமுன்பாக வேறே சர்வேசுரன் உனக்கில்லாமல் போவதாக," என்றும் மனிதர் தம்மை நேசிக்கவேண்டிய முறைகற்பித்து, "உன்தேவனுகிய கர்த்தாவை உன்முழுஇருதயத்தோடும், உன்முழு ஆத்துமத்தோடும், உன் முழுச்சத்துவத்தோடும், உன் முழுமனதோ

உ. வெ. சாமிநாதையர் நூல் நிலையம்



மும், உன்புறத்தியானை உன்னைப்போலும்சிநேகிப்பாயாக"வென்றும் நிரூபித்தார். இதற்குத் திருஷ்டாந்தம், தமதுபேரில் வைக்கவேண்டிய நேசபட்சத்தைமறந்து, தமக்குப்பதிலாகப் பொன்னாற்செய்த கன்றுக்குட்டியைவைத்து அதற்குப் பூசை நமஸ்காரஞ்செய்த இஸ்ரவேல் ஜனர்களில் இருபத்துமூவாயிரம்பேரை வாளுக்கிரையாகக் கட்டளையிட்டார். மீளவும், தாம் அந்தச்சனங்களுக்குச் செய்த அதிசயாற்புதங்களின் குறிப்படையாளங்களடங்கிய உடன்படிக்கைப்பெட்டியைக் கவர்ந்துகொண்டுபோய், பிலிஸ்தியரென்கிற அஞ்ஞானஜனங்கள் அதைத் தங்கள் பொய்த்தேவனின் ஆலயத்தில் வைக்க, தாகோனென்னும் அப்பொய்த்தேவனின்விக்கிரகம் உடன்படிக்கைப் பெட்டியின்முன் முகங்குப்புறவிழுந்து சிரழிந்து கிடக்கச் செய்து தமது தேவமகத்துவத்தை விளங்கப்பண்ணினார். அதெப்படியெனில், மச்சாவதாரஞ்செய்த விஷ்ணு விதைருவைப் போல மேற்பாதி மனிதரூபமுங் கீழ்ப்பாதி மச்சரூபமாய்ச் செய்யப்பட்ட தாகோன்(Dagon) என்னும் விக்கிரகம் உடன்படிக்கைப் பெட்டியின்முன் முதல்நாள் முகங்குப்புறவிழுந்து கிடந்தது. அதை அக்கோவில்பூசாரிகள் பார்த்தபோதுஎடுத்து அதின்ஸ்தானத்தில் வைத்து மறுநாள்காலையில் வந்துபார்க்க, தாகோன்உடல் பெட்டிக்குமுன்னும் அதின்தலையும் இரண்டு கைகளும் வாசற்படியின்மேலும் வெட்டப்பட்டுக் கிடந்தன, ஆனதுகொண்டு தாகோன்கோவில் பூசாரிகளும் தாகோன்கோவிற்குள் போகிறயாவரும் இந்நாள்வரைக்கும் வாசற்படியை மிதிக்காதிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மகோன்னததேவன் மனிதர்களுக்குக் கட்டளையிட்டருளின திவ்யவேதமானது அவர்களுக்கு முத்திநெறியைக்காட்டவும் அவர்கள் மோட்சக்கரையேறி நித்தியபேரின்ப சுகானுபவராய் வாழவும் அவர்கள் இம்மையில் அனுஷ்டிக்கவேண்டிய சாமோபாயவழிவகைகளை ல்லாங் கொண்டிருக்கிற சம்பூரண அட்சயபாத்திர [illegible] லப்பில்லாத சத்தாமிர்தமானது சரங்காய்ந்தவனுக்குச் [illegible]

ய்த்தோன்றுவதுபோல, அத்திவ்வியவேதத்தை அனுசரிக்கிற வர்களுடைய மனக்கெடுதியாலது குறைவாய்க் காணப்படுமே யொழிய அது தன்னியல்பிலே தெவிட்டாத தெள்ளமிர்தமா மே.

பசாசோவெனில் கர்த்தத்துரோகியாகவும் பொய்யின் தகப்பனுகவும், தேவ மகிமையைத் தனக்குத் திருடிக்கொ ள்ளச் சதாமுயலுங் கள்ளனுகவுமிருப்பதால், வழிமறித்தடி க்கும் வல்லடிக்காரனைப்போல வந்தமட்டும் போதுமென்று ஒவ்வொரு மதஸ்தருடைய கள்ளவழிக் கிணங்கத் தானே தெ ய்வமென்றுக்காட்டி, அவர்கள் தன்னை நம்பத்தக்க சில அதிச யமான காரியங்களை அவர்கள் மனுேபிரமைக்குத் தக்கபடி கா ண்பித்து பயமுறுத்தியும், அவர்களுக்கு இதமானவைகளைச் செய்து பேதைகளைத் தன் வசப்படுத்தியுங் கொள்ளுகிறுன். அவன் அசுத்த வரூபியும் பொய்க்குப் பிறப்பிடமும் இருளின் வேந்தனும் நன்மைகுச் சத்துருவுமாகையால், பரிசுத்தத்துக்கு ம், சத்தியத்துக்கும், ஒளிக்கும், நன்மைக்கும், விருத்தமானதெ ல்லாம் தனக்கு பொருத்தமானதென்று சத்தியவேதத்துக்கு விரோதமான எவ்வகைப்பொய்மதமுந் தன்னடியாரைச் சம்ம தமெனக் கொள்ளச்செய்கிறுன்.

கத்தோலிக்கரென்னுஞ் சத்தியவேதக் கிறீஸ்துவர்களோ வெனில் மேலேகாண்பித்த சிநேகதேவனுலருளப்பட்ட ஏக சத்தியவேதமுடையவர்களாகையால் அவர்களந்த வேதநாயக னுகிய ஏகபராபரக்கடவுளொருவரையன்றி வேறு தேவனை ய றியார்கள். அவரருளிய ஏகவேதந்தவிர மற்றெந்த வேதம தமுந் தங்களுக்குச் சம்மதமென வெண்ணுர்கள். ஆகையாலவ வர்கள் ஒரேதெய்வமும், ஒரேவிசுவாசமும், ஒரேஇஸ்பிரீத்து வும், ஒரேஞானஸ்நானமும் ஒரேமந்தையும், ஒரேமெய்ப்பனு முண்டென்றும். நோயேயென்பவரின் பெட்டகத்திலிருந்தவ ர்கள்தவிர அதற்குப் புறத்தியிலிருந்தவர்களெல்லோரும் சலப் பிரளயத்தி லமிழ்ந்துப்போனதுபோல, கத்தோலிக்கென்னும்

ஏகசத்திய திருச்சபையி[illegible]ல்லாதவர்கள் யாவரும் கதியேற மாட்டார்களென்று [illegible] உறுதியோடு விசுவாசிக்கிறார்கள். இந்துமத ஞானிகளி[illegible] ஒருவரா[illegible] தொங்கணரென்பவர் சொன்னவாக்கியம் இ[illegible] சத்திய[illegible]க்குப் போரந்த திருஷ்டாந்தமாயிருக்கிறதைப் பாரு[illegible]ங்கள்.

கடவுளோ ரொருவனுண்டேல் வேதமொன்றே
காரணசற்குருதீட்சை ஞானமொன்றே
அடவுடனே அவரருளும் பதவியொன்றே
அம்புவியில் மனுப்பிறவி யானதொன்றே
நடைவழியும் பலமனுவோர்க் கொன்றேயல்லால்
நால்வேதமறுசமயம் நடக்கைவேறாய்த்
திடமுடையதேவர்பல ருண்டென்போர்கள்
தீநரகுக்காளாவார் திண்ணந்தானே.

ஆகையால், ஒரேஏகமெய்யான தேவனையறிந்து வணங்கி, அவரொருவரையேநேசித்துப் பட்சிகரித்து, அவரொருவருக்கே சேவைசெய்யுங் கத்தோலிக்குக் கிறீஸ்தவர்கள், தன்நேசபத்தாவுக்கிரண்டகமெனப் பரமுகம் பாராத பதிவிரதைக்கொப்பாகவும், கண்டகண்ட வஸ்துக்களை யெல்லாம் தெய்வமாக அங்கீகரிக்கிற புற மதஸ்தர்கள் காசுகாட்டுகிறவர்களுக்கெல்லாங் கைநீட்டித் தங்கள் நேசத்தை விற்கிற விலைமாதர்க்கொப்பாகவு மிருக்கிறார்களென்று தெளிவாயறியலாம்.

## அஞ்ஞானிகள் பசாசின் மக்களாயிருக்கிறார்க ளென்பதற்குச் சில இந்துமத ஞானிகளின் மேற்கோளும், அவர்கள் உலகத்தாராயிருக்கிறார்க ளென்பதற்குத் திருஷ்டாந்தமும்.

விஷ்ணு புராணத்தில் விஷ்ணு சிவனை நோக்கிச் சொல்லுகிறதாவது நீயும் நானும் வேற்றுமையாயிருக்கிறதில்லை. 'இவ்வுலகமானது' தேவர்களோடும் பசாசுக்களோடு மனுஷர்களோடும் நீயும் நாமாயிருக்கிறதொழிய வேறல்லவென்பதால் விஷ்ணுவை ஆராதிக்கிற இந்துமதஸ்தர் பசாசையும் ஆராதிக்கிறார்கள்.

2-வது சிவன் பூதநாதனென்னப் படுகிறான். பூதங்களென்றால் பயங்கரமுள்ள பசாசுக்களென்னப்படும். மேலும் பேயோடாடியென்னவும் படுகிறான். தன்னேடொத்தவர்களோடு ஆடுகிறது வழக்கமாதலால் இவனும் பசாசென்பதற்குச் சந்தேகமில்லை. இவனை ஆராதிக்கிறவர்கள் பசாசைத்தான் ஆராதிக்கிறார்களென்பதற்கு ஐயமில்லை.

3-வது சிவனுடைய மூத்த குமாரனாகிய விக்னேசுரன் கணேசனென்னவும் படுகிறான். கணேசனென்றால் பேய்க்கணங்களின் தலைவனென்னப்படும். இவனை ஆராதிக்கிறவர்கள் பேய்க்கணங்களின்தலைவனையே ஆராதிக்கிறார்கள். ஆகையால்தான் இந்துமதஸ்தரை பசாசின் மக்களென்று சொல்ல இடமாயிற்று திருஷ்டாந்தம்.

தாய்தனைப் பெண்டாய்வைத்துத் தலைதனில்சுமந்தோன்றானும்
வாய்தனில் மகளைவைத்து மனைவியாய்ப் புணர்ந்தோன்றானும்
ஆயர்தன் குலத்தைக்கற்பு வழித்தவன்றனையுமிந்தப்
பேயரைத் தெய்வமென்னும் பெயர்களும் பேயராவார்.

மனிதனானவன் மட்டில்லா மகத்துவமுள்ள கடவுளின் திவ்விய கற்பனையை அகங்காரத்தால் மீறினபடியால் மட்டில்லா தோஷமுள்ள கர்த்த துரோகத்தைக் கட்டிக்கொண்டு சர்வேசுரனுடைய அநந்த நீதிக்கு உத்தரவாதியானான். மட்டில்லாத தோஷத்துக்கு மட்டில்லாப் பரிகாரம் வேண்டியதினால், தான் மட்டுள்ளவனாகக் கொள்ள, அந்தமட்டில்லாத பிராயச் சித்தத்தைச் செய்ய வகையறியாமல் தானுந் தன் சந்ததியாரனைவரும் நித்திய வாக்கினைக்கு ஆளாயிருக்கையில், அவனிடத்திலுள்ள தேவரூப ரேகை யமைந்த ஆத்துமத்தி னிமித்தமாகக் கரைகாணாக் கருணைக்கடலோனாகிய சுதனாகிய சர்வேசுரன் அவனுடைய நிற்பாக்கியத்துக் கிரங்கி அவனுக்காகத் தமது தேவபிதாவுக்குப் பிணைப்பட்டு அவன் செலுத்தவேண்டிய பரிகாரக் கடனைத் தம்மேல் போட்டுக்கொண்டு, மனுஷ சுபாவத்தைப் பரிக்கிரகம் பண்ணி, அதனோடு தமது தேவ சுபாவத்தைப் பொருத்தி மாம்ஸ ஐக்கியஞ்செய்து, இருசுபாவ மமைந்த வொரு ஒப்பற்ற மகாபுருஷனாகவும், மெய்யான தேவனு மெய்யான மனுஷனு மொன்றாகிய நரதேவனாகவும், உலகரட்சகனாகவும் லோகத்தில் தோன்றி, நரர் நாவுக்கெட்டாத ஞானங்கள் மொழிந்து தமது திவ்விய வேதத்தைப் போதித்து, பரலோகத்துக்குரிய தமது ஞானராச்சியமாகக் கத்தோலிக்கென்னுமொரே திருச்சபையை ஸ்தாபித்தார். இதற்கு வாயிலாக ஞானஸ்நான மென்னுந் தேவத்திரவியானு மானத்தை யேற்படுத்தி இந்தத் திருச்சபைக்குப் பரிபாலகராகத் தமது அப்போஸ்தலர்களை நியமித்து அவர்களுக்கு ஆக்கியாபித்ததாவது. "ஆகையால் நீங்கள்போய்ச் சமஸ்த மனுக்குலத்தோரையும் உபதேசித்து, பிதாவுடையவும், சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினாலே யவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நானுங்களுக்கு கற்பித்த யாவையும் அனுசரிக்க அவர்களுக்குப் படிப்பியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சணியம் அடைவான்" என்று திரு

வளம்பற்றினூர். ஆகையால் கிறிஸ்து நாதனை விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவர்க ளெல்லாரும் சர்வேசுரனுக்குந் திருச் சபைக்கும் பிள்ளைகளாகி ஞானப்பிரகாச மடைந்து மோட்சத்துக்குச் சுதந்தரவாள ராகிறூர்கள். சேசுக் கிறீஸ்து நாதர் கூறிய உறுதிமொழிகளாவன. நான் உலகத்தின் ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்செல்லுகிறவன் இருளில் நடவாமல், நித்திய சீவியத்தின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (அரு - 8 - 12) ''என்பேரில் விசுவாசமா யிருக்கிற வெனும் இருளில் நிலைகொள்ளாதபடிக்குப் பிரகாசமாகிய நான் உலகத்தில் வந்தேன்'' (அரு - 12 - 46) ''நானே வழியும் உண்மையுஞ் சீவியமுமா யிருக்கின்றேன்'' (அரு - 14 - 6) ''என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்தினின்று உண்டான தல்ல'' (அரு - 78 - 46) ''திருச்சபையின் சொற்படி கேளாதவன் அக்கியானியாகவும் ஆயக்காரனுகவும் உனக்காகக் கடவான்'' (மத 18 - 17) சேசுக்கிறீஸ்துநாதனைக் குறித்து அர்ச். அருளப்பர் சொன்னதாவது ''அவ்வொளி அந்தகாரத்தி னிடையே துலங்குகின்றது. அந்தகாரமோ அதைக் கண்டறிந்ததில்லை'' (அரு - 1 - 5) இந்த வுலகத்தில் தோன்றிவருகிற எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியானவ ரிருந்தார். அவர் உலகத்திலுமிருந்தார் அப்படியாகிலும் உலகமானது அவரை யறிந்து கொண்டதில்லை (அரு - 1 - 10) சேசுக் கிறீஸ்து நாதனையும் அவர் யேற்படுத்திய திருச்சபையையுங் குறித்து பூர்வீக தீர்க்க தரிசனங்களை யிங்ஙனமெடுத்துக் கூறினுல் இச்சிறு பிரபந்தமானது குறித்த அளவுக்கு மிஞ்சுமென்றஞ்சி அவைகளை நிறுத்தவேண்டிய தானது. இப்பிரபந்த முடிவானபின் சேசுக் கிறீஸ்து நாதருடைய இலட்சண மகிமைகளைப் பிரத்தியேகமா யெடுத்துப் பேசப்படும். இது நிற்க, கிறீஸ்து நாதர் தமது ஞானராச்சியத்தின் பிரசைகளாகிற வர்களுக்குப் போதித்த மேலான உணர்ச்சிகளாவன. பூமியில் உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். இவ்விடத்

தில் அவைகளைத் துருவும் புழுவும் அழிக்கிறதுமன்றித் திருடரும் கோண்டித் திருடுவார்கள். ஆனால் பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அவ்விடத்திலவைகளைத் துருவும் புழுவம் அழிக்கிறதுமில்லை. திருடர் கோண்டித் திருடுகிறதுமில்லை (மத - 6 - 19 - 20) கடைசியாய்த தம்மைப்பற்றி அவர்கள் அனுஷ்டிக்கும் சற்கிரிகைகளுக்குச் சம்பாவனையாக அவர் திருவாய்மலந்தருளின எட்டுப் பாக்கியங்களாவன. 1 மனதரித்திரர் பாக்கியவான்கள், ஏனெனில் மோட்சராச்சியம் அவர்களுடையது. 2 - சாந்தகுணத்தோர் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். 3 - அழுவோர் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே ஆறுதலடைவார்கள். 4 - நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே திருத்தி யடைவார்கள். 5 - இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே இரககமடைவார்கள். 6 - தூய இருதய முள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்களே சர்வேசுரனைத் தரிசிப்பார்கள். 7 - சமாதான குணத்தோர் பாக்கியவான்கள், ஏனெனில் சர்வேசுரனுடைய பிள்ளைகளென்னப்படுவோர்கள், 8 - நீதியி னிமித்தம் உபத்திரவப் படுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் மோடராட்சியம் அவர்களுடையது. இதற்குப்பின் தம்மைப்பற்றி அவர்கள் செய்யும் பரித்தியாகங்களினாலும் அனுபவிக்கும் துன்ப துரிதங்களினாலும் அவர்கள் மனஞ் சோம்பித்தளர்ச்சி யடையாதபடிக்கு அவர்களுக்கு உற்சாகமாக அவர்கூறிய ஆறுதல் வசனமாவது. என்னைப்பற்றி மனிதர் உங்களை சபித்துத் துன்பப்படுத்தி உங்கள் பேரில் சகலதின்மையும் அபாண்டமாய்ச் சொல்லும்போது நீங்கள் பாக்கியவான்கள். அதினாலே பரலோகத்தில் உங்கள் சம்பாவனை ஏராளமா யிருக்கின்றமையால் சந்தோஷித்து அக்களியுங்கள் (மத் - 5 3 - 12) எனது நாமத்தி னிமித்தம் யாவராலுந் துவேஷிக்கப்படுவீர்கள். ஆயினும் முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவன் இரட்சணிய மடைவான். (மத் - 10 - 22.)

[மூன்றுவகையாக மனதரித்திரத்தை யனுசரிக்கிறவர்களுண்டு 1. சர்வேசுரனை பற்றித் தங்களாஸ்த்திகளை யெல்லாம் விட்டுவிடுகிற சன்னியாசம் முந்தின அந்தஸ்தாம் 2. ஆஸ்திகாரராயிருந்தும் அந்தப்பொருட்களின் மேல் பற்றுதல் கொள்ளாமல் ஐவேசுக்குத்தக்க தர்மஞ்செய்து ஞாயத்துக் கொத்தபடியனுபவித்துச் சர்வேசுரனைப் பற்றி அதையிழந்து போகச்சமயம் வந்தாலும் அதற்காயித்தமா யிருக்கிறது இரண்டாம் அந்தஸ்தாம், 3- ஐவேசற்ற தரித்திரர்களாம். அவர்கள் அதனால் முறைப்படாமலும், ஆஸ்திக்காரராக வேணுமென்கிற மிதமிஞ்சின ஆசைகொள்ளாமலும் ஆண்டவர் தரச்சித்தமா யிருக்கிறது மாத்திரம் போதுமென்றும் அதிலே திருப்தியா யிருக்கிறது மூன்றும் அந்தஸ்தாகும்.

பூமியை சுதந்தரித்துக் கொள்வார்களென்று சொல்லும் போது அர்ச்சிய சிஷ்டர்களுடைய பூமியாகிற மோட்சராட்சியத்தைச் சுதந்தரிப்பார்களே யல்லாமல், இவ்வுலகத்திலே முதலாய்த் தங்களுக்கோர் சத்துராதியு மில்லாமல் மனப்பிரியம் போலச் சொந்தபூமியை யனுபவித்து வருவார்களென்றுஞ் சொல்லப்படும்.

நீதியின்பேரில் பசிதாக முள்ளவர்கள் யாரென்றால் சகல புண்ணிய சாங்கோபாங்கத்தின் பேரிலும் ஆசையுள்ளவர்கள் தான். சுவிசேஷப்பொருத்தம், 15 - அதி]

மேற்சொன்ன தேவவாக்கியங்களை நடுநிலைமையோடு சீர் தூக்கிப்பார்த்தால் சத்தியவேத கிறீஸ்துவர்கள் இவ்வுலக சுக செல்வங்களைத் திரணமாக மதித்து மோட்சத்தின் பேரில் மாத்திரம் தங்கள் மனப்பற்றுத லெல்லாம்வைத்து நடக்கவேண்டியவர்களானதால், இவ்வுலகத்திலிருந்த போதிலும் பரலோகத்தாரா யிருக்கிறார்களென்று காணலாம். அஞ்ஞானிகளோ வெனில் புண்ணியத்தின் மேன்மையி லட்சணத்தைச் செம்மையாய்க் கண்டுபிடியாமல் இவ்வுலகத்தின் அழிவுக்குரிய சிற்

றின்பச் சுகபோகவின்பங்களே அட்சயபாக்கிய மென்றெண்ணி அஷ்டசெல்வம் அஷ்டதன முதலிய விழலான பாக்கியங்களைக் கட்டிவைத்துக்கொண்டு அவைகள் பேரில் முழுமனப் பற்றுதல்வைத்து நாடித்திரிவதாலும் மறுலோகத்திலும் சரீர சுகபோகானுபவம் சித்திக்குமென்று இலவுகாத்தகிளிளைபோல் வெறுமனேநம்பிச் சத்தியத்தையறிய அசட்டை பண்ணுவதாலும், அவர்கள் உலகத்தாரெனக் கரதலா மலகம்போல் காணலாயிருக்கிறது. ஆனால் கிறீஸ்துவர்களிலும் அனேகர் தனிகராயிருக்கவில்லையோ வென்று ஆட்சேபிப்பார்களாக்கும். சிலர் தனவந்தர்களாயிருக்கிறார்க ளென்பதுள்ளதுதான். அப்படிப் பட்டவர்கள் தாமரையிலையானது தண்ணீரில் பிறந்திருந்தும் தண்ணீரைத்தாவாமல் தண்ணீருக்கு மேலாகத் தலைநிறுவிநிற்பதுபோலவும் உள்ளிருந்து மொட்டாத புளியம்பழத்தைப் போலவும் இவ்வுலகத்தை யனுபவித்தாலும் அனுபவியாதவர்களைப்போலிருக்க வேண்டியவர்கள். ஆனால் கிறீஸ்துவர்களில் பெரும்பாலர் வறிஞரென்பது உலகமறியாத காரியமல்லவே. ஆகையால்" பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை,, என்னும் குறள்வாக்குக்கொப்ப அவர்களுக்கும் உலகத்துக்கும் ஏழாம் பொருத்த மென்பதற்குச் சந்தேகமில்லை.

## கிறீஸ்துவர்கள் அரசராக விருக்கிறார்களென்பதற்கும், அவர்கள் கிறீஸ்துவர்களென் றழைக்கப்படுகிற தற்கும் காரணம் காண்பிக்கப்படுவது.

கிறீஸ்துவர்கள் பிதாசுதன் இஸ்பிரீத்து சாந்துவென்னுந் திரியேகக்கடவுளின் திருநாமதேயத்தால் ஞானஸ்நானம்பெறுகிறபடியினாலே, அவர்கள் தேவமக்களா யிருக்கிறார்களென்பது ஏற்கனவே காண்பித்தாயிற்று. இனியவர்கள் இராஜபுத்திரராகவும் இருக்கிறார்க ளென்று காண்பிக்கப்படும். இப்படிச்செய்வதற்கு முந்திச்சேசுகிறீஸ்து நாதருடைய தெய்வீகமனுஷீக இராஜரீகத்தைச் சற்றேவிசாரிப்போம். அவரிடத்திலடங்கிய தேவ சுபாவத்தால் அவர்சர்வலோகம் படைத்த சர்வவல்லப

க்கடவுளும், காலாகாலங்களுக்கு முன்னிருந்த அநாதிகாலாகாலனும், சகலவஸ்துக்களினூடே செல்லாநின்ற நிராகாரசர்வாந்தரியாமியாயும், சமஸ்த லோகங்களினாலும் மட்டிடப்படாத சர்வவியாபகனும், எப்பொருட்கு மிறைவனாகிய ஆதிகாரணருமாமே. ஆகையாலவர் சிருஷ்டிதிதிலயகாரண பூதரானமுத்தொழிற்பகவனும், ஞானம், தயை, நீதியென்னும் "மூவிரலான்மூகந்தேந்து முதலோ" னாகிய மூவுலகாதார மூவுலகாளியும், நல்லோர்க்கு நற்கதியும் புல்லோர்க்குத்துற்கதியுமளித்துத் துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமுஞ் செய்கிற சாயாதநீதிபரனுமாகையால், அவர் தேவாதிதேவனுங் கர்த்தாதிகர்த்தனும், இராஜாதி ராஜனும் தளங்களுக்குக் கர்த்தாவாகியமும்முறைபரிசுத்தமான சர்வேசுர சார்வபௌமன் என றுஞ் சத்தியவேதத்தில் புகழப்பட்டிருப்பதினாலே, அவருடைய தெய்வீக ராசாங்கந் தனக்குத் தானே விளங்கும். அவருடைய மனுஷீகத்திலுமவர் இராஜ பிரபுத்துவமுடையவர். அவர்தாமேற்படுத்தப்பேறாகிற சத்திய திருச்சபையாகிற ஞான சமஸ்தானத்தில் என்றென்றைக்கும் இராச்சியபாரம் பண்ணத் தேவபிதாவானவரே அவரை யபிஷேகம் பண்ணி, அபிஷேகம் பண்ணப்பட்டவரென்றர்த் தந்தரும் "மெசியா" அல்லது "கிறீஸ்து" என்கிற நாமங்களினால் தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர் மனுஷாவதாரஞ் செய்யுமுந்தியே உலகத்துக் கவரை வெளிப்படுத்தினார். இதுவுமன்றி அவருடைய மனுஷீகத்தி லவருக்கு மாதாவாக நித்தியத்தில் நியமனம்பெற்ற அமலோற்பவியாகிய கன்னிமரியாயிக்கு அவருடைய மனுஷாவதாரப் பரமவிரகசியத்தின் ஸ்தானுபதிக்கஞ் செலுத்தவந்த அதி தூதராகிய வானோன் அவளை நோக்கிச் சொன்னதாவது. "இதோ உமது உதரத்தில் கர்ப்பந் தரித்து ஓர் குமாரனைப் பெறுவீர், பின்னு மவருக்குச் சேசுவென்னு நாமகரணஞ் சூட்டுவீர். அவர் மகத்துவமுள்ளவரா யிருப்பதுந் தவிர உன்னத கடவுளுடைய சுதன் என்னவும் படுவார். மேலும் ஆண்டவராகிய சர்வேசுரன் அவருடைய தந்தையாகிய தாவீதன் சிம்மாசனத்தை யவருக்குத் தந்தருளு

வார். ஆதலால் அவர் இயாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் இராசரீகஞ் செய்வார். அவருடைய அரசாட்சிக்கு ஓர் முடிவு மிராதென்றார்." (லூக்- I- 31- 32- 33) அமலசிரேஷ்ட ஆராதிஷ்ட கன்னிமரியாயியும், அவளுக்குப் பரிசுத்தக் காவலனாகச் சர்வேசுரனால் ஸ்தாபிக்கப்பட்ட அர்ச். சூசையப்பரும் தாவீது ராஜவம்சத்தாரா யிருந்தார்கள். மீளவும் அவதரித்த நாதன் பெத்திலேமென்னுஞ் சிற்றூரில் ஜெனனமானவுடன் பரலோக சேனைகளான திரளான சம்மனசுகள் அணியணியாக விறங்கி அவரைத் தங்களி னதிபதி யிராசாவாக அடிபணிந்து வணங்கி தண்டனிட்டு நமஸ்கரித்ததுமல்லாமல், சலப்பிரளயத்துக்குப்பின் நோயை யென்பவருடைய மூன்று புத்திரரால் உலகம் பரம்பினபடியால், அம்மூன்று வம்சத்திலிருந் துண்டான சோதிட சாஸ்திரிகளாகிய மூன்றுராசாக்கள், வானத்தில் நவமாயுதித்த நட்சத்திரத்தால் லோக ரட்சகர் பிறந்திருக்கிறாரென்று நிச்சயித்து ஒருவரையொருவ ரறியாமல் தங்கள் தேசத்திலிருந்து புறப்பட்டு மூவருமோரிடத்திற்கூடி, ஜெருசலேம் பட்டணஞ் சேர்ந்து, புதிதாய்ப் பிறந்த யூதரிராசா எங்கே யென்று விசாரித் தறிந்தபின் அவர் பிறந்தவிடத்தைக் கண்டு, அவர் தங்கள் தெய்வமென்கிறதற் கடையாளமாகத் தூபவர்க்கத்தையும், இராசனென்கிறதற் கடையாமாகப் பொன்னையும், மனிதனென்கிறதற் கடையாளமாக வெள்ளைப்போளத்தையும், அவர் பாதங்களில் காணிக்கைவைத்து அவரைப் பணிந்து நமஸ்காரம் செய்துகொண்டார்கள். இப்படி அவரவதரித்துப் பிறந்தபோது தானே பரலோகதளங்களாகிய விண்ணவர்கள் அவரை யாராதித்து அவருடைய ராஜமகத்துவத்தை வெளிப்படுத்தினது மன்றி, சோதிடசாஸ்திர விதரண சாலிகளான மூன்று முடிமன்னரும் அவர் பிறந்திருந்த தரித்திரகோலத்தைக் கண்டு சற்றுஞ் சம்சயப்படாமல் மூடிபொறுத்த தங்கள் ராஜசிரங்களால் அவரைப் பணிந்து வணங்கினார்கள். அரசாட்சிக் கேற்படுத்தப்படுகிறவர்களைத் தயிலாபிஷேகஞ் செய்வது யூதருக்குள் தேவகட்ட

லேயால் வழங்கின முறையாம். அப்படியே யூதர்களுக்கு முதல் இராசாவாக நியமிக்கப்பட்ட சவுல் என்பவன் தலையின் பேரில் சாமுவே லென்னுந் தீர்க்கதரிசி பரிமள தயிலம் வார்த்து அபிஷேகம் பண்ணினூர். (இரா - 10 - 1) அப்படியே ஒவ்வொருவன் ஞானஸ்நானம் பெறும்போது அவன் சிரசின் மீது குருவானவர் தண்ணீரை வார்த்துக்கொண்டே ஞானஸ்நானமந்திரஞ்சொல்லி முடித்தபின், அவன்தலையின்மேல் அர்ச். பரிமளதயிலத்தால் அபிஷேகம்பண்ணுகிறூர். கிறீஸ்துநாதர் சர்வேசுரனுடைய குமாரனு யிருக்கிறூர். கிறீஸ்துவர்களும், ஞானஸ் நானத்தால் சர்வேசுரனுக்குச் சுவீகாரப்பிள்ளைகளுமாய், சுதந்தர வாளருமாய், கிறீஸ்து நாதரொடுத்த மனுஷசுபாவத்தா லவருக்குச் சகோதிரர்க ளானதா லவரோடு உடன்சுதந்தரவாளருமாய், அவருடைய பாக்கியங்க ளெல்லா வற்றுக்கும் பங்காளிகளுமா யிருப்பதைப்பற்றி, அவர்கள் இராஜபுத்திரர்களும் இராசாக்களுமா யிருக்கிறூர்க ளென்கிறதற்குச் சந்தேகமில்லை. (உரோ. 8 - 17.)

இரட்சக ருலகத்தில் சஞ்சாரம் பண்ணும்போது, சேசு என்கிற ஒரேபேரால் மாத்திர மழைக்கப்பட்டார். அப்பெயர் எபிறேய பாஷையில் இரட்சக ரென்கிற அர்த்தங் கொள்ளும், அவர் பரலோகத்துக் கெழுந் தருளினபின் அப்பெயர் யூதரிலனேகருக்குப் பொதுவா யிடப்பட்டபடியால் அவரை விசேஷிக்க மெசியாஸ் அல்லது கிறீஸ்து என்கிறபேர் வழங்கிவந்தது. கடைசியா யவர் உலகத்தை ரட்சிக்க தேவ பிதாவினூல் நியமித்து அபிஷேகம் பண்ணி அனுப்பப் பட்டபடியால் இந்தவிசேஷந் தோன்ற அவர் சேசு கிறீஸ்து நாதரென் றழைக்கப்பட்டு வருகிறூர். அவருடைய சீஷர்களோவெனில் ஒருதாய்ப்பிள்ளைகள் போலத் தங்களுக் குள்ளிருந்த பரஸ்பர நேசத்தால் துவக்கத்தில் சகோதிரர்க்ளென்று உலகத்தாரால் அழைக்கப்படுவோர்கள். பிறகு அவர்கள் சேசு கிறீஸ்து நாதருடைய அநுசாரிக ளென்று தெள்ளென விளங்க அந்தி யோக்கியா புரியில் அவர்களுக்குக் கிறீஸ்துவர்க ளென்கிற பேருண்டாகி,

நாளது வரைக்கும் வழங்கி வருகிறது. இகத்திலும் பரத்திலுமி ம்மாத்திர மகத்துவ மாட்சிமைக் குரியவர்களா யிருக்கிற கிறீஸ்துவர்களை லோகத்தார் குறைவாய்ப் பேசினாலும் பாராட்டினாலும் தாங்கள் மேன்மை யடைவார்களோ? மாணிக்கம் குப்பைக் குழியி லிருந்தாலும் அதன்விலை குறைகிறதில்லை. புழுதியானது சுழல் காற்றினால் மேக மண்டல மட்டும் உயர்ந்தாலும் விலை யேறமாட்டாது. அதுபோலக் கிறீஸ்துவர்கள் எம்மாத்திரத்துக்குத் தாழ்ந்தவர்களா யிருக்கிறார்களோ அம்மாத்திரத்துக்குஞ் சர்வேசுரனுடைய கண்களில் மாணிக்கத்துக்குச் சமானமாகக் காணப்படுவார்கள்.

# இரண்டாவதுபிரிவு.

## கிறீஸ்துவர்கள் வணங்கும் பிறர்சிநேகத்துக்கு ஊறணியானமெய்யங்கடவுளைப்பற்றியது.

சத்தியவேதக்கிறிஸ்துவர்கள் வணங்குகிற கடவுள் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த ஒரே யேகக்கடவுளாம், அவர் எல்லாநன்மைகளையும் மட்டும் அளவுமின்றி யுடைத்தாயிருக்கிற கரைகாணு நன்மைச்சமுத்திரம். அகண்ட பரிபூரணம். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தன்னந்தனியர்.

"ஆதியந்தமில்லாதகாலந்தன்னில்
அநாதியாய்நின்றதே பரமென்றாகும்" (கௌதமர்)

அவருடைய எண்ணிலா இலட்சணங்களில் பிரதானமானவைகளாவன:— சுலோகம்.

சுயம்பு அனாதி அசரீரி
சமஸ்தசுரூப லக்ஷித்தா
அக்கிர சர்வவியாப்பித்தா
மூலஞ் சர்வநிமித்தா-நம:.

மேலும்,

சுயம்பநாதியசரீரி
சமஸ்தசுபசுரூபி
சர்வேஷாநிதானம்.

(இ-ள்) (1) சர்வேசுரன் தாமாயிருக்கிறார், (2) அநாதியாயிருக்கிறார், (3) சரீரமில்லாதிருக்கிறார், (4) அளவில்லாத சகல நன்மைச்சுரூபியாயிருக்கிறார், (5) எங்கும் வியாபித்திருக்கிறார், (6) எல்லாத்துக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார். என்றவாறு.

## (ஞானதி - காப் - திருமந் - படலம்.)

### விருத்தம்.

என்வயத்தறிவுக்கெட்டிடாவல்ல ஏகனுக்கறுகுணமியம்புந்
தன்வயத்தாதல் முதலிலனுதல் சரிரமானது மிலனுதல்
மன்வயத்துற்ற சகலநன்மைகளு மட்டிலாதுள்ளவனுதல்
முன்வயத்தெங்கும் வியாபகனுதல் முழுதுமோர்காரணனுதல்.

ஈறிலநன்மைநிறைவுமோர்குறைமுற் றின்மையுந்தொழத் தகுந் [தெய்வ]
மாறிலவியல்பே வேரிதாய்க்கிளைத்து வரும்பலசினையென நூ [லோர்]
ஆறிலக்கணங்களுரைத்தவையுள்ளோன் ஆண்டகை இலன்அ [லன்என்றார்]
தாரிலசுடரைமைவரிந்தன்னசாற்றுதும் புன்சொலாலவையே.

உரை—மட்டின்றி யெல்லாநன்மை நிறைவும் எல்லாக்குறையின்மையுமென்று இவ்விரண்டே எவரும் வணங்கத்தகும் மெய்க்கடவுட்குரிய மாறுதகுணமதாமே. இது வேறாகக் கொண்டு கிளைத்தபல கொம்புகளின்தன்மையால் இக்குணத்தைவிரித்து நூலோர் மெய்யானதேவனை யறிவதற்கு ஆறிலக்கணங்களைச்சொல்லி, அவையெல்லாமுடையோன் தேவனேயென்றார். அவற்றுள் ஒன்றுயினுங்குறைந்து எல்லாவற்றையும் இல்லாதவன் தேவனல்லவென்றார். ஆகையால், அளவிறந்த கதிருளசூரியனை மையாலெழுதினாற்போல, நானும் என் புன்சொல்லால் அத்தேவ ஆறிலக்கணங்களைச் சொல்லிக்காட்டுவேன் என்க.

தன்வயத்தாதல் முதலிலனுதல் தகும்பொறியுருவிலனுதல்
மன்வயத்தெல்லா நலமுளனுதல் வயின்ருறும் வியாபகனு [தல்]
பின்வயத்தின்றி யொருங்குடனனைத்தும் பிறப்பித்தகாரணனு [தல்]
பொன்வயத்தொளிர்வான் முதலெலாவுகும்ல போற்றுமெய்யி [றைமையினிலையே]

(இ-ள்) தன்னாலாதலுந்தொடக்கமின்றி யாதலு மைம்பொறிக்குரிய வுருவிலனாதலும் நிலைபெற்ற சகலநன்மையுளனாதலு மெங்கும் வியாபகனாதலுந் தன்னையல்லாதோ ருதவியின்றி யெல்லாவற்றையு மொருங்குடன்படைத்த வாதிகாரணனாதலு மென்றிவ்வாறிலக்கணங்கள் பொன்னுலகமுத லெவ்வுலகும் வணங்கத்தகு மெய்க்கடவுளின் றேவதத்துவமிதே யென்றுணர்க.

(தேம்பா - ஞாபகப் படலம்.)

சிவஞானதேசிகர் பதிபசுபாசவிளக்கம்

6-7 ம் பாடல்கள்.

2. நிராமயமாய் நிஷ்களமாய் நித்தியமாய் நிர்மயமாய்
புராதனமாய் சஞ்சலமாய்ப் பூரணமாய்ப் புனிதமாய்ச்
சராசரமாய் சாட்சியாய்ச் சத்தியமாய்ச் சித்துருவாய்
பராபரமாய் பொதுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம்.

சொல்லாலு மல்லாலுந் தொடராத சூக்குமமாய்
பல்லான்றகேள்வியரு மீதென்று பகர்வரிதாய்
ஒல்லாதபரஞ்சுடராயுயிர்க்குயிரா யுண்மையுமாய்
எல்லாமுமல்லவுமாயிருக்கு மந்தப்பரமசிவம்.

சிவவாக்கியர் கவி.

அரியுமல்லஅயனுமல்ல அரனுமல்லவப்புறங்
கருமைசெம்மை வெண்மையுங்கடந்துநின்றகாரணம்
பெரியதல்லசிறியதல்ல பெண்ணுமாணுமல்லவே
அரியதாகிநின்றநேர்மை யாவர்காணவல்லரே.

பத்திரகிரியார் புலம்பல்.

28. தூரியின்மீன்போற்சுழன் றுமனம்வாடாமல்
ஆரியனைத்தேடியடிபணிவதெக்காலம்.

46. கூறறியநால்வேதங்கூப்பிட்டுங்காணாத
பரமரகசியத்தைபார்த்திருப்பதெக்காலம்.

102. அஞ்ஞானம்விட்டேயருள்ஞானத்தொல்லைதொட்டு
மெய்ஞ்ஞானவீடுபெற்றுவெளிப்படுவதெக்காலம்.

பட்டணத்துப் பிள்ளையார் புலம்பல்.

28. நீரொளிபோலெங்குநிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும்பரந்தபராபரங்காண்.

83. நூலாலுணர்வரியநுண்மையினு நுண்மையன்காண்
பாலாறுசற்கரைபோற்பரந்தபரிபூரணன்காண்

55. தூருந்தலையுமிலான்தோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாமலகண்டமாய்நின்றாண்டி.

56. எத்தனையோவண்டத்திருந்தவர்களெத்தனைபோ
அத்தனைபேருண்டாலுமணுவுங்குறையாண்டி.

இப்படியே அந்த ஒரே பராபரவஸ்துவின் இலட்சணங் களைக் குறித்தும் அவர் அன்பைக் குறித்தும் அனேக ஞானிக ளுந் தங்கள் பிரபந்தங்களி லெழுதினதெல்லாம் முன் கூறிய உதாரணத்தின்படி துஷ்ட மானிடராகிய திரிமூர்த்தி முதலா னவர்களுக்கல்ல, பராபர வஸ்துவாகிய சோதியுடைத்தான கடவுளுக்கென்று விளங்குகிறபடியால் இப்படிப்பட்ட பரம நாதனை வணங்கும் உத்தம கிறீஸ்துவர்களிடத்தே அநேக ஐக கியமிருக்கும்.

## கிறிஸ்துவர்கள் ஆராதிக்கிற ஏகதேவன் திரீத்துவமாயிருக்கிறார்.

சத்தியம் வழுவாத கத்தோலிக்குத் திருச்சபையின் போ தனைப்படியே சர்வேசுரன் திரீத்துவமாயிருக்கிறாரென்கிறதற கு அர்த்தம் அவர் தேவசுபாவத்தில் ஒருவராயிருந்தும் ஆள்வ கையிலே மூவராயிருக்கிறாரென்பதாகும். இந்த மூன்று தெ ய்வீகஆட்களுக்கும் பேர் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து. பி தா சர்வேசுரன், சுதன் சர்வேசுரன், இஸ்பிரீத்துசாந்து சர் வேசுரன். மூவரும் மூன்றுசர்வேசுரரல்ல. ஆனால், ஒரேசர்

வேசுரன்தான். ஏனெனில் இந்த மூன்றுஆட்களுக்கும் ஒரே ஞானம், ஒரேசித்தம்,ஒரேவல்லமை, ஒரேதேவசுபாவம் இருக்கிறபடியினால் இவர்கள் ஒரேசர்வேசுரன். எல்லா தேவலட்சணங்களும் இந்த மூன்று தெய்வீக ஆட்களுக்கும் பொதுவாமே. ஆகையால் இவர்களுக்குள் வல்லபம், மகிமை, முதலான தேவலட்சணங்களில் யாதொரு வித்தியாசமுமில்லை. ஆகச்சே, பிதா அநாதி, சுதன் அநாதி, இஸ்பரீத்துசாந்து அநாதி. ஆயினும் மூன்று அநாதிகளல்ல, ஒரே அநாதிதான். பிதா சர்வவல்லவர், சுதன் சர்வவல்லவர், இஸ்பிரீத்துசாந்து சர்வவல்லவர். ஆயினு மூவரும் மூன்று சர்வவல்லவர்களல்ல, ஒரே சர்வவல்லவர்தான். இப்படியே மற்ற லட்சணங்களிலும் யோசிக்கக்கடவது. அவர்கள் மூவரும் அநாதியாயிருப்பதால் அவர்களுக்குள் மூத்தவருமில்லை, இளையவருமில்லை, மேலும் ஒருவரைப்பார்க்க ஒருவர் ஞானத்திலாவது வல்லமையிலாவது மற்றெந்தத் தேவலட்சணத்திலாவது மீசுரமானவரல்ல. அப்படியிருக்க பிதா, சுதன், இஸ்பிரீத்து, சாந்து என்னும் வேற்றுமையான நாமங்களுக்கு நிமித்தமேதெனில், அர்ச். தமதிரித்துவத்தின் முதலாம ஆளானவர் தமக்கு எல்லாத்திலும் சரிசமானமாயிருக்கிற தெய்வீகச்சாயலைத் தம்மிடத்தில் நித்தியமாய் ஜெனிப்பித்துக் கொண்டிருப்பதினாலே ஜெனிப்பிக்கிற அவருக்குப்பிதா அல்லது தகப்பனென்கிற நாமதேயமும், அவரிடத்தில் ஜெனிக்கிற தெய்வீகச் சாயலானவருக்குச் சுதன் அல்லது குமாரன் என்கிற நாமதேயமும் இடப்படுகின்றது. மீளவும் பிதா சுதன் ஆகிய இவ்விருவரும் தங்களைச்சிநேகித்திருக்கிற அன்னியோன்னிய தேவ சிநேகமானது மூன்றும் ஆளாகிற இஸ்பிரீத்து சாந்து வென்று சொல்லப்படும். அர்ச். திரித்துவத்தின் பரம ரகசியத்தை நமது பலவீன புத்திக்குத்தக்கது எவ்வளவாகிலுங் கண்டுபிடிக்க வேதசாஸ்திரிகள் எடுத்துக்காட்டிய சில வொப்பனைகளைக் கவனிக்கக் கடவோம்:—மனிதனுடைய புத்தியினின்று நினைவு பிறக்கிறது, நினைவினால் புத்தியனாது கருதுகி

ற வஸ்துவின் உருவம் புத்தியில் தோன்றுகிறது. அல்லாமலும், மிகுந்த ரூபலாவண்யமமைந்த ஒரு இராசாவானவன் தனது ரூபத்தைப் பார்வைக் கண்ணாடியிலே காண்கிறபோது அந்த இராசாவுக்குச் சரியான வுருவம் அந்தக்கண்ணாடியில் காணப்படுகிறதுமன்றிக் காணப்பட்ட தன்னுருவத்தை இராசா சிநேகிப்பானே, அவ்வண்ணமே மட்டற்ற புத்தி அறிவுடைத்தான தேவபிதாவானவர் தம்மையுந் தம்முடைய மட்டில்லாத தேவ சுபாவத்தையுந் தெய்வீக இலட்சணங்கள் யாவற்றையும் தமது சர்வ ஞானத்தில் நித்தியமாய் நோக்கி யுத்தேசித்துக் கொண்டிருக்கின்றமையால் அவருக்குச் சரிசமானமான சாயலாகிய தெய்வீகச் சுரூபம் அவரிடத்தில் தோன்றுகின்றது. இந்தச்சாயலானது மாறுகிற நினைவும் வெறுஞ்சாயலுமாயிராமல் உண்மையும் மாறாத தேவசுபாவமும் பொருந்திய சாயலுமாய்த் தெய்வீகமுள்ள சுரூபமுமாய் இருக்கின்றமையால் இதுவே பிதாவுக்குத் தேவசுபாவததில் சரிசமானமானவரும் ஆள்வகையில் வேறானவருமான சுதனாயிருக்கிறதாமே. இதுவுமல்லாமல் தேவபிதா தமது சாயலாகிய தம்முடைய சுதனிடத்திலுள்ள அளவில்லாத பிரதாப இலட்சண நன்மைச் சுரூபத்தையும் சுதனானவர் சர்வ நன்மையினூறணியாகிய தமது தேவபிதாவின் மட்டற்ற தெய்வீக மகிமை இலட்சணங்களையும் நித்தியமாயுத்தேசித்துப் பார்க்கிறதினால், அவரவரிடத்தில் நின்று அவசியமாய்ப்புறப்பட்டு வருகிற அன்னியோன்னிய தேவ சிநேகமானது இஸ்பிரீத்து சாந்துவாமே. இந்தச்சிநேகமானது மாறுகிற தன்மையாயிராமலும் வெறும் மனப்பற்றுதலாயிராமலும் நித்தியமாய்த் தெய்வீகத்திலிருந்து ஒரு குறையுமின்றித் தேவசிநேகத்தைக் கொண்டிருக்கிறபடியினாலே இதுவுந்தெய்வீக ஆளாயிருக்கின்றது. மனிதரிடத்திலிருக்கிற உள்ளிந்திரியங்களில் புத்திவேறே, நினைவுவேறே, மனதுவேறே. புத்தியும் ஆத்துமம், நினைவும் ஆத்துமம், மனதும் ஆத்துமமாயிருந்தாலும் மூன்றும் ஒரே ஆத்துமமாவாயிருக்கிறதுபோல, பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்து என்கிற மூன்றுபேரும் வெவ்

வேறு ஆட்களாயிருந்தாலும் மூவரும் ஒரே தேவ சுபாவமுடைய ஏகக்கடவுளாமே. மேலே சொன்ன வண்ணம் சகல தேவ லட்சணங்களும் எல்லாத் தேவதொழில்களும் இத்த மூன்று ஆட்களுக்கும் பொதுவாயிருந்தாலும் பிதாவுக்கு வல்லமையையும்,சுதனுக்குஞானத்தையும்,இஸ்பிரீத்துசாந்துவுக்குநன்மைத்தனத்தையும் உரித்தாக்கிப் பேசுவது சத்தியவேதத்தில் வழங்கிவருகிற முறைமையாம். அதேனெனில் எந்தத்தேவத்தொழிலில் எந்தத்தெய்வீக ஆளானவர் விசேஷித்துக் காணப்படுகிறாரோ, அந்தத்தேவ தொழில் அந்தத் தெய்வீக ஆளுக்கு உரித்தாக்கப் படுகிறது. அப்படியே சிருஷ்டிப்பு வல்லமையின் அரிய தொழிலாகையாலும், அதிலே தேவபிதாவானவர் விசேஷித்துக் காணப்படுகிற படியாலும், உலக சிருஷ்டிப்பை அவருக்குஉரிமையாக்கி அவரைச் சிருஷ்டிக ரென்றும், இரட்சணியமானது ஞானத்தின் உத்த மோத்தம வேலைப்பாடாகையாலும், அதிலே தேவஞானமென்னும் சுதனானவர் விசேஷித்துக் காணப் படுகிறபடியாலும் அத்தொழிலை யவருக்கு உரிமையாக்கி அவரை யிரட்சக ரென்றும், நமது ஆத்துமங்களின் அர்ச்சிப்பு, நன்மைத் தனத்தைக் காட்டுகிற அருஞ்சிறப்பா யிருப்பதினாலும், அதிலே தேவசிநேக சுரூபியான இஸ்பிரீத்து சாந்து விசேஷித்துக் காணப்படுகிறபடியாலும் அத்தொழிலை யவருக்கு உரிமையாக்கி அவரை யர்ச்சிக்கிறவ ரென்றும் காரண இடுகுறிச் சிறப்புப் பெயராய் வழங்கி வருகிறது. உலகரட்சணைக்காக மனுஷாவதாரஞ் செய்தது பிதாவாகிய சர்வேசுரனுமல்ல, இஸ்பிரீத்து சாந்து வாகிய சர்வேசுரனு மல்ல. சுதனாகிய சர்வேசுர னொருவர்தாமே. ஆனாலவர்க ளிருவரும் இத்தொழிலி லிவரோடு அனுகாரணமா யிருந்தார்கள். அதெப்படி யென்றால், உலகத்தை ரட்சிக்கப் பிதாவாகிய சர்வேசுரன் கருணைப் பிரசன்ன சித்தமானார். சுதனாகிய சர்வேசுரன் அதை நிறைவேற்றவுடன் பட்டார். இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனும் அதற்கு உடன்தையாகிச் சுதனாகிய சர்வேசுரனுக்கு அர்ச். மரியாயின் அமலமாகிய திருவுதரத்திலே ஓர் நிர்மலமாகிய சரீரத்

ரை அவளுடைய பவித்திரமாகிய உதிரத்தினு லுருவாக்கி அதிலோர் ஆத்துமத்தையுமுண்டுபண்ணிவிடவே, சுதனனவரந்தப்பரி சுத்தமாகிய ஆத்தும சரீரத்தோடு தமதுதேவ சுபாவத்தைப்பொருத்திக் கொண்டு அவதாரம் பண்ணினூர். இப்படியே மற்றுந்தேவத்தொழில்களிலும், அர்ச் தமதிரீத்துவத்தின் மூன்ருட்களும் சம்பந்தப்பட்டிருக்கிருர்கள். மனுஷாவதாரத்துக்கு முன் சுதனனவர் சர்வேசுரனுக மாத்திரமிருந்தார். மனுஷாவதாரஞ்செய்தது முதற்கொண்டு மாத்திரம் அவர் மனிதனுகவுமிருக்கிருர். இப்போதோ அவர் மெய்யான சர்வேசுரனுகவும் மெய்யான மனுஷனுகவுமிருந்து, சர்வேசுரனுகிய மட்டும் எங்குமிருக்கிருர். மனுஷனுகியமட்டும் பரலோகத்திலும் தேவ நற்கருணையென்னுஞ் சற்பிரசாதத்திலு மிருக்கிருர். இதுவே சத்தியவேத சித்தாந்தம்.

அர்ச். திரீத்துவத்தின் பரமரகசியத்தைக்குறித்து வேத சாஸ்திரிகள் காட்டிய பலபல ஒப்பனைகள்யாவும் கோடிகிரண சோபிதமுகமாய் விளங்காநின்ற சூரியனைக் கரியமையினுல் வரைந்துகாட்டிய சித்திரத்துக்கு ஒப்பாயிருக்கிறதொழிய அதின் இயல்பான தன்மையைக் காட்டுகிறதல்ல. சம்மனசுகளு மனிதரும் ஊழியுள்ளகாலமட்டும் முயன்ருலும் அதைச் சரியாய்க்கண்டுபிடிக்கவும் வருணிக்கவு மாட்டார்கள். ஏனெனில் அது உண்டாக்கப்பட்ட புத்திக்கெட்டாத பரமரகசியமாமே. அதைச் சர்வேசுரன் தாமே வெளிப்படுத்தினபடியினுலே மனிதன் அதையறிந்ததேயொழிய அவன் தன் சுயபுத்தியினுலதைஅறியவேகூடாது.பரமரகசியமென்பதென்னவெனில்சர்வேசுரனுல் வெளிப்படுத்தப்பட்டு நம்மால் கண்டுபிடிக்கக்கூடாமலிருக்கிற சத்தியமென்னப்படும். இக்காலத்து மூடசித்தாந்திகள் இந்தப் பரமரகசியத்தைப் புத்திக்கொவ்வாத காரியமென்பார்கள். மட்டுக்கும் மட்டில்லாமைக்கும் எவ்விதத்திலாயினும் சம்பந்த பிரமாணமுண்டோ? இல்லையெனில், மட்டுள்ள மனுஷஅறிவானது மட்டில்லாத பராபரவஸ்துவாகிய கடவுளினுடைய சுபாவத்தன்மையைக் கண்டுபிடிக்கக்கூடு

மோ' மனிதபுத்தியானது எம்மாத்திரம்" சமுத்திரத்துக்குமு ன் ஒருதுளிதண்ணீருககும்,சூரியனுக்குமுன்னெளிமழுங்கிக கிடக்கு மின்மினிவெளிச்சத்துக்கு மிணையாகாதே, இம்மாத்தி ர மற்பப்புத்தியையுடைய மனிதன் சர்வேசுரனைப்பற்றிய ப ட்டில்லாத பரமரகசியத்தைக் கண்டுபிடிக்கக் கூடுமென்பது ட யித்திய த்திலுமுதிர்ந்த பயித்தியமாமே. மனிதன் தன்கண் ணால் காண்கிற சகலகாரியங்களையும் காணவல்லவனோ? ஒரு கொட்டையிலிருந்து ஒரு பெரிய விருட்ச முண்டாகிறதையுட் ஒரு நெல்லழிந்து அநேகமணிகளாய் பலுகுகிறதையும் இதுமு தலான எண்ணிக்கை கடந்தகாரியங்களையும் அநுதினங்கண் டாலும் அவைகளெப்படியாகின்றனவென்று சமூலமாய் கண் டுபிடிக்கச் சக்தனாயிரானே. சுபாவமுறையிலுட்பட்டுத் தன் புத்தி சன்னிதானத்திலிருக்கிற சுபாவீக ரகசியங்களையே மனி தனனவன் கண்டுபிடிக்க அசக்தனாயிருக்கையிலே, ஞானமு றையிலுட்பட்ட காரியங்களைத்தான் கண்டுபிடிக்கக் கூடுமென் றால் தன்னைததான் எய்த்துக்கொள்ளுகிறவனா யிருக்கிறான். இப்படிப்பட்டவர்களைக்குறித்து "அவர்கள் தங்களை ஞானிக ளாகவெண்ணி மூடரானார்கள்" என்று வேதத்தில் சொல்லி யிருக்கிறது. நம்மால் கண்டுபிடிக்க இயலாத இம்மாத்திரம்அ திஅகோசரமாகிய அபிரகசியத்தை நாம் விசுவாசிக்கவேண்டு மென்று கடவுள் விரும்புகிறாரோ? ஆம் நமது புத்தியின்நமஸ் காரத்தை யவருக்குச் செலுத்தி நமது சித்தத்தை அவருக்கு எல்லாக்காரியத்திலும் அமையப்பண்ண வேண்டுமென்று திரு வுளமாயிருக்கிறார். இதைச்செய்வதெப்படியெனில், சர்வேசு ரன் நமக்கு வெளிப்படுத்தினவைகள் நம்மால் கண்டுபிடிப்ப த ற்கு எம்மாத்திர மரியவைகளாயிருந்தாலும் அவைகளை அவரு டைய தப்பில்லாத வாக்கியத்தைப்பற்றி உறுதியாக விசுவசித் து அவர் கட்டளையிட்ட யாவற்றையு மவருக்குப் பணிதலோ டு சந்தோஷமாய் நிறைவேற்றுகிறதினாலேயாகும். இப்படிக் கில்லாமல் அந்த அகோசர பரமரகசியத்தை ஆராயப்புகுகிறவ ன் சூரியனை உருவப்பார்க்கத் துணிகிறவன் ஒளிமருண்டு அந்

ரகளுவதுபோல இவனும் ஞானக்கண்கெட்ட குருடனுவா னென்பதற்குச் சந்தேகமில்லை.

விவரம்.—இங்ஙனமிடம் போதாமையைப்பற்றிச் சுருக்கி எழுதவேண்டி நேரிட்ட அர்ச். தமதிரித்துவத்தின் விவரண த்தை விரிவாய் அறிய விரும்புவோர், சத்தியவேதப்பரிட்சை, பூர்வீகமறைவிளக்கம், மெய்ம்மறைஉத்தியானம், அர்ச் திரித் துவத்தின் திருநாள்பிரசங்கம், ஆத்துமநிர்ணயம் 33-ம் பாட த்திலும், இன்னுமநேக வேதவிவரணப் பிரபந்தங்களிலும் கா ணலாம். இப்புத்தகத்தினளவை முன்னிட்டு அவசியமாய்ச் சங்கிரகிக்க வேண்டியதான இதில் கத்தோலிக்குத்திருச்சபை ப் போதனைப்பிரகாரம் வேதவிற்பன்னர்கள் எழுதித்தந்த வா க்கியங்களையே பிரயோகம்பண்ண நான் முயன்றதேயல்லாம ல் நானுய் ஒன்றுஞ்சொல்லத் துணிந்ததில்லை. என்னையுமின் றி யேதாவது திருச்சபைப் போதனைக்கு விரோதமான குற்ற ங்கள் காணப்படில் அவைகளைத் திருச்சபையின் தீர்மானத்து க்குத் தாழ்மையோடு ஒப்புக்கொடுக்கிறேன்.

பிதா சுதனிஸ்பரீத்து சாந்தென்னுந் திரியேக கடவுளிட த்திலிருக்கிற சினேகத்தைப்போன்ற சினேகம் அப்பரமகடவு ளை வணங்கும்படி போதிக்கிற சத்திய குருப்பிரசாதிகளிடத் தும், அப்பரமநாதனை வணங்கிவரும் புண்ணியகிறீஸ்துவர்க ளிடத்து மிருக்குமல்லாதே மற்றவர்களிடத்தி லிருக்கமாட்டா து.

## பிறர்சினேகம்.

நாம்காண்கிற யாதொரு வஸ்துவின்பேரில் நமக்குண்டா கிற விருப்பத்தினுல் அதை க்ஷேமமாயிருக்கக்கோரி அதற்கு நன்மைசெய்ய ஏவுகிறதே சிநேகமென்னப்படும்.

சிநேகம் 6-வகைப்படும்

1-வது. நமக்குள் இயல்பிலேயிருக்கிற சுவாபசிநேகம். இது இரத்தக்கலப்பினுலொன்றித்துப் பிறக்கிறசிநேகம். இங்

த சுவாப சிநேகத்தால்தான் தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைக ளையும் பிள்ளைகள் தங்கள்தாய்தந்தைகளையும், சகோதரர் சகோ தரரையும், பந்துக்கள் சுற்றத்தாரையும் சிநேகிக்கிறதல்லாமலு ம், அவர்கள் மகிமைபெறவும் சம்பன்னராகவும் சுகமாகவிருக் கவுங் கோறுகிறது. இது சாதாரணமாக எல்லாமனிதருக் கும் மிருகம் பட்சி முதலியவற்றுக்கும் இயல்பாக சிருஷ்டிகர் த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இயற்கையாயிருப் பதினுல் இதில் யாதொருபேறு பலனில்லை.

2-வது. பிரயோசனத்தைப்பற்றிய சிநேகம். இது லௌ கீக பிரயோசனத்தினின்று உற்பத்தியாகிறது, தாங்கவொரு சபையாகவாவது கூட்டமாகவாவதிருக்கிறபோது ஒருவருக் கொருவருடைய சகாயங் கிடைக்குமென்கிற நோக்கங்கொ ண்டிருக்கிற சிநேகம். இது பொதுவாக லோகமுறைமைக்கடு த்த சிநேகமென்று சொல்லப்படும். இந்தச்சிநேகம் அஞ்ஞானி களிடத்து மாத்திரமல்ல கடவுளை யறியாதவர்களிடத்தும் பிற ர்சொத்தைக் கொள்ளையடிக்குங்கள்ளர் கூட்டத்தாரிடத்திலு முண்டு. இது முற்றிலும் சுயநலத்தையே நாடியிருப்பதினுல் இதிலும் பேறுபலனில்லை.

3-வது. மாம்ஸ இச்சையுள்ள சிநேகம், இதுயாதொரு அழகு, அலங்கார வடிவினு லுண்டாகிற நேசம். இந்த நேசம் எல்லாமானிடருக்கு முண்டு: இது ஆசாபாசத்தைத் திருப் திகரஞ் செய்யத் தக்கதாக எதுவாகவும் துற்குணத்துக்கு அ நேகஞ் சமயத்தில் ஊறணியாகவு மிருக்கிறதினுல் இது கடவு ளுடைய சன்னிதியில் அரோசக முள்ளதா யிருக்கிறதினுல் இது மெய்யான சிநேகத்திற்குத் துலையிட்டிருக்கிறது.

4-வது. புத்திபூர்வக சிநேகம். இது புத்தி விவேகத்தி னின்றும் ஆத்தும சற்குணத்தின் நன்மையி னின்றும் உற்பத் தியாகிற படிப்பு விவேகம் தைரியம் உதாரத்துவ முதலிய வைகளைப் பற்றிய சிநேகம். இதுவும் சுபாவத்தால் வெளிப் பட்டு, சன்மார்க்கப் புத்திக்கு எற்றதா யிருந்தாலும் இதிலும்

மெய்யான சிநேகமில்லை, ஏனெனில் இது சுவாப வியற்கை யால் நம்மிடத்தும் அஞ்ஞானிகளிடத்து மிருக்கிறது.

5-வது. நன்றியின் சிநேகம். இது ஒருவன் தன்னுபகா ரியின் மட்டில் கொண்டிருக்கிற நல்லமனசும் பட்சமுமாம், இதுவுங் கடவுளை யறியாதவர்க ளிடத்து மிருங்களிடத்து மி ருக்கின்றமையால் இதையு மெய்யான சிநேகமென்று சொல்ல விடமில்லை.

6-வது. உண்மையான சிநேகம். இது சர்வேசுரனைப் பற்றி நமதயலானைச் சிநேகிக்கிறது, இந்த நேசகத்தைக் கொ ண்டு நாம் பிறருக்கு செய்யும் ஒவ்வொரு நன்மைகளும் அவ னுத்தும இரட்சணிய பிரயோசனத்தையே கோறியிருப்பதினு ல் இதுவே சர்வேசுரனுக்குப் பிரியமான ஞானசிநேகம், இதை த்தான் உத்தம பிறர் சிநேகமென்று சொல்லப்படும்.

இந்த உத்தம பிறர் சிநேகம் இத்தேசத்து கிறீஸ்த்து வர்களிடத்தி லென்கிலுங் குறைவற்றவிதமா யிருக்கிறதோ வென்று சற்று யோசித்து பார்ப்போம். அஞ்ஞானிக ளெ ப்படித் தாங்கள் வணங்குகிற தெய்வத்தின் மட்டில் நம் பிக்கை யற்றிருக்கிறார்களோ, அப்படியே கிறிஸத்துவர்க ளும் தங்களை சிருஷ்டித்துக் காப்பாற்றி யெண்ணிறந்த உபகார சகாயங்களை செய்துவருகிறசர்வேசுரன் மட்டில் நம்பி க்கையற்றுச் சமயம் வந்தற்றபோதும் வியாதிகாலங்களிலும் பேயாராதனை முதலிய சடங்குகள் செய்கிறார்கள். அஞ்ஞானி கள் எப்படி தங்கள் பகைவர்மேல் வர்மஞ் சாதிக்கிறார்களோ அப்படியே கிறீஸ்துவர்களும் வர்மஞ் சாதிக்கிறார்கள், அஞ் ஞானிகள் எப்படி தங்கள் பகைவர்மேல் பழிவாங்கக்கருதுகி றார்களோ அப்படியே கிறீஸ்துவர்களும் பழிவாங்கக் கருதுகி றார்கள், அஞ்ஞானிகள் எப்படிப் பாபமுதலியதுர்க்கிருத்தியங் களையும் பொய்யாணை பொய்சத்தியம் பொய்வழக்குஞ் செய்கி றார்களோ அப்படியே கிறீஸ்துவர்களும் செய்கிறார்கள். அஞ்

ஞானிகள் எப்படி சாதிவித்தியாச மனுசரித்து வருகிறார்களோ அப்படியே கிறீஸ்துவர்களு மனுசரித்து வருகிறார்கள்.

இத்தேசத்துக் கிறீஸ்துவர்களுக்கு உண்மையான பிறர்சினேக மிருக்குமானால் மேற்சொல்லிய துற்கிருத்தியங்க ளெல்லா மொழிந்து எத்தனையோ மடங்கள் தங்கள் சொந்த பொருளால் ஸதாபித்திருக்கலாம், எத்தனையோ சுதேச குருக்கள் அந்த மடங்களிலிருந்து உற்பத்தியாகி யிருக்கலாம், எத்தனையோ கன்னியர்மடங்களை ஸதாபித்திருக்கலாம், எத்தனையோ ஆதாரமற்ற ஏழைகளுக்கு அடைக்கலஸ்தானம் ஏற்படுத்தி யிருக்கலாம், எத்தனையோ ஆதாரமற்ற பிள்ளைகளுக்கு மடங்கள் செய்திருக்கலாம், அஞ்ஞானிகள் மனந்திரும்ப எத்தனையோ சபைகள்எழும்பி அவர்களுக்காக வேண்டிவருவார்கள். அதனுலெத்தனையோ ஆதநுமாக்கள் மனந்திரும்பி சத்திய திருச்சபையில்வந்துசேர்வார்கள், இதனுல் சர்வேசுனுக் கெவ்வளவோ ஸ்துதியுண்டாகும்.

இத்தேசத்தாருக்கு ஞானவெளிச்சத்தைக் கொண்டு வந்த அர்ச், தோமையாருக்குப்பின் ஐரோப்பியர்களுடைய உருக்கமான சிநேகமல்லவா நாம் சத்தியவேதத்திலிருக்கிறது? அவர்களுடைய சிநேகமல்லவா நமதுதேசத்தில் சுதேச குருக்கள் அங்கங்கே ஒருவர் இருவர் தலைக்காட்டிக் கொண்டுவருகிறது? அவர்களுடைய சிநேகமல்லவா மடங்கள் ஒன்றிரண்டு முளைத்துவருகிறது? அவர்கள் சிநேகத்தாலல்லவா அனேகம்பிள்ளைகள்தலையெடுத்து கல்விமான்களாகிறார்கள்? கடைசியாகஅவர்கள்கொண்ட சிநேகமல்லவா தங்கள்தாய்தந்தையர்களையும் பந்துசனங்களையும் விட்டு ஆயிரக்கணக்கான மயில்கள் கடந்து தங்கள் வாழ்நாட்களை நமதாத்தும பிரயோசனத்துக்காக உழைத்து தங்கள் சினேகக்குறிப்புக் கத்தாட்சியாகத் தங்கள் எலும்புகளை இத்தேசத்தில் புதைத்துவிடுகிறார்கள். இவ்வளவு உபகார சகாயங்களை நாம் அவர்களிடம் பெற்றபின்னும் நாம் அவர்கள் என்ன நன்மை செய்கிறார்கள் முன்போல் ஏழைகளுக்குச் சகாயம் செய்கிறார்களா? உதவி ஒத்தாசை செய்கிறார்களா? தேர் திரு

விழா கோவிலில் சிறப்பு முதலியவைகளும் பண்டிகை காலத்தில் திருச்சபையா லேற்படுத்திய சடங்குமுதலா னவைகளும் அநேகம் கோவில்களில் நாளாவட்டத்தில் குறைந்து போகிறதென்று முறையிடுகிறோம், இப்படிப் பேசுவது ஒரு பேடியின் தன்மைக்குச் சமானமா யிருக்கிற தென்பதற்குச் சந்தேக மில்லை, அதெப்படி யெனில், தனக்கோர் சுதந்தரமான பெண்சாதியும் வேணும் அவள் தன்தாய் வீட்டிலிருந்து தனக்கும் தன் புருஷனுக்கும் வேண்டிய ஆபரணமுங் கொண்டுவர வேணும் அவள் தனக்குண்டாகும் பிள்ளைகளுக்கும் சவரட்சணை செய்யவும்வேணும், அவள் தன்னா லியன்றதுகூடிய மட்டில் செய்தும் அப்புண்ணியவதிக்குச் சக்தி யில்லாதகாலத்தில் புருஷனைச் சகாயங்கேட்டால் அவளை தூஷித்திகழும் புருஷனை உலகம் என்னென்று சொல்லும்? இவனைப் பேடியென்றிகழாதா? அதுபோலத்தான் சத்தியகுருக்கள் தங்கள் தாய்வீடாகியஐரோப்புத் தேசத்திலிருந்து இத்தேசத்துக்கு வந்து தங்கள் திரவியத்தை இத்தேசத்தாருக்கு வேண்டிய மட்டில் கொட்டி மடங்கள்முதலானதுகள் செய்துவைத்தும், தேர் திருவிழா பண்டிகை முதலான துகள் செய்தும் சிலவிற்குப் பற்றுமல்கொஞ்சஞ் சகாயங்கேட்டால் தடியாலடிக்க வந்ததுபோல இல்லை ஓடிப்போ வென்று துரத்தினால், இவர்களைப் பேடி யென்று சொல்லாமல் பின்னை என்னவென்று சொல்லவேணும்? ஓர் மனிதன் தன்னையுந் தன்குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ள எப்படி கவலை யுடையவனா யிருக்கிறானோ அப்படியே நமது ஞான பிரயோசனத்துக்கு வேண்டிய வைகளை யெல்லாம் நாமே சவரட்சணை செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தஞாயங்களைப் பொருளுடையோர்க்கு சொல்லவந்ததேயன்றி இல்லாதவர்களுக்குச் சொல்லவரவில்லை. பாருங்கள் இராயபுரத்துக்கோயிலுக்கு அந்தஊரார் வைத்திருக்கும் ஆஸ்தியில் ஏறக்குறைய மாதந்தோறும் 800 அல்லது 900 ரூபாய் வட்டிமாத்திரம் வருகிறது. அவர்களுக்குள்ளெத்தனையோ ஏழைகள் தங்கள் நிர்வாணத்தைமறைக்க வஸ்திரமும் தினம் ஒரு

வேளை உணவுக்கு முதலாயில்லாமலுமிருக்கிறார்கள். எத்தனை யோபிள்ளைகள் ஆதாரமற்றுப் பசியினால் மடிகிறார்கள். இவர்களைக்காப்பாற்ற ஓர்மடமாவது ஏற்படுத்தி அவர்களுக்குதவி சகாயஞ்செய்தால் எவ்வளவோ சுகிர்தமுண்டாகும். அப்படி செய்யாமல் கோர்ட்கெச்சேரிக்கும் லாயர் பாரிஸ்டர்களுக்கும் ஆயிரக்கணக்கான திரவியங்களைகொடுத்து பாழாக்குகிறார்களே இதற்காகத்தானா அவர்கள் முன்னோர்கள் அந்தசொத்து வைத்தது? ஐரோப்புதேசத்துக் கன்னியர்கள் இத்தேசத்துக் குவந்து சக்தியற்ற கிழவர் கிழவிகள் சவரட்சணைக்காக வீடுவீடாய் வாசற்படிதோறும் முழங்காலிலிருந்து மடிபிட்சையெடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறார்களே. அன்னியதேசத்தாருக்கு நமதுமட்டிலிருக்கும் சிநேகத்தைப்பார்த்தாவது இனி கூடியசீக்கிரத்தில் இவர்களும் மற்றும் பொருளுடைய புண்ணியவான்களும் ஆதாரமற்ற பிள்ளைகள் சவரட்சணைகளும் குருப்பிரசாதிகள் சவரட்சணைக்கும், கன்னியர்மடம் குருமடமுதலியவைகளுக்கும் ஐரோப்பிய குருப்பிரசாதிகள் பொருளுதவியின்றி தாங்களே செய்வார்களாக.

கிறீஸ்துவர்கள் வணங்குந் தெய்வம் ஒன்றாயிருப்பது போல அப்போதகர்கள் போதிக்கும் போதனையும் ஒன்று. அப்போதகத்தை கேட்டு அத்தெய்வத்தை வணங்குங் கிறீஸ்துவர்களும் ஒரே மந்தையாயிருந்து பசாசின் மக்களாகிய அஞ்ஞானிகளை துவேஷிக்கிறதற்கு பதில் தன்னைப்போல ஞானஸ்நானம் பெற்ற தேவமக்களும் இராஜாக்களுமாயிருக்கிற கிறீஸ்துவர்களை யிகழ்ந்து நிசிதமாகப் பாராட்டி அவர்கள் வீட்டில் புசித்தல் பாணித்தல் முதலியவற்றைத் தள்ளிவைத்துப் பசாசின் மக்களாகிய பாபிஷ்டர்கள் பசாசுக்குப் படைத்த சட்டிபானையிற் செய்த போஜன முதலிய பதார்த்தங்களைத் தின்பதும் பாணிப்பது மெப்படிப்பட்ட மதியீனம்? அஞ்ஞானிகள்தான் குருட்டுத்தனமாக பிர்மாவின் முகத்திலிருந்து பிராமணனும் புஜத்திலிருந்து க்ஷத்திரியனும் தொடையிலிருந்துவைசியனும்

பாதத்திலிருந்து சூத்திரனும் உற்பத்தியானார்க ளென்றுசொல்லிப் பிராமணனையும் க்ஷத்திரியனையும் வைசியனையும் உயர்குலத்தோனாகவு மெண்ணி சூத்திரனை இழி குலத்தோனாக வாக்கினாலும், இந்நால்வரும் ஒரேதகப்பன் பிள்ளைகளல்லவா? பலாமரத்திலுண்டாகிற கனியைக் கொய்யாக்கனி யென்றும், பலாக்கனியென்றும், மாங்கனியென்றும், எட்டிக்கனியென்றுஞ் சொல்வா ருண்டோ? அப்படி சொல்பவனை மூடனென் றல்லோ யிகழ்வார்கள். மரங்கள் சாதாரணமாய்த் தங் கொம்புகளில்கனிக்கிறதுண்டு, ஆயினும் பலாமரம்உச்சிக்கிளையிலும் பக்கக்கிளையிலும் மரத்தின் மத்திபத்திலும் வேரிலுங் கனிகொடுக்கிறது இதில் சிரேஷ்டமானது வேர்ப் பலாக்கனி யென்றே யெல்லோரும் இச்சித்துப் புசிக்கிறார்கள், அதுபோல நிசிதமாகவெண்ணப் படுகிற சூத்திரர் முதலான வலங்கை முகத்தாரைத்தான் சிரேஷ்ட மென்று நினைக்கத்தகும், ஏனெனில் இவர்கள் உதவிதான் முக்குலத்தாருக்கும் அவசியமாயிருக்கிறது.

இதைப்பற்றி அஞ்ஞானிகளில் ஞானிகளாக விளங்கினவர்கள் மேல்சாதி கீழ்ச்சாதி யில்லையென்றும் எச்சிற்கலப்புத் தீட்டில்லை யென்றும் இவைமுதலான அநேகந் தீட்டுகளைப்பற்றிக் கண்டித்த வைகளில் விசேஷமாக சாதியைப்பற்றியும் எச்சிற் கலப்புத் தீட்டைப்பற்றியு மாத்திரம் இங்கே யெடுத்துக்காட்டுவோம்.

### ஞானவெட்டி 520 ம் பாட்டு.

ஈரேழுலோகம் பதினாலுயர்ந் திருகாலுயர்ந்த
நேரான சாதிஆண் பெண் ணிரண்டும் நிரந்தரமாய்
பேரான செங்கதிர்சந்திரனுண் டண்டபிண்டமுண்டு
சீரான அன்னமுந்தண்ணீருமுண்டொருதெய்வமுண்டே.

### குதம்பைசித்தர்பாட்டில்

ஆண்சாதி பெண்சாதி யாகுமிருசாதி வீண்சாதி மற்ற
தெல்லாங் குதைம்பாய்—வீண்.

பட்டணத்துப்பிள்ளை திருவெண்பாவில் 35-ம் பாட்டு.
எச்சிலென்றுசொல்லி யிதமகிழ்ந்துபேசாதே
எச்சிலிருக்குமிடமறியீர்-எச்சிறனை
யுய்த்தறிந்துபார்த்தாலொருமைவெளிப்படுமின்
சுத்தநிராமயமாமே.

ஞானசாஸ்திரியார் சாஸ்திரக்கும்மி.

520. சாணுனெச்சிகருப்புக்கட்டிபல
சக்கரைவெல்லமுழவனெச்சில்
வீணுஈஎச்சிதேனல்லயோஅதை
வேடனெச்சிசெய்தான் ஞானப்பெண்ணே

521. மூட்டாயிகள்துடுக்கனெச்சில்தயிர்
மோர்பால்நெய்களிடையனெச்சில்
சட்டாய்கள்ளுகள்சாராயம்பல
சாதிகளெச்சிகள்ஞானப்பெண்ணே

522. ஈளன்பள்ளன்பறையன்புதறைய
னெச்சிமிகுங்கரும்பாலையிலே
தாளியிற்கண்டவரெச்சிலெல்லாந்தின்று
சைவங்களாறுயோஞானப்பெண்ணே

523. எச்சிக்கொட்டைப்பனங்கிழங்கல்லோ
இத்தனைசைவருந்தின்றூர்கள்
மெச்சிமெச்சிக்கொண்டாசாரமென்ற
வீராப்பேதடிஞானப்பெண்ணே

524. சட்டிப்பானையில்வாய்வைத்தயெச்சித்
தண்ணீர்கொண்டுபொயிலைவெற்றிலையிற்
செட்டித்துடுக்கர்தெளித்ததைவாங்கி
தினந்தின்றுயடிஞானப்பெண்ணே

525. குறும்பச்சிஎச்சிசுண்ணும்புமலை
குறவனெச்சிகள்கூடைமுறம்
வெறும்பிலுக்கச்சிசைவச்சி சிச்சி
மிறட்டுறளடிஞானப்பெண்ணே

526. கோடிச்சீலையினூல்களெல்லாம்பறை
கோலியன்சாலியன்கைக்கோளன்
சேடன்சேணியன்பட்டுநூற்காரரின்
திரண்டஎச்சிகள்ஞானப்பெண்ணே

527. எள்ளும்பிண்ணாக்குகள்நல்லெண்ணைமுத்தெண்ணை
யெல்லாவாணியனெச்சிலல்லோ
வள்ளியசீலைக்குகஞ்சிகள்போட்டது
வண்ணானெச்சில்கள்ஞானப்பெண்ணே

528. எந்தஆற்றிலே எந்தகுளத்திலே
எந்தகிணற்றிலே எச்சிலில்லை
தந்த்ரமாய்வந்து பல்மந்திரஞ்சொல்லியே
ஸ்நானஞ்செய்வானேன் ஞானப்பெண்ணே

529. தேவடியாளுடவெச்சி தின்றல்லோ
சிவப்புராணம் படித்தார்கள்
தேவடியாளெச்சி தம்பலத்தைத்தின்ற
திருட்டுசைவர்கள் ஞானப்பெண்ணே

530. சத்திபூசைநீபண்ணினபோதங்கே
சகலஎச்சிலுந் தின்றதல்லாற்
பத்தினிவேஷங்குலைந்தாயேயினி
பசுமைசைவமோ ஞானப்பெண்ணே

இவைகளை யெல்லாம் யோசித்துப்பார்க்கையில் ஒவ்வொன்றிலும் எச்சிற் கலந்திருக்கிறதென்று புத்திவிளக்கிக் காட்டினும் வைஷ்ணவரில் சாதிகெட்டவர் சாத்தாணிகளும், சைவரில் சாதிகெட்டவர்கள் சங்கமாராகிய லிங்கதாரிகளும் தங்களை மற்றவர்களை விட மேன்மையாகப் பாராட்டிக் கொண்டு எந்த வமிசத்தார் வீட்டிலும் புசித்தல் குடித்தல் முதலியவைகளைத் தள்ளிவைத் திருப்பதுபோல சில இந்திய கத்தோலிக்கு பாமரகிறீஸ்துவர்களும் அப்படி செய்வதுமல்லாமல் ஞானவான்களையும்மற்றவர்களையும் ஏவிவருகிறார்கள், முக்காலங்காகம் முழுகிக்குளித்தாலும்கொக்காக மாட்டாததுபோல, இவர்கள் யென்

னபிரயாசைப்பட்டு தங்களை உயர்த்திக் கொண்டாலும் ஊர்க்குருவிஊர்க்குருவியே யல்லாமல்பருந்தல்லவென்பது திண்ணம், உயர்குலத்தோர்உயர்குலத்தோரென்று தங்களைச்சொல்லிக்கொள்பவர்கள் எப்படிப்பட்டவர்களா யிருக்கிறார்களென்று சற்று இந்துக்கள் சாஸ்திரப் பிரகாரமும் சரித்திரப் பிரகாரமும் யோசித்துப்பார்ப்போம்.

நான் இந்த சாதிவிஷயமாக எழுதத்தொடங்குகையில் அம்பட்டன் குப்பையைக்கிளர மண்ணுமயிரையும்காண்பதுபோல் ஒரு பக்கத்தில் அசங்கியமும், இன்னொரு பக்கத்தில் பிறருடைய மனவருத்தத்தையடைவேனென்று பயமுமுண்டாகி விடவிடலாமென்றாலும் நான் இத்தேசத்தானாகையினாலும் இத்தேயத்து நன்மையைக்கோறியும் பிறர் சிநேகத்தினிமித்தமும் விசேஷமாக உயர்ந்தோராக வெண்ணப் படுகிறவர்களுடைய ஊழல்களைமாத்திரம் சாஸ்திரப்பிரகாரமும் சரித்திரப்பிரகாரமும் சிலது எடுத்துக் காண்பித்தால் மற்று மற்று சாதிகளும் அவ்வாறே இருக்குமெனவெண்ணி சாதி விஷயத்தில் எக்குலத்தாரும் இனி பெருமை பாராட்டாமலும் நான் எடுத்துக்காட்டுந் தோஷத்துக்காக மன்னிக்கும்படியாகவுங் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தேசத்திய வழக்கப்படி உயர் குலத்தோராகவெண்ணப்படுகிற பாப்பார் பிர்மாவின் முகத்திலிருந்து பிறந்ததால் எல்லோருக்கும் உயர்குலத்தோராக வெண்ணப்பட்டாலும் இருசமயவிளக்கம் வேழ்விப்படலத்தில் சொல்லியபடி பிர்மா வணிகர் குலத்தோனாகவிருக்கிறபடியால் அவனிடமாகப்பிறந்த பிராமணர் வைசியரென்று எண்ணப்படும். அல்லது தாங்கள் ரிஷி வமிசத்தாரென்பார்களாகில், மனுஸ்மிருதியில் சொல்வதுபோல, அவர்கள் நாய்க்கும், கழுதைக்கும், வண்ணாத்திக்கும், சக்கிலிச்சி முதலானவர்களுக்கும் பிறந்தவர்களாயிருப்பதால் நீச்ச பிறப்பினரென்று சொல்லத்தகும்.

சாதியிற் சிறத்தவர்களாக வெண்ணப்படுகிற பயிர்த்தொழிலாளராகிய வெள்ளாளரைச் சூடாமணி நிகண்டில் கடைய

ரென்றுங் கடைச்சியரென்றுஞ் சொல்லப்படுகிறதினுலும், பிராமணன் சூத்திரர்களுக்கு வேதம் ஓதக்கூடாதென்றும் எந்தக் கருமமும் செய்யக்கூடாதென்றுஞ் சாஸ்திரஞ் சொல்லுகிறபடியால் அவர்களிற் சிலர் நாவிதராகிய அம்பட்டரைக்கொண்டு தங்கள் கலியாண முதலிய கருமங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். அதெதினுலோவெனில் சைவப்புராணம் 69-வது அத்தியாயம் 28, 29-வது சுலோகப்பிரகாரம் நாவிதர் பிராமணனுக்கும் வைசிய ஸ்திரீக்கும் ஆருஷ விவாகத்தினுலும் ஷெ 30-வது சுலோகப்பிரகாரம் பிராமணனுக்கும் வைசிய ஸ்திரீக்கும் ஆசுர விவாகத்தினுலும் பிறந்ததால் அவர்கள் க்ஷவரத்தொழிலும் புரோகிதத்தொழிலும் செய்து வருகிறபடியால் வேளாளர் இவர்களை உயர் குலத்தோராகவெண்ணித் தங்கள் சுபகாரிய முதலானதுகளை ஷெயாரைக்கொண்டு நடத்திவருகிறுர்கள். மேலும் நெல்சன் எழுதிய மதுரை சரித்திரத்தில், உக்கிரபாண்டியன் 48 ஆயிரம் வேளாளரைப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவந்து தன் தேசத்திற் பயிரிடும்படி குடியேற்றினுனென்றும், அதற்குமுன் பாண்டியதேசத்திற் கள்ளர், மறவர், அகமுடையோர்; விளம்பர் என்கிற சாதிகளிருந்தார்களென்றும், ஆதொண்ட சக்கிரவர்த்தி வேளாளரைக் கனரா அல்லது கன்னடதேசத்திலிருந்து கொண்டுவந்து தொண்டமண்டலத்தில் குடியேற்றினுரென்றும், அந்தகாலம் கி. பி. 90-ஆம் ஆண்டென்றும் அவர்கள் மற்ற சாதியாரோடு சமமாக மதிக்கப்பட்டது 1160-வருடமென்றுஞ் சொல்லப்படுகிறதினுல் அவர்கள் எவ்வளவுகேவல வமிசத்தாராயிருந்ததினுல் பிறதேசத்திலிருந்து பாண்டியநாட்டில் குடியேற்றப்பட்டார்களென்று கண்டுகொள்ளலாம்.

அகமுடையாரென்றுல் கோவில்களிலும் இராச அரண்மனையிலும் எவ்வித ஊழியஞ்செய்கிறவர்களென்று ரோட்ளர் (Rottler's) அகராதியில் சொல்லியிருப்பதினுல் கோவில்களிலும் இராச அரண்மனையிலும் பறையர் பிறவேசிக்கலாகாதென்

பதைப்பற்றி பயிர்த் தொழிலாளராகிய இவர்களைக் கோவிலில் மேளமடிக்கவுந் தாரை நாகசுரமுதலானதுகள் ஊதவும், இராசப்பிரபுகள் முதலானவர்களுக்கு க்ஷவரத்தொழில்முதலானதுகள் செய்யவும் உதவிக்கொண்டதாகத் தெரிகின்றது. இதல்லாமலும் சிலர் தங்களை சவள வேளாளரென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள் சவளமென்றால் ஈட்டியென்றும், சௌளமென்றால் மயிர்க்கழித்தலென்றும் அகராதிகளில் அர்த்தம் விளங்குகிறதற்கொப்ப சைவபுராணம் 69-வது அத்தியாயம் 30, 31-வது சுலோகப்பிரகாரம் பிராமணனுக்கும் வைசிய ஸ்திரீக்கும் ஆருஷ் விவாகத்தாற் பிறந்தவன் அம்பட்டனென்றும் இவன் தொழில் ஈட்டி முதலிய ஆயுதங்களால் உண்டான காயங்களுக்கு சிகிச்சைசெய்து சவரஞ்செய்கிறதென்றும் ஸ்திரீகளுக்குள் கெற்பநோயை தீர்க்கிறதென்றுஞ் சொல்லப்படுகின்றது.

சமஸ்கிருதத்திற் சொல்லப்பட்ட பத்து நிகண்டுகளிலும் இந்நாட்டில் வழங்கி வருகிற தமிழ் நிகண்டு திவாகரங்களிலும வடதேசத்து குடிகளாகிய தெலுங்கர்களில் பண்டரெட்டி, பொங்கநாட்டுரெட்டி, தேசிநாட்டுரெட்டி முதலானவர்களும், கம்மவான் கவரை முதலான சாதிகள் இல்லாததினால், இவர்கள் எந்த சாதியாரென்று கண்டுபிடிக்கக் கூடாதிருந்தாலும், இவர்கள் யாவரும் தங்களை உயர்ந்த சாதியாரென்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். எந்த சாதி வரிசையிலுஞ் சேராதஇவர்களைச் சங்கர சாதியில் சேர்க்கமாத்திரம் இடந்தருகின்றது.

சைவபுராணம் 71-வது அத்தியாயம் 10-வது சுலோகப்பிரகாரம் இடையர்கள் வைசிய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்ததாகவும், தருமசாஸ்திரப்பிரகாரம் வைசிய ஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் பிறந்ததாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. வன்னியரென்றழைக்கப்படுகிற பள்ளிகளோவெனில் வைசிய ஸ்திரீக்கும் சேனைக்கடையானுக்கும் களவிற் பிறந்தவர்களாகவும் இவர்கள் தொழில் ஏரிகளிலும், குளத்திலும் ஆற்றிலும் மீன்பிடித்து அதில்பூத்திடும் புஷ்பங்களைப் பறித்து விற்பதும் ப

டவு தள்ளுவதும், கம்பு சோளம் கேழ்வரகு விளையுங்குறிஞ்சி நிலத்தில் காவல் செய்வதுமாம். இதன்றியும் இவர்கள் சண்டாள குலத்தினராதலால் இவர்கள் ஆபரணம் இரும்பு பித்தளையாற் செய்யப்பட்டனவைகளென்றும் இதனடியில் வரும் திருஷ்டாந்தத்தால் தெரிகின்றது.

அருணாசல சுவாமிகள் சாதிநூல் விராத்தியரூற்பத்தியில்

குறிதரு வணிகர் தங்கள் கோதைமான் மறிகண்டாவி
மறிதர வருத்திப்புல்க வருஞ்சேனைக் கடையான்றந்தோர்
நெறிதரு குளத்திலாற்றில் நெய்படு கச்சாலூற்றால்
பறிகொடு கொழுமீன்மீளப் பறிக்கமீன் பள்ளியாவார்.

ஸ்காந்தபுராணம், சூதசங்கிதை சிவமான்மிய காண்டம் 12-வது அத்தியாயம் 24-வது சுலோகத்தில்

சாலிக்யரஜ காஜ்ாதக சடரோமச்ச ஜீவனஹ:
ஜலஜாஞும் சபுஷ்ப்பாஞும் மச்சயாதீஞும் சவிக்ரய:

கம்பர் பாடிய தனிப்பாடற்றிரட்டு 41-வது கவி

குழுண்டியும் பண்ணையுங்கூட முளைக்கின்ற கொல்லக்கம்பை
நிமிண்டியுமூதியுந்தின்ன வல்லோரிந்த நீணிலத்திற்
நுமண்டியங்காய் தன்னை மொட்டையம்பா லெய்புஞ்சூரர்
நமண்டியிற் பள்ளிகளத்தனைபேர்களும் நல்லவரே. [கண்டீர்

புலிப்பாணி முனிவர் சாலத்திரட்டு 34-வது கவி.

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு
தயவான பள்ளியர்கள் மரணமானால்,
கோனேதானவர்கள் கையிலிரும்பினாலே
கொற்றவனே வளையமது போட்டிருப்பார்,
தேனேதானவர்களைத்தான் தகனம்பண்ணிச்
சேருகையில் வளையமுடன் வைப்பார்பாரு,
மானேதான் காடாற்று முன்னேயப்பா
வகையாகத்தானெடுத்து வைத்துக்கொள்ளே.

மனுஸ்மிருதி 10-வது அத்தியாயம் 52-வது சுலோகத்தில்

சண்டாளர்கள் இரும்பு பித்தளைகளாற் செய்யப்பட்ட பூஷணங்களை அணியவேண்டுமென்று சொல்லியிருக்கிறதினால், பள்ளிகள் தாழ்ந்த குலத்தினராதலால் புலிப்பாணி முனிவர் சொன்னதுபோல இரும்பினாற் செய்யப்பட்ட வளையத்தைப் பூண்டிருக்கிறார்கள்.

பறைசாற்றுகிறவர்களாகிய பறையரை மகா நீச்சமாகவெண்ணப்பட்டாலும் கடைசியாகப் பார்க்கையில் அவர்கள் ஜாம்புவந்தாகிய பரப்பிரமகுலமென்று பரிஷ்காரமாக விளங்குகின்றது, அதெப்படி யெனில் கம்ப இராமாயணம் யுத்தகாண்டம், மருத்துமலைப்படலம்-28-வது கவி.

"இன்னமருந்தொருநான்கும் பயோததியைக்கலக்கிய ஞான்றெழுந்ததேவர்
உன்னியமைந்தனர்மறைக்கு மெட்டாத பரஞ்சுடரிவ்வுலகமூன்றும்
நன்னிருதாளுள் ளடக்கிப்பொலிபோழ்தின் யான்முரசஞ்சாற்றும்வேளை
அன்னதினைச்சொவுதலுந்தொன் முனிவரவற்றிய லெறகறிவித்தாரால்"

இதிற் சொல்லியபடி ஆதியிற் றிருப்பாற்கடைந்த காலையிற் பிரமசொருபமான கடவுளாகிய ஜாம்புவந்தர் தான் முரசமாகிய பறையை சாற்றினதாகச் சொல்லியிருப்பது போல, அவர் சந்ததியாராகிய இவர்களும் பூர்வமுதல் பறையடித்து வருவதினால் ஜாம்புவந்தர் குலத்தாரென்று சொல்லிக் கொள்வதுமல்லாமல், அவர்களைக்குறித்து வித்துவான்களும் ஜாம்புவந்தர் குலத்தாரென்று பாடியு மிருக்கிறார்கள் பாடியும்வருகிறார்கள், இதிப்படியிருக்க அவர்களை நீச்சகுலஸ்தரென்று சொல்லுவதும் இகழ்வதும் மதியீனத்திலும் மதியீனமே. ஏனெனில் ஆதியில் தொழிலைப்பற்றி சாதியுண்டானதாக பாகவதத்திற் சொல்லி யிருக்கிறபடியால் பரப்பிர்மமாகிய கடவுள் பறையடித்ததினால் ஆதியில் பறையடித்தவர்களை பரப்பிர்மகோத்திரத்தாரென்று விளக்கும்பொருட்டுப்பறையரென்றுசொ

ல்ல நேரிட்டிருக்க அவர்களை நீச்சகுலத்தாரென்றெண்ணுகி
ற வர்களும் இகழ்கிறவர்களும் தங்களறியாமைத்தனத்தையும்
மூடத்தனத்தையுங் காட்டுகிறார்க ளல்லாமல் வேறல்ல.

அஞ்ஞானிகள் தாங்கள் வணங்குந் தெய்வங்களை ஒருபுரா
ணத்திலும் சாஸ்திரத்திலும் உயர்த்தியும் இன்னொரு புராணத்
திலும் சாஸ்திரத்திலும் உயர்த்தப்பட்ட தெய்வங்களைத் தாழ்
த்தியுமிருப்பதுபோல சாதிவிஷயத்திலும் செய்திருக்கிறார்க
ள். பொன்மலையைச்சார்ந்த காகங்களிடத்தில் பொன்
னிறங்காண்பது போலஇச்சாதிவித்தியாசத்தையும்தங்களபத்த
மார்கத்தையும் உணர்ந்துவருகிற ஐரோப்பியரைச் சார்ந்த கல்
விக்களஞ்சியங்களாகிய அஞ்ஞானிகள் சாதியனுசாரத்தையும்
அதினாலுண்டாயிருக்கிறதின்மைகளையும் நாடோறு மழிக்க மு
யலுகிறதை நாம் வர்த்தமானப் பத்திரிகைகள் வழியாகபார்த்து
வர, சில மனப்பிரமைகொண்ட ஐரோப்பிய ஞானிகளும் தெ
ளிவற்ற கிறீஸ்துவர்களும் சாதிவித்தியாச அனுசரணையைப்
பலப்படுத்தி வருகிறது இத்தேசத்தாருடைய பாவமென்றே
சொல்லவேண்டியதாயிருக்கிறது அப்படியாக இவர்கள் பலப்
படுத்திவந்தாலும் எந்த அஞ்ஞானியும் இவர்கள்வீட்டில் பிரா
ணம்போகிறதாயிருந்தாலும் சலமெடுக்கானே. அவர்களிப்படி
ச்செய்வது சாதியையனுசரிக்கிற கிறீஸ்துவர்களையும் ஈனசா
தியாரென்றெண்ணுவதினாலல்லோ? அவர்களிப்படி நிசிதப்ப
டுத்தியும் நாங்கள் மேல்சாதி அவர்கள்கீழ்சாதி என்று சொல்லி
க்கொள்வது இவர்களுக்கே யிழிவல்லவா? இதுகளுக்கெல்லாங்
காரணம் தெய்வசிநேகத்தைப்பற்றிய பிறசிநேகமில்லாமையினா
லல்லோ? இனிமேலாவது பிதாசுதனிஸ்பிரீத்துவாகிய திரியே
கசர்வேசுரன் ஒன்றாயிருப்பதுபோலவும் அவர்வேதமும் அவர்
போதகர்களும், அவர்கள்போதகமும், அவர்திருச்சபை யெங்கு
ம் ஓரேசிநேக ஐக்கியமாயிருப்பதுபோலவும் இத்தேசத்துக்கிறீ
ஸ்துவர்களும் ஓரே ஐக்கியமாகவும் பந்தனமாகவுமிருந்து புறம
தஸ்தருக்குத் தங்கள் சன்மார்க்கத்தினால் நன்னெறி காட்டு
வார்களென்று கோறிக்கை கொண்டிருக்கிறேன்.

டவ. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20

சமஸ்கிருத நிகண்டாகிய அமரத்திற் சொல்லப்பட்ட சூத்திரர்,

## அட்டவணை.

1. கணக்கன், சூத்திரஸ்திரீக்கும் வைசியனுக்கும் உற்பத்தி.
2. அம்பட்டன், வைசியஸ்திரிக்கும் பிராமணனுக்கும் உற்பத்தி.
3. உக்ரன், சூத்திரஸ்திரிக்கும் க்ஷத்திரியனுக்கும் உற்பத்தி.
4. மாகதன், க்ஷத்திரியஸ்திரிக்கும் வைசியனுக்கும் உற்பத்தி.
5. மாஹிஷ்யன், வைசியஸ்திரிக்கும் க்ஷத்திரியனுக்கும் உற்பத்தி.
6. சடத்திரு அல்லது க்ஷாத்தா, க்ஷத்திரியஸ்திரிக்கும் சூத்திரனுக்கும் உற்பத்தி.
7. சூதன், பிராமண ஸ்திரிக்கும் க்ஷத்திரியனுக்கும் உற்பத்தி.
8. வைதேகன், பிராமணஸ்திரிக்கும் வைசியனுக்கும் உற்பத்தி.
9. இரதக்காரன் அல்லது சிற்பி, கணக்கஸ்திரீக்கும் மாஹிஷ்யனுக்கும் உற்பத்தி
10. சண்டாளன், பிராமணஸ்திரிக்கும் சூத்திரனுக்கும் உற்பத்தி.

இதன்றியும் சூத்திரன்கீழ்

1. சிற்பியன்.
2. மாலாக்காரன்.
3. கும்பகாரன்.
4. பலகண்டன் அல்லது லேபகன்.
5. தந்துவாயன்.
6. சௌசிகன்.
7. சித்திரக்காரன்.
8. சஸ்திர மார்ஜன்.
9. பாதுகிருது.
10. லோககாரன்.
11. சொர்னகாரன்.
12. சாங்கிகன்.
13. சௌலப்பிகன்.
14. துவஷ்டா.
15. க்ஷவரகன்.
16. ரஸகன்.
17. சவுண்டிகன்.
18. அஜாஜீவி.
19. தேவாஜீவி.
20. சாம்பீரி.
21. நடன்
22. சாகுநிகன்.
23. கௌடிகன்.
24. சண்டாளன்.

இதிற்றொழிலைப்பற்றி சொல்லப்பட்ட வைகளிற் சிலதை விட்டிருக்கிறது.

திவாகரத்திற்சொல்லப்பட்ட சூத்திரர் அட்டவணை.

சூத்திராகிய வேளாளரின்கீழ்

1. மிலேச்சன்.
2. சோனகர்.
3. மருத்துவர்.
4. கைக்கோளர்.